# நிகரி

NIHARI

Registred as a Newspaper

வார இதழ்
இதழ் 2 - பெப்ரவரி 03.2002
விலை ரூபா 12/=


"மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வமே" - பாரதி

**ஜே.வி.பிப் புரட்சி!**

*கொடியிலே சிவப்பும் கொள்கையிலே மார்க்சும்*
*முடியிலே சேயும் முடிந்துவிட்டால் - நொடியிலே*
*வரட்சியது ஓடி வளர்யுத்தம் சமாதானம்*
*புரட்சியென ஆகிவிடுமோ போம்!*

– ஈழமோகம்


**தமிழ்ச்செல்வனுடன் நேர்காணல்** 3



**கூட்டமைப்பு திசைமாறுமோ...?** 5



**யாழ்: தொடரும் மருத்துவத்தடை** 6



**பெண்களின் வாக்குரிமைப் போராட்டத்திற்கு வயது 75** 10



**வேலிகளைக் கடக்கிறது காற்று** viii




# தோற்றுத்தான் போவோமா?



ஜே.வி.பி.யின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

**போர்** நிறுத்தத்தை நிரந்தரமாக்குவதில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. போர் நிறுத்தம் நீண்ட காலத்துக்கு நீடிக்கின்ற படசத்தில் நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளது என அரசாங்கம் கருதுவதாக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

போர் நிறுத்தம் நிரந்தரமாகச் செயல்படத் தொடங்கியதும் போர் நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு இந்தியாவின் அங்கீகாரத்துடன் சர்வதேச மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளைக் கொண்ட உயர் மட்டக்குழு வொன்றை அமைப்பதற்கான யோசனையை நோர்வே முன்வைத்திருக்கிறதாம்.

மோதலில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் யோசனைகளின் அடிப்படையில் நோர்வேயினால் தயாரிக்கப்படும் போர் நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை பெப்ரவரி 24 ஆம் திகதிக்கு முன்னர் கைச்சாத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லப்படும் அதே சமயம் இதைக் குழப்புவதற்கான முயற்சிகளும் மறுபுறத்தில் நடைபெற்று வருகின்றன.

சமாதான முயற்சிகளுக்கு எதிரான சில நடவடிக்கைகள் வெளிப்படையாகச் சிலரால் பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இதே சமயம் இந்த நடவடிக்கைகளுக்கு சில சக்திகள் பின்னணியிலிருந்து செயல்பட்டு வருவதாகவும் இதற்கு ஆட்சி அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சக்திகளும் காரணமாக இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களுக்கு எதிராக தென்னிலங்கை எங்கும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பி. தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது. தமிழ் மக்களுக்கும் இந்த சமாதானப் பேச்சு ஆபத்தானது என்று ஜே.வி.பி. சுவரொட்டி துண்டுப்பிரசுரங்கள் விளம்பரங்கள் வெளியிட்டிருக்கிறது. நகரம், நகரமாகவும் ஊர் ஊராகவும் சுவரொட்டி விளம்பரங்கள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருப்பதுடன் ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் ஊர்வலங்களையும் ஜே.வி.பி. நடத்தி வருகிறது.


சமாதானப் பேச்சுக்களைக் குழப்பும் நோக்கில் ஜே.வி.பி. இனரீதியான செயற்பாடுகளில் இறங்கி நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் குழப்ப முற்படுவதாக அரசாங்கம் குற்றம்சாட்டி இருந்தது.

இதே சமயம் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற விருக்கும் சமாதானப் பேச்சுகளுக்கு எதிராக் நாடு தழுவிய ரீதியில் பெரும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்புகள் சில தீர்மானித்துள்ளனர்.

ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவான பல்கலைக்கழக மாணவர் அமைப்பே இவ்வாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துதற்கு திட்டமிட்டுள்ளதாக அறிவித்திருக்கின்றன.

அரசு விடுதலைப் புலிகள் பேச்சு நாட்டின் பெரும்பான்மை இன மக்களுக்கு எதிரானதென்றும் இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் இதற்காக இனிவரும் நாட்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...



**வன்னியில் மிதிவெடி மீட்கும் போராளி**

# இனப்பிரச்சினை தீராமல் கல்வியில் முன்னேற்றம் காண்பது சிரமம்!

## கிளிநொச்சி-மகாவித்தியாலய அதிபர் என்.செல்வரட்ணம்

-கனகரவி

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திற்குச் சென்றிருந்த வேளை அங்கு "உண்மை வெற்றி" படை நடவடிக்கை மூலம் கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய போது ஏற்பட்ட மோதலிலும், மீண்டும் கிளி-நொச்சியைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை ஆகியவற்றின் போதும் கிளிநொச்சி மாவட்டம் போரின் கொடுமைகளை நிறையவே அனுபவித்தது. இதன் வெளிப்பாடுகளை முழுமையாகக் காணக் கூடிய பிரதேசமாக அது இருக்கிறது.

இந்த மாவட்டத்தின் பிரதானமான பாடசாலையான கிளி/தமிழ் மத்திய கல்லூரியின் அதிபர் என். செல்வரட்ணத்தை எமது செய்தியாளர் கனகரவி சந்தித்தார். போரின் கொடுமையினை படம் பிடித்துக் காட்டுவது போல அங்குள்ள உண்மை நிலைவரத்தினை விளக்கினார்.

அதனை இவ்வாறு தருகிறோம்.

***போரின் பாதிப்புகளை தன்னகத்தே வைத்திருக்கும் இந்தக் கல்லூரியின் நிலைமைகள் பற்றிக் கூறுவீர்களா?***

நான் இந்தப் பாடசாலையின் அதிபராக ஒரு வருடமாகவே கடமையாற்றுகின்றேன். இங்கு கட்டிடங்கள் அனைத்துமே சேதமாகியுள்ளன. கட்டிடங்களின் சுவர்கள் வெடித்த நிலையில் உள்ளதால் வகுப்புகளை ஒழுங்காக நடத்த முடியாமல் உள்ளது. இருந்தாலும் கல்விக் கழகத்தினரதும், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் மேற்கொண்ட திருத்த வேலைகளினாலும் தற்காலிக கொட்டில்களில் கல்லூரியை இயக்கிக் கொண்டு இருக்கின்றோம்.

***இந்தப் கல்லூரியில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இங்கு கற்கும் மாணவர்களுக்கு போதியளவான வசதிகள் இருக்கின்றனவா?***

எங்களுக்கு போதிய இடவசதி இல்லை, தளபாட வசதியில்லை, அத்துடன் ஆய்வு கூட வசதிகளும் இல்லை. தற்காலிகமாக வகுப்-புறைகளிலேயே ஆய்வு கூடங்களை வைத்து கற்பிக்கின்றோம். தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்கள் தங்கிநின்று கற்பதற்கான விடுதி வசதிகள் எதுவுமில்லை. இதனால் நீண்டதுாரங்களுக்கு அப்பாலிருந்து மிதிவண்டியில் தினமும் வந்து கற்கின்றனர். இதனால் அவர்கள் பெரும் சிரமமடைகின்றனர். அவர்களுக்கான இவ்வாறான வசதிகள் இல்லையென்பது பெரும் குறையாக உள்ளது.


***போர் நடைபெற்ற போது பாடசாலையின் பெரும்பாலான கட்டிடங்கள் இடிந்து போயிருக்கின்றன. இவற்றை புனரமைக்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லையா?***

கட்டிடங்களை புனரமைப்-பதற்குத் தேவையான கட்டுமானப் பொ[illegible]கள் முக்கியமாக சீமெந்து, பே[illegible]றைப் பெறமுடியாத நி[illegible] இதனால் தொடர்ந்தும் ஓலைக் கொட்டகைகளிலேயே கல்லூரியை இயக்க வேண்டிய-தாகவுள்ளது.

***இந்தக் கல்லூரியின் வளவிற்குள் படையினர் நிலை கொண்டிருக்கும் போது அவர்களால் வைக்கப்பட்ட வெடிபொருட்கள் அவர்களினால் அகற்றப்பட்னவா?***

வெடி பொருட்கள் இருந்தன. அவற்றை அகற்றுவதற்கு மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரே பணியாற்றி வருகின்றனர். குறிப்பிட்ட எல்லைக்குள் அவர்களால் வெடி பொருட்கள் அகற்றப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதனால் அச்சமின்றி அந்தப் பகுதிக்குள் கல்லூரியை நடத்துகின்றோம்.

***மாணவர்கள் வெடிபொருட்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்களா?***



வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிக்குள் கல்லூரி இயங்குவதால் மாணவர்கள் பாதிக்கப்படவில்லை. ஆனால் வெளியே பிற இடங்களில் மாணவர்கள் பல சம்பவங்களில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

***நெருக்கடிகள் நிறைந்துள்ள இந்தப் பிரதேச மாணவர்களின் கல்வி நிலை எப்படியுள்ளது?***



கல்லூரியில் கற்கும் மாணவர்களுக்கு பாடங்களை கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறை, கலைப் பகுதிக்குக் கூட ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு தொண்டராசிரியர்களே கற்பித்து உதவுகின்றனர். அவர்களுக்கு நிரந்தர நியமனம் இல்லாதபடியால் அவர்களும் தொடர்ந்து தங்களது சேவையினைத் திறம்படச் செய்வதில் சிரமப்படுகின்றனர்.

இவ்வாறான நெருக்கடிகள் இருந்தாலும் ஆசிரியர்களின் கடும் முயற்சியினால் மாணவர்கள் தமது கல்வி நிலையினை உயர்த்திக் கொண்டுள்ளனர்.

***அனைத்துலக தொண்டர் நிறுவனங்கள், உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் என்பன கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளனவா?***

இல்லை... உள்ளூர் தொண்டர் நிறுவனம் என்றல்ல, பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிறையவே உதவி செய்துள்ளது. வேறு எந்தத் தொண்டர் நிறுவனமும் இது வரை உதவிகள் எதனையும் செய்யவில்லை.

***இந்தக் கல்லூரி நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருந்த காலத்திலும் வந்து பார்த்துள்ளேன். அதே போன்று இயங்க வேண்டுமென்றால் புதிய அரசு என்ன செய்ய வேண்டுமென்று கூறுவீர்களா?***

இந்தக் கல்லூரி மீண்டும் நல்ல நிலையில் இயங்க வேண்டுமென்று சொன்னால். எங்களது பிரச்சினைகள் யாவும் தீர வேண்டும் போலதான் இருக்கின்றது. ஏனென்றால் எமக்குத் தேவையான பொருட்கள் இங்கு வருவதில் பல சிரமங்கள் உள்ளன கணனி போன்ற பொருட்களை எமது மாணவர்கள் கண்டு, அதனைக் கற்பதற்கு வாய்ப்பில்லை. இது போன்ற பல கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்ல அனைத்து விடயங்களும் இயல்பு நிலைக்கு வரவேண்டுமெனில் இனப்பிரச்சினை தீர வேண்டும். அதற்கு புதிய அரசு முயற்சிக்க வேண்டும்.

## அச்சுறுத்தலுக்கு அனுதாபங்கள்!

புதிய அரசாங்கம் பதவியேற்ற பிறகு அடக்கி வாசித்து வந்த ஜனாதிபதி அவர்கள் கடந்த வாரம் புத்தளத்தில் நடைபெற்ற சி.ல.சு.க புனரமைப்புக் கூட்டத்தில் தெரிவித்த கருத்து, அவரது 'அடக்கம்" ஒன்றும் மக்களின் ஜனநாயக தெரிவை மதித்ததால் ஏற்பட்டதல்ல என்பதை வெளிப்படுத்தி உள்ளது.

ஜே.ஆரினால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரத்தில் இருபத்தைந்து வீதத்தைக் கூட நான் பயன்படுத்தவில்லை என்று அவர் அக்கூட்டத்தில் அறிவித்திருந்ததாக செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

முன்பும் ஒருமுறை, மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது 'எனக்கும் பிரேமதாச போல செயற்பட தெரியாமலில்லை, ஆயினும் நான் அப்படி செயற்பட விரும்பவில்லை' என்று தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புக்கள், ஜனாதிபதி முறையை ஒழித்துக் கட்ட விரும்புகிறதாகக் கூறும் ஒரு தலைவரிடம் இருந்து வரக்கூடியவை அல்ல என்பதைச் சொல்லித் தெரியப்படுத்த வேண்டியதில்லை.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இருபத்தைந்து வீத அதிகாரங்களைப் பயன்படுத்திய போதே இந்த நாடு பட்ட அவஸ்தையை உலகே அறியும். எழுபத்தைந்து வீதத்தையும் பயன்படுத்தினால் அதுவும் இன்றைய ஜனாதிபதி பயன்படுத்தினால் எப்படி இருக்கும் என்பது ஒன்றும் ஊகிக்க முடியாததல்ல.

இந்த அறிவிப்புக்கள் ஜனாதிபதியின் ஆற்றாமை -தோல்வியால் ஏற்பட்ட ஆற்றாமை - காரணமாகக் கூறப்பட்ட வெறும் வார்த்தைகள் என்று புறக்கணித்து விடக்கூடியவை அல்ல. அவை மிகத் தெளிவாக ஜனநாயகத்திற்கும் புதிய அரசாங்கத்துக்கும் விடப்பட்ட மிரட்டல்!

தேர்தலுக்கு முன்பே அகப்பை என் கையில் தான் என்று சொன்னவர் அவர்.

புதிய அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைகளையும் அது ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும் அரசியல் பலவீனத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் என்றால் தான் எந்த நடவடிக்கைக்கும் தயங்க மாட்டேன் என்பதை இதன் மூலம் அவர் பிரகடனப்படுத்தி இருக்கிறார்.

ஆனால் பரிதாபம். மிரட்டல்களால் முழு நாட்டையும் நீண்ட நாளைக்கு அச்சுறுத்தி வைத்திருக்க முடியாது என்பது அவருக்குப் புரியவில்லை. மக்களுக்கு ஏகோபித்த ஆதரவு இருப்பதாக அவருக்கு ஆலோசனை கூறி வந்த கூட்டம் இப்போது மெல்ல மெல்ல 'அறுநீர்ப்பறவை" போல கழன்று கொண்டிருக்கிறது.

வரலாற்றில் குப்பைத் தொட்டியை நிரப்பும் நபர்களுள் தானும் ஒருவராகப் போகப்போவதற்கான ஆயத்தங்களில் ஜனாதிபதி - பட்டும் தெளியாமல் - ஈடுபட்டு வருகிறார் என்பதை மட்டுமே இவை வெளிப்படுத்துகின்றன.

அவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை அனுப்பி வைப்போமாக!

## புரிந்து கொண்டதற்கு நன்றி!

கொழும்பு வீதியில் இருந்த சோதனைச் சாவடிகள் பல திடீரென்று காணாமல் போய் விட்டிருக்கின்றன.

புதிய அரசாங்கத்தின் ஆட்சியேற்புடன் நடந்த இந்த மாற்றம் பரவலான வரவேற்பைப் பெற்றிருக்கின்றது. வீதியில் போவோர்களிடமிருந்து.

வீதி மறியல் 'சோதனைச் சாவடிகளில்" சோதனை செய்து பிடித்த 'புலிகளை" விட புலிகளாக்கப்பட்டவர்களின் தொகையே அதிகம்.

பூசா முதல் களுத்துறை வரையான சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளுக்கு பல வருடங்களாக எந்தக் குற்றத்தையும் சுமத்த முடியாமல் பொலிஸ் தரப்பு தடுமாறுவதிலிருந்தே இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.


எல்லாவிதமான பாதுகாப்பு தடைமுகாம்களையும் மீறித்தான் கடந்த வருடங்களில் பல்வேறு தாக்குதல்கள் கொழும்பையும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் புலிகளால் நடத்தப்பட்டன.

சோதனைச் சாவடிகளை மீறித்தான் போதைவஸ்து முதல் கசிப்பு, சாராயம் என்பன போய் வருகின்றன.

இந்தச் சோதனைச் சாவடிகள் சாதித்ததெல்லாம் அப்பாவிகளை மிரட்டியது, அகௌரவப்படுத்தியது, அவமதித்தது, பாலியல் துன்புறுத்தல்கள், வல்லுறவுகளில் ஈடுபடுத்தியது என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இதை இன்றைய புதிய அரசாங்கம் புரிந்து கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. பயங்கரவாதம் என்றால் என்ன என்பதைப் பற்றி முதலில் தெளிவான ஒரு நிலைப்பாட்டைப் பாதுகாப்புத் தரப்பு விளங்கிக் கொள்ள வேண்டும். பயங்கரவாதத்தை தடுப்பது என்ற பெயரால் அதை இன்னும் அதிகமாக வளர்த்து விட்டது. சரியாகச் சொல்வதானால் அதை நடைமுறைப்படுத்தியதும் தாங்கள் தான் என்பதை அவர்கள் அப்போது தான் புரிந்து கொள்வார்கள்.

அரசாங்கம் இந்த முயற்சியில் ஈடுபட்டால் அது மேலும் பயனுள்ள ஒரு பணியைச் செய்ததாக அமையும்.



*தன்னுடைய இயல்பான நடிப்பின் மூலம் பலரையும் கவர்ந்த சொக்கலிங்க பாகவதர் ஜனவரி 3ம் திகதியன்று தனது 92வது வயதில் காலமானார்.*

*சொக்கலிங்க பாகவதரின் சொந்த ஊர் கும்பகோணம். சென்னை பட்டிப்பாக்கத்தில் வசித்து வந்த அவருக்கு 5 மகன்களும் ஒரு மகளும் இருக்கின்றனர். அவருடைய துணைவி ஏற்கெனவே காலமாகிவிட்டார்.*

*1937 ஆம் ஆண்டிலேயே "ரம்மையில் காதல்" படத்தில் நடித்ததற்காகத் தங்கப்பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின் பாலுமகேந்திராவின் வீடு, சந்தியாராகம் போன்ற படங்களில் நடித்த பின்பே பரவலாக அறியப்பட்டவரானார். இந்தியன், ஜென்டில்மன் உட்பட இன்னும் சில படங்களில் நடித்தவர். வீடு படத்தில் இவரின் சிறப்பான நடிப்பைக் கௌரவிக்கும் வகையில் இந்திய மத்திய அரசு தேசிய விருது வழங்கியது. நடிகராகப் புகழ்பெற்ற பின்னும் எளிய முறையிலேயே தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். அமரரின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆறாம் திணைக்கு அவர் வழங்கிய செவ்வியில் இருந்து சில பகுதிகள்.-*

# வாழ்நாள் நடிகரை இழந்தது கலையுலகம்!

நான் சிறுவயதிலேயே நன்றாகப் பாடுவேன். என் குரல் இனிமையைக் கேட்டு 1921 இல் காளி என். இரத்தினம் அவர்கள் என்னைப் பற்றி அறிந்து என் வீட்டிற்கே வந்து பாடச் சொல்லிக் கேட்டார். என் பாட்டைக் கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டட அவர், தான் இருக்கும் 'மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி' யில் சேர்ந்து கொள்ளச் சொல்லி என்னையும் கூப்பிட்டார். எனக்கு ரொம்பவும் சந்தோஷமாகப் போச்சு. என் பெற்றோர்களும் சந்தோஷமாகச் சம்மதித்தார்கள். அன்றைக்கு மறுநாளே திருப்பாப்புலியூர் போய் சேர்ந்தோம். நான் போய் சேர்ந்த அன்று 'சத்தியவான் சாவித்திரி' நாடகம் வைத்திருந்தார்கள். அந்த நாடகத்தில் எமன் தர்பாரில் நான் புண்ணிய புருஷராக வேடம் தரித்துக் 'காக்க வேணும் ராமா' எனும் பாட்டை இனிமையான குரலில் பக்திப் பரவசத்தோடு பாடினேன். அந்தப் பாட்டைக் கேட்டு நாடகம் பார்க்க வந்த ஜனங்கள் யாவரும் கொட்டகையே அதிரும்படி கரகோஷம் செய்தார்கள். அந்த கரகோஷத்தைக் கேட்டு நான் ஆனந்தப் பரவசத்தில் மெய் மறந்து போனேன். இதில் காளி என்.இரத்தினம் மிகுந்த களிப்படைந்ததார். உடனே கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு ஐந்து ரூபாய் எனக்கு சம்பளம் போடவும் சொன்னார்.

ஒரு மாசத்துக்கான சம்பளம் அந்த ஐந்து ரூபாய். அந்தக் காலத்தில் அஞ்சு ரூபாய்க்கு அவ்வளவு மதிப்பு

எஸ்.எம்.சச்சிதானந்தம் பிள்ளை தான் அந்தக் கம்பெனியுடைய முதலாளி. காளி என் இரத்தினமும் அந்தக் குழுவில் ஒரு நடிகர் தான்.

திருப்பாப்புலியூர், பாண்டிச்சேரியில் முகாமிட்டுக் கடைசியாகச் சென்னை வந்து சேர்ந்தோம். இங்கு வந்து ஒற்றைவாடைத் தியேட்டரில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தோம். அதற்குள் 'வால' பார்ட்டும், நடனப் பயிற்சியும் தான் நர்ன் கற்றுக் கொண்டது. எனக்குப் பெரிய வேஷங்கள் போட்டு நாடகத்தில் முக்கிய கதாபாத்திரம் ஏற்று நடிக்க வேண்டுமென்ற பேரவா. அதற்கு இந்தக் கம்பெனியில் இடமில்லை என்று அறிந்து அந்தக் கம்பெனியை விட்டு ஆறே மாதத்தில் விலகி விட்டேன்.

நான் விலகி வந்து விட்ட செய்தி கேட்டு 'எலும்பில்லா மானிடன்' எஸ்.சாமிநாதன் என்னைக் கூட்டிக் கொண்டு போய் ராணிப்பேட்டையில் தன் குழுவினரோ சேர்த்துக் கொண்டு நல்ல வேஷங்கள் கொடுத்து நடிக்கச் சொன்னார். பிறகு 1922 ல் தஞ்சை தபேலா டி.ஆர்.நாராயணசாமி நாயுடு மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபையில் நடிப்பதற்குப் தேடி வந்து கூப்பிட்டார். நானும் போய்விட்டேன்.

அதன் பிறகான காலப்பகுதியில் தஞ்சாவூரல் நாடகம் முடித்துக் கொண்டு என்னுடைய சொந்த ஊரும், எனது சாதிக்காரர்கள் நிறைந்த ஊருமான கும்பகோணத்துக்கு வந்தோம். நோட்டீஸில் என் பெயரை 'விஸ்திலத் திலகம், சங்கீத களஞ்சியம், மாஸ்டர் கே.ஏ.சொக்கலிங்கம் என்று விளம்பரம் கொடுத்தார்கள். எங்கள் கம்பெனிக்கு நல்ல வசூலும், நல்ல பெயரும் கிடைத்தது.

என்னோடு நாடக வாழ்க்கையில் சேர்ந்து நடித்துப் பின்னாளில் பிரபலமானவர்கள் நிறையப் பேர் உண்டு. குறிப்பாக எம்.ஜி.ஆர்., எம்.ஜி.சக்ரபாணி, எம்கே.தியாகராஜ பாகவதர். விகடம் எஸ்.பக்கிரிசாமி, பி.யு.சின்னப்பா. இப்படி நிறையப் பேர் உண்டு.

எனக்கு 1934 ஆம் ஆண்டு 'பிராட்காஸ்ட் ரிக்கார்டிங் கம்பெனி' யில் சீதா கல்யாணம் செட்டில் ஜனகனாகவும், தனிப்பாடல் ஆறு ரிக்கார்டும் பாடியதற்காக ரிக்காட்டிங் கம்பெனி தான் பாகவதன் பட்டம் கொடுத்தது

நான் சினிமா உலகிற்கு நடிக்க வந்தது எஸ்.சவுந்தரராஜ ஐயங்கார் படத்தில் நடிக்க ஆள் செலக்‌ஷனுக்கு வந்த போது அவரே என்னைக் கூப்பிட்டு அனுப்பி அவர் எடுத்த 'சம்பூர்ண மகாபாரதம்' படத்தில் நடிக்கச் சொன்னார். நானும் அவர் சொன்னதை ஏற்று ஶ்ரீகிருஷ்ணன் வேஷம் போட்டு நடித்தேன்.

என் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்த படம் என்று சொன்னால் 1989ம் ஆண்டு பாலு மகேந்திரா இயக்கிய 'வீடு' என்ற திரைப்படத்தைச் சொல்லலாம். வீடு படத்தில் சிறப்பாக நடித்ததிற்கு மத்திய அரசு தேசிய விருது வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இவற்றினைவிட தமிழ் சினிப்படங்களாக ஜென்டில்மேன், இந்தியன், சதிலீலாவதி போன்ற படங்களில் நடித்திருக்கிறேன்.

தொலைக்காட்சித் தொடர்களோடு சேர்த்து ஒரு ஐம்பது படங்களில் நடித்திருக்கிறேன். அது அல்லாமல் ஒரு ஆங்கிலப் படத்திலும் கூட மீனவர் தலைவனாக நடித்திருக்கிறேன். அந்தப் படத்தை இத்தாலியில் இருந்து இங்கே வந்து எடுத்தார்கள்.

எனது 90 வயதில் கலைமாமணி விருதும், வீடும் கிடைத்தது கலைஞர் கையால் எனக்கு மகிழ்ச்சியே.

○



*ஒஸ்ரேலியாவின் மிக முக்கியமான எழுத்தாளர் ஆல்ப் டெய்லர் (Alf Taylor). ஆஸ்திரேலிய அபார்ஜினல்ஸ் (Aborginals) பழங்குடிகள் இனத்தைச் சேர்ந்த ஆல்ப் டெய்லர் அபார்ஜின எழுத்தாளர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்த வருபவர். ஒஸ்ரேலியாவின் பெர்த்தில் பிறந்த இவர் Long tome Now (2001), Winds (1994) மற்றும் Singer Song writter (1992) ஆகிய மூன்று நூல்களை எழுதியுள்ளார். God, the Devil and me என்ற தலைப்பில் தன்னுடைய குழந்தைப் பருவத்தைப் பற்றிய சுயசரிதையை எழுதிக் கொண்டிருப்பவர். இவர் தன்னுடைய தாயாரின் வாழ்க்கை வரலாற்றை எழுத உள்ளதாகவும் தெரிவிக்கிறார். அவருடனான ஆறாம்திணையின் செவ்வியில் இருந்து சில பகுதிகள்*

# எங்களையும் எங்கள் எழுத்தையும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை!

நான் அபார்ஜினல்ஸ் இனத்தைச் சேர்ந்தவன். பள்ளிப் படிப்பு வரை தான் படித்திருக்கிறேன். முதலில் கொஞ்சக் காலம் ஒஸ்ரேலிய இராணுவத்தில் பணியாற்றினேன். இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது எழுத ஆரம்பித்தேன்.

என்னுடைய கவிதைகளைப் படித்த நண்பர் ஒருவர் என்னை மேலும் மேலும் எழுதுமாறு தூண்டினார். அதனால் நான் என்னுடைய இராணுவ வேலையிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று முழு நேர எழுத்தாளராக மாறி விட்டேன்.

இங்கு உங்களுக்கெல்லாம் என்னவோ ஒஸ்ரேலியா சுபீட்சமான நாடு என்றது போல் ஒரு தோற்றம் நிலவுகிறது. உண்மையில் ஒஸ்ரேலிய மிகவும் கன்சர்வேட்டிவ்வான நாடு. அதிலும் உலகமயமாகக்கலுக்குப் பின் அபார்ஜினஸ் பழங்குடி மக்களின் வாழ்க்கை ரொம்பவும் கேள்விக் குறியாக மாறி விட்டது.

**அபார்ஜினல்ஸ் மக்களை ஒஸ்ரேலிய வெள்ளையர்கள் எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைச் சொன்னால் மட்டும் போதும் என்று** நினைக்கிறேன். அங்குள்ள தேவாலங்களில் வெள்ளையர்கள் வணங்கி முடித்து வெளியே வந்த பிறகு தான் அபார்ஜினல்ஸ் உள்ளேயே செல்ல முடியும். அந்தளவிற்கு நிறவெறி அங்கு தலை விரித்தாடுகிறது.

அபார்ஜினல்ஸ் வாழ்க்கையே இந்த மாதிரி இருக்கையில், அவர்களுடைய எழுத்துக்கள் என்ன மாதிரி அங்கு உள்வாங்கிக் கொள்ளப்படுகிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அங்கு எங்கள் எழுத்துக்கு எந்த ஒரு முன்னுரிமையையும் அவர்கள் அளிப்பதில்லை. நானே ஒரு புத்தகம் போட்ட போது கூட அதைப் படிக்காமல் இவனும் ஏதோ எழுதுகிறான் என்ற அளவிலேயே **அவர்கள் கிண்டலாகப் பார்த்தார்கள். அங்குள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் வெள்ளை இலக்கியவாதிகள் எங்களையும் எங்கள் எழுத்தையும் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.**

**மாணவர்கள் எங்கள் எழுத்துக்**களைப் படிக்கிறார்கள். ஆனால் அது பற்றி விவாதிப்பதில்லை. ஆனால் இந்தியாவையே எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் எங்களுடைய எழுத்துக்களை எங்களை விட அதிகமாகப் படித்திருக்கிறீர்கள். எங்களிடம் விவாதம் செய்கிறீர்கள். அது மாதிரி அங்கு செய்யவில்லை. எனக்கு இந்திய மாணவர்கள் மற்றும் இலக்கியவாதிகளை ரொம்பவும் பிடித்து விட்டது.

இது என்னுடைய இந்தியாவிற்கான முதல் வருகை. இந்தியாவிற்கு வருவதற்கு முன்னால் இந்தியக் கலாசாரம் பற்றியெல்லாம் நான் மிக அதிகமாகப் படித்ததில்லை. **ஆனால் இங்கு வந்த பிறகு இந்தக் கலாசாரத்தைப் பற்றி நிறையப் படிக்க வேண்டும் என்று தோன்றியிருக்கிறது. நிறையப் படிப்பேன். அடுத்து நான் இங்கு எந்த இடத்தையும் விஷேசமாகப் பார்ப்பதற்கு வரவில்லை. நான் இங்குள்ள மக்களைப் பார்ப்பதற்காகவே வந்துள்ளேன். இந்தக் கலாசாரத்தை உள்வாங்கிக் கொள்வதற்காக வந்துள்ளேன்.**

ஒஸ்ரேலியா திரும்பியவுடன் இந்திய - ஒஸ்ரேலியா இடையிலான கலாசாரப் புரிதல்கள் பற்றி ஒரு நாவல் எழுத வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறேன் என்று கூறினார்.

செப்டெம்பர் 11 நிகழ்வை அபார்ஜினல்ஸ் எப்படிப் பார்க்கிறார்கள் என்று கேட்டபோது,

இந்தக் கேள்விக்குப் பதிலளித்தால் என்னுடைய ஒஸ்ரேலிய அரசு என்னை நாட்டுக்குள் நுழையவே விட மாட்டார்கள். தயவு செய்து இந்தக் கேள்விக்கு மட்டும் என்னால் பதிலளிக்க முடியாது. நான் தான் முதலிலேயே சொன்னேனே மீடியாக்காரர்களைப் பாத்தாலே எனக்குக் கொஞ்சமல்ல ரொம்பவே பயம்.

என்று கூறியதோடு,

எனக்கு மொத்தம் எட்டு குழந்தைகள் பிறந்தன. அதில் ஐந்து குழந்தைகள் இறந்து விட்டன. என் மனைவியை எட்டு வருடங்களுக்கு முன்பு விவாகரத்து செய்து விட்டேன். இப்போது எனக்கான ஜோடியைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

ஏன் இந்தியாவில் நல்ல பெண்ணாக எனக்காகப் பாருங்களேன்.

**இந்தியாவில் தனக்கு ஒரு நல்ல பெண்ணைப் பார்க்கச் சொல்லி நக்கலடித்து விட்டு கடகடவெனச் சிரிக்கிறார் ஆல்ப் டெய்லர். அந்தச் சிரிப்பிற்குப் பின்னால் ஆயிரமாயிரம் அபார்ஜினல்ஸ்களுடைய சோகம் மறைந்து கிடப்பதை உணர முடிந்தது**

○

## என் தாய்

*என் தாயிடம்*
*பேச நான் விரும்புகிறேன்*
*அவளிம் சொல்ல வேண்டும்*
*திரும்பவும்*
*அவளை நான்*
*நேசிக்கிறேனென்று!*
*ஒரு சிறுகுழந்தை போல*
*இன்று நான் என்னுள் அழுது*
*கொண்டிருந்த போது*
*அவளது வாழ்க்கை*
*எனக்குப் புரிகிறது*
*அவளது தாய் தந்தையிடமிருந்து*
*அவள் பிரிக்கப்பட்டாள்*
*உனக்குத் தெரியுமா!*
*நானும் அதே போலத்தான்*
*பிரிக்கப்பட்டேன்*
*இந்த அரசாங்கமும்*
*அவர்களது வெள்ளை மூளையும்*
*எங்கள் இனத்தை*
*பெரும் அவநம்பிகையுடனும்*
*எந்த அக்கறையுமின்றியே*
*அணுகுகிறது*
*என் இதயத்தினுள்புதைந்த*
*அந்த ஆழமான சோகம்*
*என்னிடம் சொன்னது*
*உன்னுடைய ஆத்மா அழிவையும்*
*அதிகாரத்தையும் கடந்து*
*ஒரு காலத்தில் கௌரவமாக*
*வாழ்ந்த இனத்தைச் சேர்ந்தது*
*என் தாயே! நீபோய் வா!*
*நான் இங்கு நலமே!*
*வழமைக்கு மாறாக*
*இங்கு ஏதும் நடந்து விடுவதில்லை*
*காவல் துறையில் கொலை*
*அவ்வளவு தான்!*
*எப்போதும் போல*
*யாரும் எதையுட்*
*சட்டை செய்வதில்லை*
*யாராவது வந்து*
*விளக்கேற்ற மாட்டார்கள*
*என நான் ஏங்குகிறே.*
*இங்கு ஒரேகும்மிருட்ட*
*இருக்கிற*
*என்னால் பாதையைக் காண*
*முடியவில்லை...*

# இருட்டறையின் சாளரங்களை மெல்லத் திறக்க முயலும்

## ஏ.ஜே.கனகரட்னா

- ரஞ்சகுமார்




அடுத்த தலைமுறையினராகிய எமக்கு "மத்து" வெளிவந்த காலத்திலேயே படிக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. அதில் இடம் பெற்றுள்ள பதினொரு கட்டுரைகளும் வெவ்வேறான பதினொரு நூல்கள் பற்றிப் பேசுகின்றன. பதினொரு நூல்களினதும் சாரத்தைப் பிழிந்து சிலதுளிகளில் செறிவாக்கி சொட்டச் செய்வதுடன், அந்நூல்கள் மீதான தமது எதிர் வினையையும் நுட்பமாக அதனுள் உட்செலுத்தும் ரசவாசத்தை நிகழ்த்தியிருக்கிறார். ஏ.ஜே. நூல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு துறை சார்ந்தவை. பொருளியல், சூழலியல், உளவியல், மொழி வரலாற்றியல், அரசியல் விஞ்ஞானம், அரசியலமைப்பு, இலக்கியம், மருத்துவம், திரைப்படக் கலை, புராணவியல், மானிடவியல் எனப் பலதரப்பட்ட துறைகளைச் சேர்ந்தவை. "மத்து" முதலாம் பதிப்பு வெளிவந்து 30.ஆண்டுகளின் பின்னரும் அது கடைந்த விடயங்களின் பயன் மதிப்பு இன்னும் குன்றாதிருப்பது "மத்து" வின் மீள் பிரசுரத்துக்கு காலாக இருந்திருக்கின்றது.

ஏ.ஜே.கனகரட்னா தமிழாக்கிய வசன கவிதை ஒன்றுடன் இச்சிறு குறிப்பை ஆரம்பித்தல் சாலவும் பொருந்தும்.

**நல்லாய்க் குடி**

*குடிவெறியிலேயே ஒருவன் எப்பொழுதும் இருக்க வேண்டும். அது ஒன்றே முக்கியம், அதுவே எமது இன்றியமையாத் தேவை. இடையறாதுகுடிபோதையில் இரு- உன் தோள்களை நொருக்கி உன்னை நசுக்கும் காலனின் பொல்லாச் சுமையை உணராதிருப்பதற்கு.*

*போதைப் பொருள் எது? மது, கவிதை, அல்லது ஒழுக்கம் அது உன் விருப்பம். ஆனால்குடித்து வெறி.*

*எப்போதாவது ஒரு சமயம், ஒரு மாளிகையின் படிக்கட்டுக்களில், சிறு குழியில் பச்சைப் பசேலென வளர்ந்திருக்கும் புல்லில், உன் அறையின் மந்தாரத் தனிமையில் வெறி தணிந்து நீ விழித்தெழுகையில் காற்றை, அலையை, விண்மீனை, கடிகாரத்தை விரைந்து ஓடுபவற்றை, முனகுபவற்றை, உருள்பவற்றை, பாடுபவற்றை, பேசுபவற்றை ""நேரமென்ன/"" என்று கேள். ""குடித்து வெறிப்பதற்கு நேரமாகி விட்டது. காலனால் பலியிடப்பட்ட அடிமைகள் ஆகாத பொருட்டு குடித்து வெறியுங்கள். ஓய்வெடுப்பதற்கு தெரியாது குடித்து வெறியுங்கள் உங்கள் விருப்பம்போல மதுவையோ, கவிதையையோ, ஒழுக்கத்தையோ பருகி வெறித்துக் கொள்ளுங்கள்." எனக் காற்றும், அலையும், விண்மீனும், பறவையும், கடிகாரமும் பதிலளிக்கும்.*

பிரஞ்சு மூலம் - சார்லஸ் போட்லேயா

ஆங்கிலத்தில் - மைக்கல் ஹம்பேர்கர்

ஏ.ஜே. இவற்றைப் பருகி வெறிப்பவர். மந்தாரத் தனிமையில் தனது வெறி தணிந்து விழித்து பின் அந்தப் போதையில் தாம் கண்ட தரிசனங்களை எமக்கும் திரை விலக்கிக் காண்பிப்பவர்.

ஏ.ஜே. தமது கையகப்படுத்தியிருக்கும் விசாலமான அறிவில் ஒரு சிறு பகுதியையே எமக்கு மீள அளிப்பவர். சுயநலமோ, சோம்பலோ இதற்குக் காரணமன்று. ஏ.ஜே. கைக்கொள்ளும் ஒழுக்கம் அத்தகையது என்றே கூறத் தோன்றுகிறது எனக்கு.

1972 இல் ஏ.ஜே. ஜெர்மன் கவிஞரைனர் மாரியா ரில்கே என்பவரது சிறு கடிதமொன்றை 'இளங் கவிஞருக்கு ஒரு கடிதம்" எனும் தலைப்பில் தமிழாக்கினார். இது அண்மையில் (டிசம்பர் 2000) வெளியாகியுள்ள 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்" எனும் கட்டுரைத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது. அக்கடிதத்திலிருந்து ஒரு சிறு பகுதி.

"... உமது அகத்தினுள்ளும் தனிமையினுள்ளும் நீர் இவ்வாறு இறங்கிச் சென்றதன் பின் நீர் கவிஞனாகும் எண்ணத்தைத் துறக்க வேண்டி [illegible] நேரிடலாம். நான் கூறியி[illegible] எழுதாமல் வாழ முடியுமென [illegible] தாலே எழுத முனையாதிரு[illegible] ம் போதும். ஆயினும் நான் உம்[illegible] ம் வேண்டும் அகச் சிந்தனை நாடல் வீணாகப் போகாது. எப்படியிருந்தாலும் உமது வாழ்க்கை அக்காலம் முதற்கொண்டு தனது தனித்துவமான மார்க்கங்களை நாட முற்படும். அவை சிறப்பாயும், வளம்மிக்கவையாயும், பரந்து விரிந்தவையாகவும் அமைய வேண்டுமென..."

இதை எழுதி எம் கையில் திணித்துவிட்டு நமுட்டுச் சிரிப்புடன் ஆனந்தமாக உட்கார்ந்திருக்கக் கூடியவர் ஏ.ஜே. இவ்வாறானதே அவர் கைக் கொள்ளும் ஒழுக்கமும். 1970 ஆம் ஆண்டில் அவரது 'மத்து" எனப்படும் கட்டுரைத் தொகுதி வெளியிடப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் அது மறுபிரசுரமாகியுள்ளது. அத்துடன் கூடவே 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்" என்னும் புதிய கட்டுரைத் தொகுதியும் வெளியாகியுள்ளது.

அடுத்த தலைமுறையினராகிய எமக்கு 'மத்து" வெளிவந்த காலத்திலேயே படிக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. அதில் இடம் பெற்றுள்ள பதினொரு கட்டுரைகளும் வெவ்வேறான பதினொரு நூல்கள் பற்றிப் பேசுகின்றன. பதினொரு நூல்களினதும் சாரத்தைப் பிழிந்து சிலதுளிகளில் செறிவாக்கி சொட்டச் செய்வதுடன், அந்நூல்கள் மீதான தமது எதிர் வினையையும் நுட்பமாக அதனுள் உட்செலுத்தும் ரசவாசத்தை நிகழ்த்தியிருக்கிறார். ஏ.ஜே. நூல்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு துறை சார்ந்தவை. பொருளியல், சூழலியல், உளவியல், மொழி வரலாற்றியல், அரசியல் விஞ்ஞானம், அரசியலமைப்பு, இலக்கியம், மருத்துவம், திரைப்படக் கலை, புராணவியல், மானிடவியல் எனப் பலதரப்பட்ட துறைகளைச் சேர்ந்தவை. 'மத்து" முதலாம் பதிப்பு வெளிவந்து 30 ஆண்டுகளின் பின்னரும் அது கடைந்த விடயங்களின் பயன் மதிப்பு இன்னும் குன்றாதிருப்பது 'மத்து"வின் மீள் பிரசுரத்துக்கு காலாக இருந்திருக்கின்றது.

இவ்விரு நூல்களையும் 'மித்ர" வெளியீடுகளாக வெளிக் கொணர்ந்திருப்பவர் எஸ்.பொ. அவர் ஆற்றிய நற்பணிகளுள் இதுவும் ஒன்று. 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்" என்னும் தொகுதியில் அமைந்துள்ள கட்டுரைகள் பெரும்பாலும் அளவில் சிறியவை. அதில் இடம்பெற்றுள்ள இருபத்தியேழு கட்டுரைகளுள் மூன்றைத் தவிர மீதி அனைத்துமே 1970 தொடக்கம் 1980 வரையில் எழுதப்பட்டவை. எனினும் இன்றும் கூட அவற்றின் பயன் மதிப்பு மிகவும் உணரப்படுகிறது. 'மத்து" கட்டுரைகளைப் போன்றே இக்கட்டுரைகளும் பலதரப்பட்ட துறைகளை தேர்ந்தெடுத்து சுவாரசியம் சூடுமாக அணுகியுள்ளன.

முதற் கட்டுரை செங்காவலர் தலைவர் - யேசுநாதர் என மகுடமிடப்பட்டுள்ளது. அக்டோபர் புரட்சியின் உடன் காலத்தவரும், ரஷ்ய நிலப் பிரபுத்துவ வர்க்கத்தின் கடைசிக் கொழுந்துகளில் ஒருவருமான (இது சோவியத் குடியரசின் முதலாவது கல்விக் கொமிசாரகிய லூனசார்ஸ்கியின் கணிப்பீடு) அலெக்ஸாண்டர் புளொக், ஒரே இரவில் எழுதிய 'பன்னிருவர்" என்ற நீண்ட கவிதையைப் பற்றிய விபரங்களையும் விமர்சனக் குறிப்பையும் தரும் அருமையான கட்டுரை இது. இந்நூலுக்கு முன்னுரை எழுதிய எஸ்.வி. ராஜதுரை, தமது முன்னுரையின் பெரும் பகுதியிலும் அலெக்ஸாண்டர் புளொக்கைப் பற்றியும், பன்னிருவர் கவிதையைப் பற்றியும், அக்கவிதை மீதும் புளொக்கின் மீதும் லெனின், ட்றொஸ்க்கி, லூனசார்ஸ்கி ஆகியோர் ஆற்றிய எதிர்வினைகள் பற்றியுமே பேசுகின்றார்.

எஸ்.வி.ஆர் தமது முன்னுரையை ஏ.ஜே. பற்றிய ஒற்றைவரி விமர்சனமொன்றுடன் முடித்திருக்கிறார் .... எனினும் மிக வேகமாக மறைந்து வரும் ஒரு உயிர் ராசியைச் சேர்ந்தவர் ஏ.ஜே. என்கிறது அந்த வரி. ஏ.ஜே.யின் எழுத்துப்பாணியும் மிக அபூர்வமானது. 'மத்து"விலும் சரி, 'செங்காவலர் தலைவர் யேசுநாதர்" இலும் சரி ஒவ்வொரு கட்டுரையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புகள் குறைந்த வெவ்வேறு விடயங்களைப்பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் ஆராயும் அதே சமயம், இக்கட்டுரைகள் தமக்குள்ளேயே ஒரு நுட்பமான இழையொன்றினால் பிணிக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை பற்றிய ஏ.ஜே. யின் தரிசனமும், அவரது நம்பிக்கையும் ஒரு மெல்லிய, ஆனால் உறுதியான இழையாக அக்கட்டுரைகளைத் தொகுக்கின்றன.

தேர்ந்த நாவலொன்றைப் போன்று ஏ.ஜே.யின் கட்டுரைகளிலுள்ளேயும், வெளியேயும், அவற்றின் தொகுப்பிலும், நுட்பமான புலன்களால் மாத்திரம் உணரக் கூடிய 'வெளி"கள் அமைந்துள்ளன. இந்த 'வெளி"களை ஒரு வாசகர் அணுகி, அவற்றை நிரப்ப முற்படும் போது புதிய அனுபவமொன்றைப் பெறுகின்றார்.

இக்குறிப்பின் ஆரம்பத்தில் தரப்பட்ட வசன கவிதை அதற்கு ஒரு தகுந்த உதாரணம். இன்னும் பல உதாரணங்களைக் காட்டலாம் எனினும், அதிக பட்சமான சுவாரசியத்தைப் பெறும் பொருட்டு விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல் எனும் கட்டுரையை நாம் தேர்ந்து கொள்ளலாம். திறந்த மனதுடன் அணுக வேண்டியது இங்கு முக்கியம். "இருக்கலாம்... அல்லது இல்லாதிருக்கலாம்..."" என்ற நொய்ந்த ஒரு அத்திவாரத்தின் மீது கோட்பாடுகளையும், கணித சூத்திரங்களையும், கற்பனைகளையும், கண்டு பிடிப்புக்களையும் அடுக்கி அவற்றை ஆர்வம் என்னும் பசையினால் பூசி மெழுகிப் பெறப்பட்டதே விஞ்ஞானம் என்பது என் கட்சி. ஏனைய கோள்களில் உயிரினங்கள் உள்ளனவா? அவற்றுள் மனிதனை விட மேம்பட்ட ஏதாவது இருக்கக் கூடுமா? அந்த உயிரினம் பூவுலகுக்கு எப்போதாவது வந்திருக்கக் கூடுமா? போன்ற சுவாரசியமான கேள்விகளுக்கு எதிர்பார்ப்புகளைத் துண்டக் கூடிய சில பதில்களைத் தருகின்றது. விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல் எனும் கட்டுரை.

எரிக் டானிக்கன் என்பார் எழுதியுள்ள புத்தகமொன்றின் மகுடம் இது. அப்புத்தகத்தைப் பற்றிய தனது கரிசனைகளை அதே தலைப்பில் ஏ.ஜே. கட்டுரையாக்கியுள்ளார். மனிதனால் சந்திரனுக்குப் போக முடியுமெனில், செவ்வாயில் மனிதனால் உருவாக்கப்பட்ட கலம் பயணிக்க முடியுமெனின் வேறு கிரகங்களிலிருந்தும், விண்மீன்களிலிருந்தும் 'ஏதாவது" பூவுலகுக்கு வருகை தந்திருக்கக் கூடும் எனும் கூற்றை மறுப்பதற்கு மனிதனுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விண்மீன்களிலிருந்து அறிவு படைத்த உயிரினங்கள் இவ்வுலகத்திற்கு வருகை தந்தன. அவையே பின்னர் 'தெய்வங்கள்" ஆக்கப்பட்டன என்கிறார். டானிக்கன். ஐன்ஸ்டைன், ஹக்குட், ஷெலொவ்ஸ்கி, கார்ல் சகான், ஹர்மன் ஓபேத் போன்ற விஞ்ஞானிகள் பலரும் இக்கருத்துக்கு ஆதரவாக உள்ளார்கள்.

சூரிய மண்டலத்தினுள் விண்வெளிப்பயணம் இன்று சாத்தியமாகியுள்ள போதிலும், சூரிய மண்டலத்துக்கு அப்பால் இதர விண்மீன்களுக்கு இடையில் விண்வெளிப் பயணம் சாத்தியமில்லை என வாதிடுவோர் உள்ளனர். நமக்கு மிகவும் அருகாமையிலுள்ள விண்மீனான அல்பா சென்ரவுரியைச் சென்றடைவதாயின், ஒளியின் வேகத்தில் 80 ஆண்டுகள் பயணம் செய்ய வேண்டியிருக்கும். ஒளியின் வேகத்தில் பயணம் செய்தல் சாத்தியமா? அதைவிட 80 ஆண்டுகளுக்கு மனிதனால் தொடர்ந்து பயணம் செய்ய முடியுமா? என்றெல்லாம் ஐயுறவுகள் மேலேழுகின்றன. ஆனால் எமது 'மரபு" வழிச் சிந்தனைகளிலிருந்து சற்று விடுபடுவோமாயின் இதற்கு விடை காண முடியும்.

எதிர்காலத்தில் ஒருவரது உடலை குளிரூட்டி விறைக்கச் செய்து, மீண்டும் குறிப்பிட்ட நேரத்தில் அவரை இயங்கச் செய்யும் முயற்சிகளில் விஞ்ஞானம் இறங்கியிருக்கிறது. அத்துடன் பிறவாத குழந்தையொன்றின் மூளையொன்றைப் பிரித்தெடுத்து அதனால் இயக்கப்படும் மின்னியக்கக் கருவிகளும்,

IIம் பக்கத் தொடர்ச்சி....

கம்பியூட்டர்களும் கண்டுபிடிக்கப்படும் முயற்சியும் தொடர்கிறது. பிறவாத குழந்தையொன்றின் மூளை, என்பது மூளையை விடச் சுதந்திரமாக மனம் சார்ந்த கட்டுப்பாடுகளின்றி - தொழிற்படக் கூடியது.

'காலம்" என்பதைப்பற்றிய எமது கருத்துகள் பூவுலகத்தைச் சேர்ந்தவை என டானிக்கன் கூறுகிறார். பூவுலகத்திலிருந்து முற்றாக விடுபட்ட பின்னர் 'காலம்" என்பது மிகவும் வேறொரு பரிமாணத்துக்கு உள்ளாகிவிடும்.

அத்துடன் 'ரொக்கட்டு"களால் இயக்கப்படும் விண்கலத்தைவிட வேறோரு விதத்தில் இயக்கப்படும் விண்கலம் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் (அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒளி வெளிப்பாட்டினால் இயங்கும் 'பறக்கும் விளக்கு" உருவாக்கப்படும் பட்சத்தில்) வேகம் பற்றிய தடைகள் அற்றுப் போகும்.

சடப்பொருளின் திணிவுக்கு எதிரினையானது 'ரக்கியோன்" என பேராசிரியர் வைன்பேர்க் கூறுகிறார். இந்த ரக்கியோன்கள் எல்லையற்ற விசைக் கூறுகளை உடையன. ஆனால் அவற்றின் விசையை ஒளியின் வேகத்துக்குக் சற்றுக் கீழ் குறைக்கும்போது அவை அற்றுப் போய் விடுகின்றன. ஒளியை விட ரக்கியோன்கள் நூறு கோடி மடங்கு வேகமுடையன என கணித வாய்ப்பாடுகள் மெய்ப்பிக்கின்றன.

எனினும் பௌதீக ரீதியாக ரக்கியோன்கள் இன்னும் அகப்படவில்லை. அவற்றை செயற்கையாக உருவாக்க முடியுமாயின் அவற்றைக் கொண்டு விண்கலன்களை இயக்கலாம். அதன் பின்னர் நினைத்தவுடன் விண்வெளிப் பயணங்கள் சாத்தியமாகும். உதாரணமாக பூமியிலிருந்து 75000 ஒளி ஆண்டுகள் தூரத்துக்கு அப்பாலுள்ள பால் மண்டலத்தின் மையத்தை (அவர்களின் நேரப்படி) 21 ஆண்டுகளில் விண்வெளிப் பயணிகள் சென்றடைவர். ஆனால் அதே நேரத்தில் பூமியில் 45000 இலட்சம் ஆண்டுகள் கழிந்திருக்கும்.

இவையெல்லாம் நமக்கு புராணக் கதைகளை நினைவூட்டவில்லையா? தேவர்களுக்கு ஒருநாள் எமக்கு ஒரு ஆண்டு என்கிறது புராணம். பொதுப்படையாக இறைவன் சோதி வடிவாக தோன்றினார். மறைந்தார் என்கின்றன புராணங்கள்.

இதர விண்மீன்களிலிருந்தும், கோள்களிலிருந்தும் எமது கற்பனைக்கும் ஆற்றலுக்கும் எட்டாத வேகத்தில் யாராவது பயணம் செய்து எமக்கு காட்சி தந்திருத்தல் கூடுமா? அருட் பெருஞ் சோதி என்று நாம் அவற்றைத்தான் கருதினோமா?

சுவாரசியமான பல கேள்விகளை எம்முன் எழுப்புகின்றது. 'விண்மீன்களுக்கு திரும்பி ஏகுதல்" எனும் புத்தகமும், அதைப்பற்றிய ஏ.ஜேயின் கட்டுரையும்.

திறந்த மனதுடன் அணுகினால்... இன்னும் பல சுவாரசியமான 'வெளிச்சங்களை"க் காணலாம்.

ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. 'தலைக்கனம்" ஆகவே ஆகாது 'மனிதனே பெரியவன்" என்றோ அல்லது 'மற்றைய மனிதனைவிட நானே பெரியவன்" என்றோ தலைக்கனம் ஆகவே ஆகாது. புதியன புகுதலுக்கு அது என்றுமே தடை.

# விமர்சனங்கள் -2

# அபராதி நானல்ல

## சமூகப் பொறுப்பையும் பயன்பாட்டையும் வலியுறுத்தும் சிவசேகரத்தின் இரண்டு நூல்கள்

- பீ.வி.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டின் கீழ் பேராசிரியர் சிவசேகரம் அவர்களின் இரண்டு நூல்களுக்கான மதிப்பீட்டு அரங்கு கடந்த ஜன.28 திங்களன்று வெள்ளவத்தை இராமகிருஷ்னமிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடை பெற்றது.

இந்நிகழ்வுக்கு சி.கா. செந்தில்வேல் தலைமை தாங்கினார். சிவசேகரத்தின் விமர்சனங்கள் - 2 என்ற நூலின் மதிப்பீட்டுரையை கே. முனாஸ் நிகழ்த்தினார். 'அபராதி நானல்ல" என்ற நாடக நூலுக்கு மதிப்பீட்டுரை ஆற்ற இருந்த இளையதம்பி தயானந்தா தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியவில்லை என அறிவித்திருந்தார். இதனால் அந்நாடக நூலின் சில பகுதிகளை நாடகப் பாங்குடன் செ. சக்திதரன், ச.ஹேமலதா, சண்முகம்பிள்ளை ஆகியோர் வாசித்துக் காட்டினர்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய சி.கா.செந்தில்வேல் அவர்கள் "எழுத்தாளர்களோ விமர்சகர்களோ எவரும் சமூகப் பொறுப்புமிக்கவர்களாக இருத்தல் வேண்டும். படைப்புகள் ஒடுக்கப்படும் மக்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர்பவையாக அவர்களுடைய விடுதலைக்கு அத்திவாரம் இடுபவையாக, ஒரு சமூக மாற்றத்துக்கு அடிகோலு பவையாக அமைதல் வேண்டும்" என்றார்.

கூடவே புதிதாக உருவாகி வரும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி ஏகாதிபத்தியத்திற்கு, அவர்களுடைய நலன்களை முதன்மைப்படுத்தி மக்களை ஒடுக்கு முறைக்கு உட்படுத்தவே உதவுகிறது. குறிப்பாக சினிமா, மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் என்பவை யதார்த்தத்திற்கு முரணாக ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு செயற்படுபவையாகவே உள்ளன. இந்நிலையில் படைப்பாளிகள் அல்லது விமர்சகர்களின் பணி அவற்றை அம்பலப்படுத்துவதும் மக்களுடைய உண்மையான பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்து சமூக மாற்றத்துக்கான அடிப்படையை இடுவதுமே என்றார்.

விமர்சனங்கள்-2 என்ற நூல் குறித்து உரையாற்றிய கே.முனாஸ் "விமர்சகர் சி. சிவசேகரம் அவர்களிடம் சமூகத்தின் மீதான கவலையும் அனுதாபமும் உண்டு. ஒருவரின் எழுத்திலும் வாழ்விலும் அதனைக் கண்டு கொள்ள முடியும்.

கவலையும் அனுதாபமும் ஒரு கட்டத்தில் துணிவினைத் தரக் கூடியவை. அத்துணிவு தனது கருத்தினை வெளிப்படுத்தும் திராணியைத் தருகிறது. எனவே தான் விமர்சகர் "மீண்டும் தயக்கங்களின்றி" என தனது விமர்சனத்தை ஆரம்பிக்கிறார். வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டும் அந்நிகழ்வுகளின் நாளைய விளைவுகளை நன்கு தெரிந்து கொண்டும் வாய்மூடி மௌனமாக இருக்க முடியாது தான். எனவே தான் தயக்கம் தூரமாகிறது.

தான் நம்பும் கருத்தியலில் தெளிவு வந்ததும் துணிவும் வந்து விடுகிறது. தெளிவு எப்போதும் துணிவைத் தருகிறது. இதனால் தான் பலரின் எழுத்தில் படர்ந்திருக்கும்

- இருண்மை விமர்சிக்கப்பட்டுள்ளது.

- தெளிவின்மை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

- போதாமை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

- திட்டமிட்ட மறைப்பு குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

- படைப்பாளியின் அரசியல் பார்வையின் குறைபாடு தொடர்பாக கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் நடத்தையை நுணுக்கமாக அவதானிப்பவர் அச்சமுதாயத்தின் நாளைய செல்திசையை முன்கூட்டியே சொல்லிவிட முடிகிறது. ஒரு விமர்சகர் அத்திசையின் சாதக பாதக விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறார். சமுதாயம் இப்படித்தான் செல்ல வேண்டும் என்று ஒரு திசையை குறித்துக் காட்டுகிறார். அதற்காக இன்றே நடத்தை மாற்றம் தேவைப் படுகிறது.

கருத்தியல் என்பது சமுகத்துக் காகும். சமூகம் என்பது பெருவாரியாக பொது சனங்களைக் கொண்டது சனங்களில் அக்கறையும் நலனும் கொண்டதாகவே கருத்தியலை நெறிப்படுத்தி எடுக்க வேண்டியுள்ளது. இதற்காக சூழல், இடம், காலம் என்பனவற்றுடன் இணைந்து போக வேண்டும். இந்த இணைவை விமர்சகர் ஏற்படுத்துகிறார். றெஜி சிறிவர்த்தனவின் 'சோவியத்




யூனியனின் உடைவு' எனும் நூலின் விமர்சனத்தில், 'மார்க்ஸியம் என்பது மார்க்ஸ் என்ன சொன்னார் என்பதை யும் மார்க்ஸ் என்ன நினைத்தார் என்பதையும் பற்றியதல்ல. அது ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வு முறை மட்டுமன்றி, அதற்கு சமுதாயம் சார்பான ஒரு நடைமுறை உண்டு என்பதையும் அது தொடர்ந்தும் வளர்ச்சி பெற்றுச் செல்ல வேண்டும் என்பதையும் மார்க்ஸியவாதிகள் மறந்துவிட முடியாது (பக்கம் 25) என்று கூறுவது மிகுந்த கவனத்திற்குரியது.

இதன் தொடராகவே அ.மாக்ஸ் அவர்களின் பார்வையும் நோக்கப் படுகிறது. அவர் தமது கருத்தின் புரிதலுக்காக அக்கருத்தியலுக்காக வாழ்ந்த சில ஆளுமைகளைப் பற்றிய அறிவுக்கு முக்கியத்துவம் வழங்கும் போது சி.சிவசேகரம் அது மட்டும் போதாது "நமது உடமையான சூழலைப் பற்றிய விரிவான அறிவும் உலக நிலையுடன் அதனைப் பொருத்திப்




பார்க்கும் ஆற்றலும் முக்கியமானவை (பக்கம் 08) என்கிறார். இவ்வகையில் சிவசேகரம் அவர்களின் விமர்சனங்கள் முக்கியமானவை என்றார்.

ஏற்புரை நிகழ்த்திய பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் "நான் மொழி பெயர்த்த நாடகங்களிலேயே 'அபராதி நானல்ல" என்ற இந்நாடக நூல் எனக்கு மிகவும் திருப்தி தந்தது. இந்த நூல் சிலே நாட்டவரான அறியேல் டோர்ஃப்மன் 1990 இல் எழுதிய மரணமும் மங்கையும் (Death and the maiden) என்ற நாடகத்தின் ஆங்கில வாக்கத்தைச் சார்ந்தது. இந் நாடக நூலை நான் முதன் முதலில் வாசித்த போது இது சிலேக்கு மட்டுமல்ல எங்களைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கும் பெரிதும் பொருந்தும் என உணர்ந்தேன்.

அண்மைக்கால வரலாற்றில் மிகவும் கொடுமையான அரச வன்முறையை அனுபவித்த நாடு சிலே. அமெரிக்காவின் பொருளாதார நலன்களுக்காக சிலேயின் சனநாயமும், சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட சனாதிபதி சல்வடோர் அயன்டேயும் பலியான பின்பு திட்டமிட்ட முறையில் ராணுவ ஆட்சியின் எதிரிகள் எனக் கருதப்பட்டவர்கள் குறிப்பாக இடதுசாரிகள் பழிவாங்கப்பட்டனர். கொலை, சித்திரவதை, ஆட்கடத்தல், காணாமற் போகுதல் போன்ற நிகழ்வுகள் மூலம் அரசாங்கம் தனக்கு எதிராக யாரும் கிளர்ந்தெழ முடியாதவாறு பயம் மிகுந்த ஒரு நிழலை உருவாக்கிருந்தது. இந்தக் கொடுமைமிக்க ஆட்சியைத் தூக்கி எறிய இரண்டு தசாப்தங்களாகின. எனினும் நிரபராதிகளைத் தண்டித்த ராணுவத்தினருக்கு எதிராக எதுவுமே செய்ய முடியாத விதமாக ஒரு சமரச உடன்படிக்கையின் மீதே சனநாயகம் மீளவும் அனுமதிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகள் முன்பு லண்டனில் கைதான சிலேயின் முன்னாள் ராணுவ சர்வாதிகாரியாக இருந்த பினோஷோவின் உடல்நிலை காரணமாக அவர் மீதான வழக்கை நடாத்த முடியாது என்று நீதி மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது. எனினும் பினோஷேயையும் உயர் ராணுவ அதிகாரிகளையும் விசாரணைக்கு உட்படுத்துவதற்கான முயற்சிகள் இன்னும் ஓயவில்லை.

சனநாயக ஆட்சி மாற்றம் ராணுவத்தினருக்கு எதிராக எதுவுமே செய்ய இயலாத ஒரு கையாலாகாத நிலையில் இருந்ததையும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணை ஆணையகங்களது பயனின்மையையும் முன்வைத்து அறியேல் டோர்ஃப்மன் இந்நாடகத்தை எழுதினார். ஸ்பானிய மொழியிலிருந்து பின்னர் ஆங்கிலத்திற்கு மொழி மாற்றப்பட்டு திரைப்படமாகவும் இது வெளிவந்தது. திரைப்படத்தை அடியொற்றி சிங்களத்திலும் இது நாடகமாக்கப்பட்டுள்ளது என்றார்.

விமர்சனங்கள் -2 என்ற நூலில் 20 விமர்சனங்கள் உள்ளன. பெரும்பான்மையானவை. சரிநிகர், மூன்றாவது மனிதன், காலச்சுவடு, புதிய பூமி என்பவற்றில் வெளியானவை. ஏனையவை காலக்குறி, தினகரன் என்பவற்றில் வெளியானவை.

இந்நூல் குறித்து சிவசேகரம் அவர்கள் குறிப்பிடும் போது 'இந்நூலில் உள்ள விமர்சனங்கள் யாவும் வேறுபடும் அளவுகளில் சமூக - அரசியற் பார்வைகளை முன்நிறுத்தியே எழுதப்பட்டுள்ளன. அதேவேளை எனது பார்வை தான் சரி என்ற நிலைப்பாட்டில் அல்லாமல் தகவல்களினதும், ஆய்வுகளினதும் விளக்கங்களதும் செம்மையையே கேள்விக்கு உட்படுத்தி உள்ளேன். விடயங்கள் விளங்கிக் கொள்வதிலும், நூலின் சமூகப் பயன்பாடு தொடர் பான கருத்துரைப்பதிலும் எனது விழுமியங்கள் நூலாசிரியர்களினின்று வேறுபட்டிருப்பதால் மட்டுமே அக்கேள்விகள் எழவில்லை.

எனது முன்னைய விமர்சன நூலில் வந்த கட்டுரைகளால் ஏற்பட்டுள்ள கோபங்கள் முற்றாகத் தணியுமுன்பே இந்த நூல் வருகிறது. நாம் எல்லோரையும் மகிழ்விக்க முடியாது. எவரையும் மகிழ்விக்கும் நோக்கில் எழுதப்படுவது விமர்சன மும் ஆகாது. என்னளவில் இவ் விமர்சனங்களும் விமர்சனத்திற்கு உரியனவே என்பதை வாசகர்கள் விளங்கிக் கொண்டாற் போதுமானது என்றார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் சார்பில் சோ. தேவராஜா நன்றியுரையாற்றினார்.




கூண்டுக்குள் வாழ்க்கைக்கான போராட்டம் தொடங்கி விட்டிருந்தது. வெள்ளை நிற முயல்குட்டியளவு பருமனுள்ள கினிப்பன்றி எலி, நீரைக் குடித்து திமிறி, புரண்டு உயிரை விட்டது. கறுப்போ கொஞ்சம் கூண்டுக்குள் ஒடித் திரிந்து, அங்கேயும் இங்கேயும் தட்டி, முட்டி மோதி, நீா குடித்து உயிரை விட்டது. சாம்பலோ கூண்டுக்குள் மிகக் கடுமையான வாழ்க்கைக்கான போராட்டத்தை ஆரம்பித்திருந்தது. இங்கும் அங்கும் ஓடியது. முன்னங்கால்களால் கூண்டை உதைத்தது. சிலந்தி போல் கூண்டின் மேற்பக்கமாக ஊர்ந்து மேலே ஏறி பின்னங்கால்களால் கூண்டின் மேற்சுவருக்கு உதைவிட்டது. எங்கும் மோதுப்பட்டது. வெளியே வர எவ்வளவோ முயற்சி பண்ணியும் தோற்ற நிலையில், முதலாவது மிடறு தண்ணீரைக் குடித்தது. என்றாலும் முயற்சியை கைவிடாமல் கூண்டில் முட்டி மோதி, இரண்டாவது, மூன்றாவது நீா மிடறு குடித்து...

**

எந்த ஊர்? என்று எனக்கு பின்னால் இருந்த கட்டிலில் படுக்க ஆயத்தப்பட்ட, அந்த நடுத்தர வயது மனிதனிடம் கேட்டேன். அந்த அறையில் நான்கு கட்டில்கள் ஒவ்வொரு மூலையிலும் இருந்தன. என்னைத் தவிர மற்றைய மூவரும் நித்திரைக்குப் போக ஆயத்தப்பட்டார்கள். நள்ளிரவு 2.30 மணிக்கு நித்திரைக்குப் போகாது வேறு எங்கு போவது? நான் கேட்டதும் தனது ஊரைச் சொன்னார். அந்த ஊரிலுள்ள ஒருவனைப் பற்றி விசாரித்தேன். அவன் தன்னுடைய மகன் தான் என்றார். எனக்கு சந்தோசமாகிப் போனது.

அவனைப் பற்றி விசாரித்தேன். அவன் தற்போது சோசலிசம் உடைந்து நொறுங்கி துண்டு துண்டாய்ப் போன ஒரு நாட்டில் 'ஏரொநாட்டிக்ஸ்' (வானூர்தி விஞ்ஞானம்) பயில்வதாகச் சொன்னார். அந்த நாட்டிற்கு கல்விக் கற்கச் செல்லவிருக்கும் ஒரு முஸ்லிம் பையனிடம் சுபாளிக்கு இனிப்புப் பண்டங்களும், கடிதங்களும் கொடுத்து விடுவதற்காகத்தான் தான் தலைநகர் வந்ததாகச் சொன்னார். அந்த முஸ்லிம் பையனுக்கு பாஸ்போர்ட், வீசாவுக்கெல்லாம், அவரே உதவி செய்ததாகச் சொன்னார். அந்த முஸ்லீம் பையனின் பாஸ்போட்டையம் காட்டினார். அந்த பையனைச் சந்தித்து, பாஸ்போட்டை அவனிடம் கொடுத்தால் தான் அவனும் வெளிநாட்டுக்கு படிக்க போகவியலுமாம் என்றும் சொன்னார்.

எனக்கு இடுப்பு வலிக்கத் தொடங்கியது. விடியப் போகும் காலை 10.30 மணிக்கு நடைபெறவிருக்கும் ஒரு விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில், நான் கெம்பஸில் செய்த ஆய்வை ஆற்றுகை செய்வதற்காக, இன்று பின்னேரம் 2.00 மணிக்கு வாகனம் ஏறி, அது மரவெளி, மலை, குகை எல்லாம் கடந்து ஓடி நள்ளிரவு 2.30 மணிக்கு லொட்ஜ் ஒன்றுக்கு கொண்டு விட்டது.

தலை நகரம் மிகவும் மாறித்தான் போயிருந்தது. வழி நெடுக திடீர் திடீரென வழிமறிப்புக்கள், சோதனைகள், அதட்டல்கள் இருந்தன. தலை நகரம் எனது பிரதேசத்தை விட மோசமாகத்தான் பட்டது. ஒளி எங்கும் பரப்பப்பட்டிருந்தும் அந்த தலை நகரத்து ஒளிகள் அமைதியை இழந்து விட்டிருந்தன என்று தெரிந்தது. லொட்ஜில் தனி ரூம் கேட்டேன். இல்லை என்றார்கள். நான்கு பேருடன் ஒரு ரூமுக்கு போனேன். அதுதான் இந்த ரூம்.

நான் எதற்காக தலைநகர் வந்தேன் என்பது பற்றி குமார் மனேஜர் கேட்டார். நான் விசயத்தைச் சொன்னேன். "நான் நாளைக்கு பிறசன்டேசனுக்கு கொஞ்சம் ஆயத்தம் பண்ண வேண்டியிருக்கு, நீங்க முந்திப் படுங்க, நான் கொஞ்சம் சுணங்கிப் படுக்கன்.' ஏன்று அவரையும் மற்ற இருவரையும் பார்த்துச் சொன்னேன். அவர்கள் துாங்க ஆயத்தம் செய்தார்கள். மணிக்கூட்டைப் பார்த்தேன். நேரம் நள்ளிரவு 2.45 மணி.

லேசர் பிறின்டரில் பிறிண்ட் எடுத்து வைத்திருந்த ட்ரான்ஸ்பேரண்ட் சீற்களை ஒவ்வொன்றாக பார்க்கத் தொடங்கினேன். நேற்றுக் காலை கெம்பஸில் இரு தடவைகள் எனக்கு ஒத்திகை பார்க்கப்பட்டது. ஓவர்ஹெட் புறஜெக்டரை மறைக்காதே, நிமிர்ந்து நில், ஆங்கிலத்தை அப்படி உச்சரிக்காதே, இப்படி உச்சரி. என்றெல்லாம் என் பேராசிரியை என்னை ஒத்திகையில் திருத்துவார். அறையில் ஆடித்தான் அம்பலத்தில் ஆட வேண்டும். இப்போது அம்பலத்தில் ஆடப்படுபவைகள் கூட, திட்டமிட்டு அறைகளில் தனித்தனியாக அரசர்களை திருத்தக்காரர்களாக வைத்து ஆடிப் பார்த்தவைகள்தான். இதுவும் ஒரு வகை நாடகமே.

தற்போது நேரம் நள்ளிரவு 3.30 மணி. என்னைத் தவிர மற்றைய எல்லோரும் நன்றாகக் குறட்டை விட்டு துாங்கத் தொடங்கி ஆழ்நிலை உறக்கத்திற்கு சென்றுவிட்டிருந்ததை உணர முடிந்தது. ஒரு இரவின் நீளம் என்னைத் திடுக்கிட வைத்தது. காலத்தின் பரிமாணத்தையும், ஒளியையும் முறுக்கித் திரித்தாலும் சாதாரண புலனுக்கு அப்பாற்பட்ட நீளம் கொண்டது இரவு என எனது புலனுக்குப் பட்டது. இந்த நீளங்களின் விளிம்புகளில் தான் எத்தனை திட்டங்களும் தவிடுபொடிகளும். ஒரு இரவின் நீளம் பற்றிய பிரக்ஞையே இல்லாது, அலுத்துக் களைத்துத் துாங்குபவனின் ஆழ்ந்த துாக்கத்தை குலைப்பது உண்மையிலேயே மிருகத்தனமானதுதான் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் அதற்குப் பின்னாலும் ஏதோ காரணங்கள் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். துாங்குபவர்களைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டே அவர்களின் துயிலின்பத்தை இரசித்தேன்.

டொக்.. டொக்.., யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. பின்னர் கதவு யாதாலோ இடிபட தொடங்கிவிட்டிருந்தது. உலகத்திலுள்ள நாகரிகமற்ற செயல்களில் துாங்கிக் கொண்டிருப்பவர்களின் துாக்கத்தை கலைப்பதும் ஒன்றாகும் என்று நான் நினைத்தது சரியென நினைத்தேன்.

கதவைத் திறந்தேன். ஐந்தாறு பேர் ஒரே வகையான உடையில் ஒரே வகையான மொழி பேசி உள் நுழைந்தார்கள். ஆழ்ந்த துாக்கத்திலிருந்த மற்றைய மூவரையும் எழுப்பச் சொன்னார்கள். எழுப்பினேன். மிகவும் கஸ்டப்பட்டு எழும்பி, அந்த உடையணிந்தவர்களைக் கண்டதும் பேயறைந்தவர்கள் போலானார்கள்.

என்னிடம் மஞ்சள் அட்டை கேட்டார்கள். காட்டினேன். ஒன்றும் பேசவில்லை. அவரிடம் கேட்டார்கள். கொடுத்தார். அவர்களது இடத்திற்கு அவர்களுடன் உடனடியாக வெளிக்கிடுமாடு கூறினார்கள். அவர் தனது உத்தியோக அட்டையையும் காட்டினார். அவர்களின் மொழியையும் நன்றாக் கதைத்து, தான் தலை நகரத்திற்கு இல்லை நரகத்திற்கு வந்த விளக்கத்தையும் சொன்னார். எந்தப் பலனும் இல்லை.

'உடனே வெளிக்கிடு' என்று சத்தம் போட்டு நின்றார்கள். இதற்கிடையில் மற்றைய இருவரிடமும், அவர்களது மஞ்சள் அட்டைகளை வாங்கிப் பார்த்தார்கள். அவர்கள் இருவரும் முஸ்லிம்கள். நாளை மறுநாள் மத்திய கிழக்குக்குப் போகப் போவதாகச் சொன்னார்கள். அந்தப் பேச்செல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது.

அவர்களையும் வெளிக்கிடு என்று அவர்கள் மொழியில் கத்தினார்கள். அவர் றவுசர் மாற்றப் போனார். ஆனால் அவர்கள் விடவில்லை. 'சாரனோடயே வா' என்றார்கள். அவர்கள ஏச ஏச குமார் மனேஜர் றவுசரை போட்டு முடித்துவிட்டு ரூமைவிட்டு வெளியே வந்தார். மற்ற இருவரும் கூட வந்தனர்.

மற்ற ரூம்களிலிருந்து பிடிபட்டவர்களையும் சேர்த்து அவர்களையெல்லாம் கொஞ்சம் துாரத்திலிருந்த அவர்களின் நிலையத்திதற்குக் கொண்டு போவதற்காக மாடு போல் சாய்க்கத் தொடங்கினார்கள்.

கொஞ்ச துாரம் விட்டு அவர்களின் பின்னால் நாங்கள் போனோம். கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. லொட்ஜின் வெளிப்பக்க பெரிய இரும்புக் கேற்றை காவலாளி திறந்துவிட மாட்டுப் பட்டியிலிருந்து மாடுகள் கவலைகளுடன் வெளியேறுவது போல் வெளியேறினார்கள். அல்லது வெளியேற்றப்பட்டார்கள். அவர்களுடன் அவர்களின் பதவி, பட்டம், சாதி, வகுப்புகளுக்கான பெருமை, பொருளாதார அந்தஸ்து வயதுக்குரிய அந்தஸ்து போன்றவைகளும் பெறுமதி குறைந்து அவர்களை துரத்திச் சென்று கொண்டிருந்தன. போர்வைகளால் போர்த்தி மெத்தைகளில் படுத்தவர்கள் எத்தனை பேர் வெறும் மேலுடன் வெறுந்தரையில் கூண்டுக்குள்ளே எத்தனை மாதத்திற்கோ எத்தனை வருடத்திற்கோ இருக்கப் போகிறார்களோ? தெரியாது.

அவர்களுக்கும் எனக்கும் எங்களுக்கும் உறவு அறுந்து விட்டதை லொட்ஜ் காவலாளி மூடிவிட்ட 15 அடி உயர கதவின் நெடிய கிறீச் சத்தம் எனக்கு உணர்த்தியது. கதவிற்கு உள்ளே இருட்டும் சூனியமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு துரத்தின. 'நீயும் கூண்டுக்குள்ளேதான்' என்று கதவு கூறியது. அப்போது நானும் அல்லது நாங்களும் அடைக்கப்பட்ட கூண்டுக்குள்தான். கொஞ்ச நேரத்தில் எனது கூண்டுக்குள்ளே போய் என்னை நானே சிறையிடப் போகின்றேன். கொஞ்சம் வித்தியாசம் என்னவென்றால் இந்தக் கூண்டில் கொஞ்சம் வசதி கூட.. சிறைக் காலம் குறைய.

என்னைச் சிறையிட முன்பு லொட்ஜ் மனேஜரிடம் போனேன். 'தம்பி இப்படி அடிக்கடி நடக்கிறது. மண்ணிற தாளோ இல்லாட்டி பச்சை நிற மயில்தாளோ குடுத்தா விட்டுருவானுகள். தாளெல்லாம் நீங்க நேரடியா குடுக்க ஏலாது. அதுக்கு ஆக்கள் இருக்காங்க. கவலப்படாம போய்ப் படுங்க' என்றார்.

இந் நாட்டின் இந்த பெரிய பெறுமதிமிக்க தலைவர்களெல்லாம் தலை சிதறி குண்டுகளால் செத்து போனார்கள். அவர்களின் அருமந்த விலை அந்த மண்ணிறத் தாளா?

போதிசத்துவரின் தந்தக் கோயில் வெடித்துச் காட்டுமிராண்டித்தனமாகச் சிதறியது. போதிசத்துவருக்கும், தந்தத்திற்கும், எண்கோணத்திற்கும், நின்ற நிலை தியான நிலைகளுக்கும் பெறுமதி பச்சை மயிற்தாளா?

கலிங்க மன்னன் மகள் கொண்டு வந்த , வெள்ளரசுமர நகரில் பல காவியுடைச் சாமியார்கள் சன்னங்கள் முத்தமிட மனிதத்தின் புனிதங்களுடன் செத்துப் போனார்கள். அந்த முக்திகளின் விலை மண்ணிறத் தாளா?


மண்ணிறத் தாள்களும், பச்சைநிற மயிற் தாள்களும்

---

**கூண்டுகள் திறக்கப்படும் சத்தம் கேட்க, கசங்கிய கந்தல் புடவையாய், இரண்டு நாள் வியர்வை உடம்பு பூராக மணக்க, அழுக்கேறிய உடுப்புக்களுடன் அவர் கூண்டைவிட்டு வெளியே வந்தார். கூண்டு பூட்டப்படும் சத்தம் கேட்டது. இரண்டாயிரத்து ஐநூறு கால நாகரிகங்களும், பழம் பெருமைகளும், சீலங்களும், இறைமையும், மண்ணிறத்தாள்களாலும், பச்சை நிற மயிற் தாள்களாலும் சுற்றி மூட்டையாய்க் கட்டப்பட்டு இன்னும் கூண்டுக்குள் கிடப்பது அருவமாய் தெரிவதைக் கண்டு கொண்டே இடத்தை விட்டு வெளியேறத் தொடங்குகின்றேன்.**

கோடிக் கணக்காய் பிறக்கும் மத்திய இடமோ வெடிப்பு ஓடி வந்து மோதி வெடித்து சுக்காகிப் போனது. தேசத்தின் பொருளாதாரமே ஆட்டம் கண்டது. நாட்டின் பொருளாதாரத்தின் மொத்தப் பெறுமதியே ஒரு பச்சை மயிற்தாளா?

இந் நித்தில துவீபத்தின் இறைமை, சுயகௌரவம், சுயாதிபத்தியம் என்பவற்றின்



விலையெல்லாம் ஒரு மண்ணிறத் தாளாம், ஒரு பச்சைநிறத் தாளாம்.

ரூமுக்குள் நுழைந்து கதவைப் பூட்டி என்னை நானே கூண்டிலடைத்தேன். மூன்று கட்டில்களும் வெறுமையாகிக் கிடந்தன. நான் மட்டும் அந்தக் கூண்டுக்குள் உழல வேண்டி இருக்கிறது. நாயுருவி சுள்ளியால் இதயத்தை வருடுவது மாதிரி மனம் வேதனைப் பட்டது. திடீரென மூன்று கட்டில்களும் கிளம்பி நிமிர்ந்து நின்று எனக்கு ஆறுதல் சொன்ன. என்னைச் சிந்திக்குமாறு கூறின. கூண்டுகளுக்கு விளக்கங்களும் தந்தன. மற்றைய இருவரையும் விட சுபாளியின் அப்பாவின் இழப்புத்தான் எனக்கு மிகவும் மனவருத்தமாய் இருந்தது. எவ்வளவு கெஞ்சிப் பார்த்தார். கதைத்துப் பார்த்தார். தான் காலையில் இந்தப் பாஸ்போட்டை அந்த முஸ்லிம் பையனிடம் கொடுக்காவிட்டால் அவன் வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றுக்கு படிக்கப்போக இயலாது போய்விடும் என்றெல்லாம் கதைத்துப் பார்த்தார். எந்தப் பலனும் இல்லை. என் தந்தையின் அதே வயதுதான் அவருக்கும் இருக்கும். வயது வந்த பிள்ளைகள் இருக்கும் பெருமிதம், தன் குடும்பப் பெருமிதம், சாதிப் பெருமிதம், வணக்கஸத்தலத்திற்கு தர்மகர்த்தாவாக இருக்கிற பெருமிதம், தனது ஊரில் மரியாதைக்குரிய கௌரவ பிரஜையாக நடத்தப்படுகின்ற பெருமிதங்கள் எல்லாம் சிறுமிதங்கள் ஆகுமாறு எருமை மாட்டை மேய்ப்பது போல் மேய்க்கப்பட்டுக் கொண்டுதானே போனார்.

ஏன் அவர் எருமை மாடானார்? அமிழ்தினும் இனிய மொழியைப் பேசும் தாய் தந்தையருக்குப் பிறந்து அம் மொழியை பேசியதாலா? அவர் விரும்பித்தான் பேசினாரா, அவர் பிறந்ததால் பேசினார். அதற்கு அவரா குற்றவாளி? அவரைப் பிறக்கவும் பேசவும் வைத்த அதைத்தானே கைது செய்ய வேண்டும். பட்டியாக்கி சாய்த்துக் கொண்டு போக வேண்டும்.

மன இறுக்கத்தை தளர்த்திவிட்டு மீண்டும் எனது ட்ரான்ஸ் பேரன்ட் சீட்களை நோட்டமிடத் தொடங்குகிறேன்.

**

நேரம் காலை. வேன் திறந்த பல்கலைக்கழகத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. 10.30 மணிக்கு எனது விஞ்ஞான ஆய்வு பற்றிய ஆற்றுகை முடிய, இன்று இரவே 6.30க்கு ஊருக்குப் போக வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன்.

இப்போதெல்லாம் நான் கதைப்பதும் எழுதுவதும் விளங்குவதில்லை என்று சொல்லிக் கொண்டு என்னைவிட்டு தூரமாகுபவர்கள் அதிகமாகிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இயலுமென்றால் ஒரு பெண்ணை கதைத்து விழவைத்து காதல் பண்ணிக் காட்டு என்று சவால் விட்டுப் போகிறார்கள். இப்போதெல்லாம் எனக்கு குறியீடு -குறிப்பான் பற்றிய தத்துவச் சிக்கல் தான் உள்மனவெளியெங்கும் போராய் அறைகூவலுடன் நடந்து கொண்டிருக்கின்றது. மொழிப் பிரச்சினை என்றால் கை - கால்களிலுள்ள மொழிகளைப் பார்த்து காயமா? வீக்கமா என்று தொட்டுப் பார்த்து எனக்குள்ளே சிரித்துக் கொள்கிறேன். பயங்கரவாத தடைச் சட்டம் என்றால் முதலில் கால்களிலுள்ள முழங்கால்களை வேதனையோடு கண்கள் விரியப் பார்த்து கைளால் தடவி இல்லாத வலியை ஏற்று பயங்கரவாதத்தை உணர்ந்து, மின்னோட்டத்தில் V=IR இல் வரும் சு என்ற தடையை உணர்ந்து, பின் சீனி ஒடாவியார் எங்களது வீட்டில் எனது நான்கோ அல்லது ஐந்து வயதுகளில் கோழிகளை அடைக்க செய்த கோழிக் கூண்டுக்கு அடித்து, இப்போது உக்கிப் போக நிலத்தில் கிடக்கும் கறையான் அரித்த சட்டங்களை நினைத்துப் பார்த்து, முச்சொல்லுக்குமான கருத்தேற்றத்தை நினைத்து தனிமையில் சிரிக்கிறேன்.

நான் இப்போது திறந்த பல்கலைக் கழகம் தான் போகிறேன். எவ்வளவோ பிரச்சினைகள் நடந்தாலும், குண்டுகள் தான் வெடித்தாலும் மூவினக் குருதி தார் வீதியில் கலந்து ஒருங்கொட்டி கட்டியாகி காய்ந்து, ஊரடங்கு சட்டம் போட்டாலும் இலங்கையில் எப்போதும் திறந்திருப்பது இந்தப் பல்கலைக்கழகம்தான். மூடினாலும், பூட்டுக்கள் தெறிக்க, திறந்திருப்பது இதுதான். என் குறிப்பானும் - குறியீடும் என்னைத் தூக்கிக் கொண்டு எங்கேயோ பறந்து கொண்டிருப்பதை உணர்கிறேன். ஒரு வேளை நான் மனநிலை பாழ்ந்தவனோ தெரியாது. அல்லது என் இயலாமை இப்படி என்னை சிந்திக்க வைக்கிறதோ. வந்த எருமை மாட்டுக் கூட்டத்தில் நான் தப்பிய மாட்டுக் குஞ்சு.

நான் பின்னேரம் லொட்ஜ் திரும்பினேன். அவர் அதுவரை விடுவிக்கப்படவில்லை என்று தெரிந்தது. எனவே பின்னர் இடம் போனோம். கூண்டுகள் கண்டோம். ஒரு கூண்டுக்குள் குமார் அவர் அன்கோ கிடந்தனர். அந்த இரு முஸ்லிம்களும் விமான ரிக்கட்டை அடுத்த நாள் காட்டி கூண்டுக்குள்ளிருந்து சென்றதாக அறியக் கிடைத்தது. கூண்டுக்குள் கிடந்த அவரைப் பார்க்க பாவமாக இருந்தது.

வாழ்க்கையின் ஏதோவொரு தேடல்களுக்காக நகர்ந்து கொண்டிருக்கின்ற புலங்கள் யாவும் எதொவொரு வகையில் கூண்டுகள் தான். அவருக்கோ இடத்திலிருந்த சிறை கூண்டு. விட்டு வெளியே வந்தால் தலை நகரம் கூண்டு. இரவில் லொட்ஜ் கூண்டு. பின் பிரயாணம் கூண்டு. எங்கும் கூண்டுகள். கூண்டுகளில் கிடைக்கும் வசதிகளையும், அதன் பரப்புக்களையும் பொறுத்து கூண்டுகள் செய்யும் சித்திரவதைகளின் கடூரத் தன்மை மாறுபடும். கூண்டுகளுக்கான அர்த்தப்படுத்தலும் வேறுபடும்.

**

கூண்டுகள் பற்றிய எனது வாழ்க்கையின் அனுபவங்கள் பலவகையானவை. இயற்கைத் துறைமுகம் அமைந்திருக்கிற நகரத்தின் வட கரையின் கடல்களில் நட்சத்திரங்களை அடையாளமாய் இடங்குறித்து, உள்ளே இரைபோட்டு, கூண்டுகளுக்குள் கூண்டுகள் நிறைய நேரங்களில் பேரினமானவர்களால் களவெடுக்கப்படுவதும் உண்டு). கிடக்கும் இரையால் கவரப்பட்டு உள்ளே போன மீன்கள் திரும்பி வர இயலாமல் கூண்டுக்குள் அடைபடும். இந்தக் கூண்டுகள் மீன்கள் தரும். காசுகள் தரும்.

கிழக்கு வாவியின் மேற்குக் கரையின் ஆழங் குறைந்த பகுதிகளில் இரும்பு வளையமும், வலையும் கொண்டு செய்யப்பட்ட கூண்டுகள் நண்டுகளைச் சிக்க வைக்கும். ஊண் தரும். பணம் தரும்.

மலைப் பாம்புகள் பிடிக்க, அதைப் பரிசோதிக்க, படிக்க ஒரு கம்பி வலைக் கூண்டு. அது அறிவு தரும். பதவி தரும்.

கினிப் பன்றிகள் என்னும் பெரிய எலிகளை வெட்டிப் பரிசோதிப்பதற்கு முன் மூன்று மூன்றாய் அடைத்து நீரில் அமிழ்த்தி கொல்வதற்காக ஒரு கூண்டு. ஒரு தரம் வெள்ளை, கறுப்பு, சாம்பல் நிற மூன்று கினிப் பன்றி எலிகளையும், ஆய்வுகூட உதவியாளன் கூண்டுக்குள் போட்டு அடைத்து, நான் மீன்கள் வளர்க்கும் பெரிய சீமெந்து நீர்த்தொட்டிக்குள் போட்டான். (அதிலிருக்கிற தந்திரமான நியாயம் யாதெனில் கொன்ற பாவத்திலிருந்து தான் தப்புதலாகும்) மணிக்கட்டைப் பார்த்தேன். கூண்டுக்குள் வாழ்க்கைக்கான போராட்டம் தொடங்கிவிட்டிருந்தது. வெள்ளை நிற முயல்குட்டியளவு பருமனுள்ள கினிப்பன்றி எலி, நீரைக் குடித்து திமிறி, புரண்டு உயிரை விட்டது. கறுப்போ கொஞ்சம் கூண்டுக்குள் ஓடித் திரிந்து, அங்கேயும் இங்கேயும் தட்டி, முட்டி மோதி, நீர் குடித்து உயிரைவிட்டது. சாம்பலோ கூண்டுக்குள் மிகக் கடுமையான வாழ்க்கைக்கான போராட்டத்தை ஆரம்பித்திருந்தது. இங்கும் அங்கும் ஓடியது. முன்னங்கால்களால் கூண்டை உதைத்தது. சிலந்தி போல் கூண்டின் மேற்பக்கமாக ஊர்ந்து மேலே ஏறி பின்னங்கால்களால் கூண்டின் மேற்சுவருக்கு உதைவிட்டது. எங்கும் மோதுப்பட்டது. வெளியே வர எவ்வளவோ முயற்சி பண்ணியும் தோற்ற நிலையில், முதலாவது மிடறு தண்ணீரைக் குடித்தது. என்றாலும் முயற்சியை கைவிடாமல் கூண்டில் முட்டி மோதி, இரண்டாவது, மூன்றாவது நீர் மிடறு குடித்து இறந்தது. இந்தக் கூண்டுகள் புள்ளிகள் தரும். பதவி உயர்வுகள் தரும்.

கூண்டுகளுக்குள்ளேயும் இன்னும் எனக்கு மிகையுற்பத்தியும், வாழ்க்கைப் போராட்டமும், வல்லனவற்றின் வாழ்வும், இயற்கை தேர்வும், இனம் ஒன்று அழிந்து, இன்னுமொரு இனம் செழித்து தோன்றுதலும் தான் தெரிந்து கொண்டிருக்கின்றது.

நான் பார்த்த, பழகிய, செய்த, கூண்டுகள், மீன் தரும். நண்டுகள் தரும். பணம் தரும். பரீட்சைகளில் புள்ளிகள் தரும். பதவிகள் தரும். வாழ்வில் வளம் தரும். பொருள் தரும். இவை வாழ்வு அளித்த கூண்டுகள்.

ஆனால் இந்தக் கூண்டுகளோ, வெளிநாட்டுக்கு கல்வி கற்கப் போகவிருந்த பையனின் கல்வியை தடுத்த கூண்டுகள். குடும்பப் பாரம் போகுமென்று வட்டிக்கு பணமெடுத்து வெளிநாடு போகவந்தவர்களின் வெளிநாட்டு பயணத்தை தடுத்து அவர்களின் குடும்பங்களை நடுத்தெருவுக்கு ஆக்கிய கூண்டுகள். மகனை குடும்பத்தவர்களிடமிருந்தும், அப்பாவை மகளிடமிருந்தும், மகளை தந்தையிடமிருந்தும் பிரித்த கூண்டுகள். சுகதேகிகளுக்கு நோய் கொடுத்த கூண்டுகள். கௌரவப் பிரஜைகளுக்கு இழிவு கொடுத்த கூண்டுகள். வாழ்வு அழித்த கூண்டுகள்.

எங்கேயோ போய் யாரோ கதைத்தார். கூண்டுகள் திறக்கப்படும் சத்தம் கேட்க, கசங்கிய கந்தல் புடவையாய், இரண்டு நாள் வியர்வை உடம்பு பூராக மணக்க, அழுக்கேறிய உடுப்புக்களுடன் அவர் கூண்டைவிட்டு வெளியே வந்தார். கூண்டு பூட்டப்படும் சத்தம் கேட்டது. இரண்டாயிரத்து ஐநாறு கால நாகரிகங்களும், பழம் பெருமைகளும், சீலங்களும், இறைமையும், மண்ணிறத்தாள்களாலும், பச்சை நிற மயிற் தாள்களாலும் சுற்றி மூட்டையாய்க் கட்டப்பட்டு இன்னும் கூண்டுக்குள் கிடப்பது அருவமாய் தெரிவதைக் கண்டு கொண்டே இடத்தை விட்டு வெளியேறத் தொடங்குகின்றேன். ○

## இன்றைய நாட்குறிப்பேட்டிலிருந்து


இனியாவது இதன் அசைவுகளைத்தொடு
இனியும் மனதை திருப்பாதே
வழங்கப்பட்ட அவகாசம் போதும்
விலகு
இப்படித்தான் அன்றும்
அகலமான கண்களை உருட்டி
இருத்தலை உறுதிசெய்ய
நம்பிக்கைகளும், வாழ்த்துக்களும்
பின் நிலவை கடத்தும்
ஒரு காதலியின் பழைய
ஞாபக அலைகள் முட்ட
முரண்பாடாயிற்று இன்றும்
உன் போலிகளுடனே
அந்த ஒற்றைக் கதவு ஜன்னல்கம்பிகளிடம்
கேள் மிக அவசரமாகக்கேள்
எனது ஞான மடத்திண்ணையிலேயே
உன்னுடைய
மனமாற்றத்தையும்
என்னுடைய
மனமாற்றத்தையும் அன்றே
நிழல் மாற்றத்தைபோல் ஆகியும் விட்டது.
திரும்பவும்குரல்மாற்றத்துடன்
எதையாவது ஒப்புக் கொள்
இடையே நடந்த இடையுருக்கு
முழுவதும் எனக்குத் தெரியும் நீதான்
மனசாட்சியில் சத்தியம் செய்துவிடு
அல்லது
எதையாவது மனிதாபிமானமாக
ஒப்புக்கொள்
ஒரு தரம் மீழ பின்னோக்கிய மூளையின்
அதிர்வு வேகமும் அதிகமாயிற்று
சட்டபூர்வமில்லாத எனது
சந்திப்புக்களுக்கு சாட்சியமானது
அந்த
ஒற்றைக்கதவு நிலவின் நிழலில்
ஓவியங்களாகவும் உதிர்ந்திருந்தன
மீழ எழுத்தானிகளின்
அசைவுகளை தொடு
விழயட்டும் உயிரிருந்தாலும் தொடு
இன்றும் வழமை போல்குறிப்பேடுகள்
திறக்கலானதும் இன்னும்
கழிதம் படிக்கும் கவிதைகளில்
மிகநெருக்கமாகவிருந்தும்

அதன் வெளிப்பாடாகவே
எனது ஓவியங்களினதும்
எனது கவிதைகளினதும்
குறிப்பேடுகள் நனைய நீர்வழிந்ததும்
மறுநாளுக்காக
மறுநேரங்களுக்காக
மறு நிமிஷங்களுக்காக
மறுசெக்கன்களுக்காக
வாழ்வதை அல்லாடிக்கொண்டிருந்த
மரண போராட்டமும்
வாழ்வுபோராட்டமுமாக.



— மஜீத்

## குறிப்பேடு



- எம்.கே.எம். ஷகீப் -

# சுதந்திர ஊடகம்

ஊடக சுதந்திரம் -சுதந்திர ஊடகம்- பற்றி நாம் நிறையவே கதைத்துக் கொள்கிறோம். ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்கிறோம். கொதித்தெழுகிறோம். இவை ஊடகங்கள் மீது திணிக்கப்படுகிற பிற அழுத்தங்கள் மீதான எதிர்வெளிப்பாடுகளாகவே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. என்றாலும் மறுபுறத்தில், ஊடகங்கள் தாமாகவே Policy என்ற பெயரில் சுதந்திர ஊடக கட்டுப்பாட்டைச் செய்கின்றன. இது பலவிடங்களில் சுதந்திர ஊடகங்கள் என்று சொல்கிற ஊடகங்களின் மீதான சந்தேகப் பார்வைகளைப் பதியச் செய்து விடுகிறது. இவ்வாறான இந்த ஊடகச் சுதந்திரம் பற்றி மிகப் பெரும் ஜனநாயக நாடெனவும், சுதந்திர ஊடகங்களின் உறைவிடமுமெனப் பீற்றிக் கொள்ளப்படுகிற அமெரிக்காவில் எவ்வாறிருக்கிறது என்தைச் சுட்டுகிற ஒரு சிறு குறிப்பு கீழிருக்கிறது. The New York Times ன் முன்னாள் பத்திரிகையாளர்கள் குழுத் தலைவரான John Swinton ன் பகிரங்கமான குறிப்பு இது. :பத்திரிகைத் துறைப்பீடாதிபதி: என பரவலாக அறியப்பட்ட இவர் அண்மையில் (அதுவும் செப்டம்பர் 11க்குப் பின்னர்) New York Press Club ல் (அது சரி, Sri Lanka Press Club ல் என்ன நடக்கிறது? தொடங்கிய புதிதில் எல்லோருக்கும் அமர்க்களமாய் அழகான அங்கத்துவ அட்டை அனுப்பியிருந்தார்கள்..அதன் பிறகு அது மூச்சு விடக் காணோம்.. அங்கு போன சிலர் :கழிவு விலையில் பியர் குடிக்கலாம்: என்று சொன்னாாகள்.. அது தவிர ஏதும் நடைபெறுகிறதா அங்கு?) பல பிரமுகர்கள் மத்தியில் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது : என சொல்லத்தக்க கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்.

:சுதந்திர ஊடகம் என்று சொல்கிறோமே.. அப்படியொன்று உலக வரலாற்றிலேயோ அல்லது அமெரிக்க வரலாற்றிலேயோ இருந்ததில்லை.. இப்போது இருக்கின்ற ஒன்றுமல்ல அது.. நேர்மையாக நேர்மையான கருத்துக்களை எழுத விரும்புகிற யாரும் கூட உங்களிலில்லை. அப்படி 'தப்பித் தவறி எழுதிவிட்டீர்கள் என்றால் அது பிரசுரமாகாது என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.:

:பத்திரிகையில் நான் எனது நேர்மையான கருத்துக்களை எழுதாமலிருப்பதற்காக எனக்கு வாராவாரம் பணம் தருகிறார்கள்.. இதே தான் உங்களுக்கும்! நேர்மையை ஒரு புறம் ஒதுக்கி எழுதிக் கொண்டிருக்கிறீர்களே அதற்குத் தான் உங்களுக்கும் சம்பளம் கிடைக்கிறது..பின்னே..உங்களில் யாரும் நேர்மையாக எழுதப் போய் வேறு வேலை தேட வேண்டிய முட்டாள்தனமான அவலத்திற்குட்பட விரும்புவீர்களா?:

:நான் எழுதிய பத்திரிகையில் எனது நேர்மையான, நடுநிலையான கருத்துக்களை எழுதியிருந்திருப்பேன் என்றால் எனது அங்கேய இருப்பு 24 மணி நேரத்துள் பறிபோயிருக்கும். இவற்றையெல்லாம் நீங்களும் அறிவீர்கள். நானும் அறிவேன்:.

சுதந்திர ஊடகம் என்று சொல்லிப் பசப்பிக் காட்டிக் கொண்டு செய்கிற பம்மாத்து இல்லையா இது!? பாருங்கள், நாங்கள் தானே பெரும் நிகழ்வுகளுக்குப் பின்னாலிருக்கிற பண முதலாளிகளின் துருப்புக்களாகியிருக்கிறோம். அவர்கள் ஆட்டுகிறார்கள்..நாம் ஆடுகிறோம்..:

எங்கள் திறமைகள், சந்தர்ப்ப சாத்தியங்கள், ஏன் எம் வாழ்க்கை கூட யாரோ வேறொருவரது உடமையாகத்தானே இருக்கிறது!:

:ஆக, நாம் புத்திஜீவி விபச்சாரகர்களன்றி (Intelectual Prostitutes) வேறு யார்?:

சொல்லு,
ரோஜா நிர்வாணமானதா
அல்லது அதுதான் அதன்
ஒரே ஆடையா?

மரங்கள் ஏன்
தங்கள் வேர்களின் ஆடம்பரத்தை
மூடிக்கொள்கின்றன?

மழையில் நின்று
நனைந்துகொண்டிருக்கிற
புகையிரதத்தை விட
மிகச் சோகம் தருகிற விடயம்
உலகில் ஏதுமுண்டா?

சொர்க்கத்தில் எத்தனை
தேவாலயங்கள் உள்ளன?

எங்கள் ஆசைகளுக்கு
நீர் தெளிக்க வேண்டும்
என்பது உண்மையா?

நெருப்பைக் கடந்து செல்கிற
பழைய சாம்பல்
என்ன சொல்கிறது?

சந்தோஷங்களோடு வளர்கிற
மேகங்கள்
ஏன் இந்தளவு அழுகிறது?

## மறுபக்கம்

# விருதுகள் விரும்பியே வழங்கப்படுகின்றன!


எமக்கெல்லாம் எப்போதுமே அசௌகரிம் தருகின்ற ஒரு விஷயம் தகுதியற்றவர்களுக்கு விருதுகள், பரிசுகள், பட்டங்கள் போன்றன கலை இலக்கியத்துறையில் வழங்கப்படுகின்றன என்பதே! இலங்கையிலும் தமிழ் நாட்டிலும், அகில இந்திய ரீதியிலும் இதை நாம் கண்டு கண்டு; கண்டித்துக் கண்டித்துச் சலித்துப் போயிருக்கிறோம்.

அகில இந்திய ரீதியாக வழங்கப்படும் பாரதரத்னா, பத்மஸ்ரீ, பத்மபூசன், பத்மவிபூசன் போன்ற விருதுகளும் இதற்கு விதிவிலக்கன்று.

வழமைபோல இம்முறையும் வழங்கப்பட்ட மேற்படி விருதுகள் பலரது புருவத்தையும் உயரச் செய்துள்ளன. இலங்கையின் சிங்களப் பாடகர் அமரதேவா, சாஸ்திரிய சங்கீதத்திலும் திரை இசைப் பாடல்களிலும் பலரையும் கவர்ந்த கே.ஜே. ஜேசுதாஸ், திரைப்பட இயக்குநர் மணிரத்தினம், தமிழக நகைச்சுவை நடிகை மனோரமா ஆகியோருக்கு மேற்படி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கே.ஜே.ஜேசுதாஸ், அமரதேவா ஆகியோர் தமது துறை சார்ந்து குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

திரைப்பட இயக்குநர் மணிரத்தினம், மௌனராகம் திரைப்படத்தின் மூலம் கவனிப்பைப் பெற்றவர். அதற்கு முன்னரே அவர் சில படங்களை இயக்கியிருந்தாலும் பாரதிராஜா, பாக்கியராஜ், பாலுமகேந்திரா போன்றோர் ஏறத்தாழ ஒரே சமயத்தில் தொடர்ச்சியாகவும், குறுகிய இடைவெளிகளிலும் தமிழ்த் திரைப்படத்துறையில் குறிப்பிடத் தகுந்த சில மாற்றங்களை ஏற்படுத்தி வந்ததன் காரணமாக மணிரத்தினம் இன்னமொன்று காயாக இருக்க நேர்ந்தது. இந்த நிலைமை மௌனராகம் திரைப்படத்துடன் அற்றுப்போக அதற்குப் பிறகு வெளியான நாயகன் திரைப்படத்துடன் மணிரத்தினம் நட்சத்திர இயக்குனராக பரிணமித்தார். அவரது சகோதரர் ஜீ.வி.தமிழ்த் திரைப்படத்துறையின் முதலீடு, விநியோகம் என்பவற்றில் செலுத்திய செல்வாக்கும் இதற்கு ஒரு துணைக் காரணியாகும். நாயகனுக்குப் பிறகு வெளியான அக்னி நட்சத்திரம் அஞ்சலி, பம்பாய், உயிரே போன்ற படங்கள் மணிரத்தினத்தின் இருப்பை தமிழ்ச் சினிமாவில் மட்டுமல்லாது, ஒட்டுமொத்தமான இந்திய சினிமாவிலேயே ஸ்திரப்படுத்தின. மேற்கூறிய திரைப்படங்களினூடு அவர் வெளிப்படுத்திய "அரசியல்"" வர்க்கச் சார்பு போராட்டங்களை நாசூக்காக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் கொச்சைப்படுத்தும் நேர்த்தி என்பனவே இதற்கு முதன்மைக் காரணியாகும். அத்துடன் அகில இந்திய ரீதியாக ஒரே சமயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதற்கு தமிழைப் பொறுத்தவரை முன்னோடி இவரே இதற்கான அரசியல் பின்னணி பாரதூரமானதும், நம்மால் எச்சரிக்கையுடன் அணுக வேண்டியதுமாகும்.



அத்துடன் அவரது திரைப்படங்களின் வணிகரீதியான வெற்றிக்கு காரணமாக அமைந்தது அவரது நெறியாள்கை மாத்திரமன்று படத்தொகுப்பு, ஒளிப்பதிவு, கலை, இசை போன்றவற்றில் சமகாலத்தில் கோலோச்சிய அனைவரது பங்களிப்பையும் திறமையுடன் உள்வாங்கிக் கொண்டதுமாகும். இதன்மூலம் இங்கு நான் கூறவருவது யாதெனில் அவர் ஒரு நெறியாளர் என்பதைவிட திறமையான முகாமைத்துவப் பண்புகளையுடைய ஒரு நல்ல தொடர்பாளர் என்பதுதான் சாலவும் பொருந்தும் என்பதே! திரைக்கதை, திரைநாடகம், வசனம் போன்றவற்றில் மணிரத்தினத்தை விட திறமைசாலிகள் பலர் (உதாரணமாக பாரதிராஜா) உள்ளனர் என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்படல் வேண்டும்.

தமிழக நடிகை மனோரமா பல ஆண்டுகளுக்கு முன்னரே கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தவர். அகில உலக ரீதியாக அதிக எண்ணிக்கையான படங்களில் (ஏறத்தாள ஆயிரத்து ஐந்நூறு) நடித்தவர் மனோரமா.

இந்திய சினிமாவைப் பொறுத்தவரையில் நடிகைகள் பல தசாப்தங்களாக - அதுவும் காலகதியில் அதிகரித்து வரும் முக்கியத்துவத்துடன் - தாக்குப் பிடிப்பது அரிதிலும் அரிது. அதையும் தாண்டி நீண்ட பயணம் செய்து கொண்டிருக்கிறார் மனோரமா. அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட - அல்லது அவருக்கு தோதாக இனங்காணப்பட்ட - நகைச்சுவை பெண் பாத்திரம் (கோமாளி வேடம்) அதற்குக் கை கொடுத்தது எனலாம். கதாநாயகியாக அவர் விரல்விட்டு எண்ணக்கூடிய படங்களில் நடித்திருப்பினும் மனோரமா நகைச்சுவை நடிகையாகவே அடையாளப்படுத்தப்பட்டார். கதாநாயகியாக அவர் வளர்த்தெடுக்கப்பட்டிருப்பின் (அதற்காக clamour அவரிடம் இல்லை என்பது வேறு விடயம்) ஒரு சில ஆண்டுகளுக்குள் விலாசமற்றுப் போயிருப்பார்.

ஒரு காலத்தில் சிறந்த நடிகைகளாகவும், கவர்ச்சிக் கன்னிகளாகவும் போற்றப்பட்ட நடிகைகளுள் பலர் இன்று எங்கே? எந்த விதமான சமூக அந்தஸ்தோ, தனிநபர் பாதுகாப்போ அற்ற நிலையில் இரவலர்களாகவோ, பாலியல் தொழிலாளிகளாகவோ அவர்கள் ஒடுக்கப்பட்டுச் சீரழிக்கப்பட்டு விட்டனர். குறித்த ஒரு தலைமுறையைச் சேர்ந்த சில நடிகைகள் தற்கொலை செய்து கொண்டதையும் இங்கு நினைவு கொள்ள வேண்டும்.

இவையனைத்தையும் மீறி மனோரமா நின்று பிடிக்கிறார். இன்னும் சில ஆண்டுகளுக்கு தொடர்ந்து அவர் நின்று பிடிப்பார். அதற்கான சில விசேட தகைமைகள் அவரிடம் உள்ளன.

கொஞ்சம் கொஞ்சமாக அவரது நடிப்பில் (தமிழ்ப்பட நடிப்பு!) மெருகு அதிகரித்து வந்தது ஒரு காரணம்.

விரைவில் முதுமையை அடையாத அவரது உடல்வாகு மற்றொரு காரணம்.

தமிழ்த் திரைப்படத்துறையில் சகலருக்கும் பிரியமாக நடந்து கொள்கிறார். அவரை ஆச்சி என்று அன்புடன் அழைக்கிறார்கள். அந்தத் துறையின் நெளிவு சுழிவுகளை அறிந்து அதற்கொப்ப வளைந்து கொடுக்க அவரது அனுபவபூர்வமான அறிவு துணை செய்கிறது.

இவற்றுக்கும் அப்பால் அவர் ஒரு அப்பாவி! "ஜன்ங்களுக்குப் புடிச்சதைத்தானே நாம பண்ண முடியும்" என் வெகுளித்தனமாக்ச் சொல்பவர் அவர். அதில் பாசாங்கு இல்லை "அரசியல்" இல்லை. அவருக்கு தெரிந்ததை அப்பட்டமாக அவர் சொல்கிறார். தெரிந்தோ தெரியாமலோ அவர் இதுவரை காலமும் உதிர்த்த மிகச் சிறந்த நகைச்சுவை வசனம் அதுதான்!

தெரிவுக்குழு ஒரு பிழையும் செய்யவில்லை. மனோரமாவுக்கும் மணிரத்தினத்துக்கும் பாத்திரம் அறிந்தே பிச்சை கொடுத்திருக்கிறார்கள்! அவர்களது "அரசியல்"" அதற்குப் பின்னே ஒழிந்துள்ளது. என்பதை நாம் புரிந்து கொண்டால் போதும்.

ஆழ்வார்க்குட்டி

## பெண் நிலை



# தமிழ்ச் சூழலில் பெண்ணியச் சிந்தனை

பெண்ணியம் என்பது ஒரு சிலரின் குரல் என்றும் கோரிக்கை என்றும் நினைத்து ஒதுங்கி இருந்தவர்களும் ஏளனம் செய்தவர்களும் உடனடியாக விழித்துக் கொள்ள வேண்டிய சூழல் இன்று உருவாகியிருக்கிறது. இருபது ஆண்டுகாலம் தொடர்ந்த யுத்தம், அதன் விளைவுகள், மனித வாழ்வின் நெருக்கடிகள், அவலங்கள், வன்முறைக் கலாசாரம் என்பன தமிழ்ச் சூழலில் ஒருவகைப் புதிய கலாசார பண்பாட்டுச் சூழலை உருவாக்கியுள்ளது.

தந்தையையும், கணவனையும், புதல்வனையும் நம்பியிருந்த ஆண் தலைமைக் குடும்பங்கள் யுத்தத்தின் பயங்கர விளைவுகள் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளன. பெண்கள் தலைமையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. மரபுக்குள் கட்டுப்பட்டு கிடுகு வேலிக்குள்ளும் சமையலறைக்குள்ளும் இருந்தவர்கள் திறந்த வெளிகளிலும், அடிப்படை வசதிகள் அற்ற மண்டபங்களிலும் அகதிகளாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தமது வாழ்விடங்களிலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்பட்டிருக்கிறார்கள். யுத்தத்தின் முன்னணி வீரர்களாக்கப்பட்டுள்ளார்கள். புலம் பெயர்ந்த அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். பாலியல் வன்முறைகளுக்கு தினமும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். சிறுமிகள், முதியோர் என்ற வயது வேறுபாடின்றி பெண் என்ற அடிப்படையில் பல்வேறு அநீதிகளுக்கு ஆளாகின்றனர். சமுதாயம் பிளவுபட்டு உறவுகள் சிதறிக் கிடக்கின்றன. உரிமைகள் மறுக்கப்படுகின்றன. மொத்தத்தில் அன்றைய வாழ்வுச் சூழல் இன்றில்லை. காலம் நகர்கிறது. ஆனால் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் அடிமைத்தனமும் அடக்குமுறைகளும் வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்றன.

சமூகத்தின் பண்பாட்டினை பரம்பரை பரம்பரையாக பேணுவதிலும் வளர்ப்பதிலும் பெண்களின் பங்களிப்பே முதன்மைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது பெண்களே சமூகத்தின் முக்கியமான பண்பாட்டுக் காவிகளாவார்கள். அடையாளங்களும் சின்னங்களும் பெண்களுக்கே உரியவையாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக தமிழ் பெண் ஒருவரையும் சிங்களப் பெண் ஒருவரையும் மிக இலகுவாக வேறு பிரித்து அறிந்து கொள்ளலாம். பொட்டும், பூவும், அணிகலன்களும், சேலை உடுத்தும் முறையும் போன்ற புறத்திலிருந்து வெளிப்படும் சின்னங்கள் பெண்களை சாதி, இனம், மதம் என்ற அடிப்படையில் வேறுபடுத்தி அறியக்கூடியவையாக இருக்கிறது. ஆனால் ஒரு சிங்கள ஆணுக்கும், தமிழ் ஆணுக்கும் இடையே இவ்வாறான வேறுபாடான அம்சங்கள் வெளிப்படையாகத் தெரிவது இல்லை. அல்லது அரிது எனலாம். சடங்குகளிலும், கலாசார நிகழ்வுகளிலும் கோயில் சார்ந்த கருமங்களிலும் பெண்களே கலாசாரக் காவிகளாக விளங்குகின்றனர்.

எமது சமுதாயத்தில் மட்டுமல்ல எல்லாச் சமூகங்களிலும் இதுவே நிலைமையாக இருக்கிறது. ஆணாதிக்க சமூக அமைப்பின் நிலவுகைக்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்ட அத்திவாரங்களாக நாம் இவற்றைக் கொள்ள முடியும். சமூகத்தின் சில கட்டமைப்புகள் அவை பயன்தராதவை, தீங்கு விளைவிப்பவை, அடக்க முறைப்படுத்துபவை, என்று அறியப்படினும் கூட, உடைப்பதும், தூக்கி எறிவதும் சுலபமானதல்ல.

புதிய சூழல் மாற்றத்தை எதிர் கொள்ளும் போது பெண்கள் பல்வேறு கஷ்டங்களுக்கும் உள்ளாகின்றனர். பெண்களைப் பொறுத்தவரை மரபை மீறுவதும் அடக்குமுறைகளை உடைத்து எறிவதும் சுலபமான காரியங்களல்ல. அடக்குமுறை பெண்களின் பல்லாண்டு காலச் சுமை! கலாசாரங்களாலும், சடங்குகளாலும் இலக்கியங்களாகவும் பெண்களைச் சுற்றி அமைக்கப்பட்ட வேலிகள் இலகுவாக அறுத்தெறியப்படக் கூடியவை அல்ல.

பெண்ணியச் சிந்தனை என்ற எண்ணக்கரு அதன் உண்மையான அர்த்தத்திலும் இன்று எல்லோராலும் விளங்கப்பட வேண்டும். இது எம் முன்னுள்ள பெரிய பொறுப்பாகும். பெண்ணியச் சிந்தனை என்பது தொடர்ச்சியான வாசிப்பு, கலந்துரையாடல்கள், வாழ்நிலை அனுபவங்களின் மூலமே வளர்த்தெடுக்கப்படக் கூடியது. சமூகத்தை புரிந்து கொண்டவர்கள், இலக்கியவாதிகள் போன்றோர் பெண்ணியச் சிந்தனையின் அர்த்தத்தை அதன் எல்லாப் பரிமாணங்களையும் புரிந்து கொள்ள வேண்டும். பெண்ணியச் சிந்தனைகளின் வளர்ச்சிக்கு வெகுசனத் தொடர்பு சாதனங்களின் பங்களிப்புகள் மிக முக்கியமாகும். மக்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பூடகமான பத்திரிகைகள் பெண்ணியச் சிந்தனை உருவாக்கத்தில் அதன் வளர்ச்சியில் பெரும்பங்காற்ற வேண்டும். இந்த வகையில் நிகரியும் தொடர்ந்து பங்காற்றும். நிகரியினூடு நாம் தொடர்ந்து பெண்ணியச் சிந்தனைகள், கருத்துக்களை பகிரலாம்.

எனவே தவிர்க்க முடியாதபடி புதிய சூழலை ஏற்று, புதிய சூழல் மாற்றங்களுக்கேற்ப பெண்கள் தம்மை உருவாக்கிக் கொள்வது தவிர்க்க முடியாதது.

நமது தமிழ்ச் சூழலின் பெண்ணிய சிந்தனைகள் கருத்துக்கள் தொடர்பாக இப்பத்தியில் தொடர்ந்து கருத்துக்களைப் பரிமாறலாம் என்று நினைக்கிறேன். வாசகர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்று இதனைச் சிறப்பாகச் செய்ய உதவுவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

-ஔவை

## எழுத விடு...

# "மீட்பரிடம்" சில கேள்விகள்

மேல் மாகாண தமிழர்களின் மீட்பராக (Messiah) மனோகணேசன் உருவாக்கப்பட்டதன் பின்னால் இருந்த பல்வேறு சக்திகளும் அந்த சக்திகளின் பின்னால் இருந்த நலன்களும் இன்றைய நிலையில் பேசாப் பொருளாகப் போய்விட்டன.

இலங்கையின் தமிழ் அரசியலைப் பொறுத்தவரை வடக்கு கிழக்கு அரசியல், மலையக அரசியல் என்பனவற்றுக்கு வெளியில், அந்த புவியியல் பரப்புக்கு அப்பால் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான தேவை பல காலமாக இருந்து வந்தது உண்மை. இதனை ஒரு கருத்தாக்கமாகவும் அரசியல் நடவடிக்கையாகவும் ஆக்க வேண்டியிருந்தது. அமைப்பு வடிவம் கொடுக்க வேண்டிய தேவை இருந்தது. ஆனால் அது எவ்வாறு, எந்த அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும். அதன் நீண்டகால குறுங்கால வேலைத்திட்டம், என்பன பற்றி ஆராயப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், தேர்தல் காலத்தில் இந்த சந்தையை உடனடியாக பற்றிப்பிடித்து வியாபாரத்தை ஆரம்பித்தவர் மனோகணேசன். தற்போது எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளை வியாபார விளம்பரங்களாக்கி விற்று சந்தையில் இடத்தை பிடித்துக்கொண்டார் என்று தான் கூறவேண்டும்.

உண்மையில் கொழும்பு தமிழ் வர்த்தக சமூகத்தில் பெரும் இடத்தை கைவசப்படுத்திக்கொண்டிருக்கும் மொட்டை வெள்ளாளர்களுக்கு. தமது வியாபார நலன்களை பாதுகாக்கவென அரசியல் செல்வாக்கு கொண்ட ஒருவர் இல்லாமல் இருந்தார். பி.பி.தேவராஜ் போன்றவர்களும் காலாவதியாகிப் போய்க்கொண்டிருந்த நிலையில் ஒருவரை புதிதாக களமிறக்க தீர்மானித்தனர். தமது சாதிச் சங்கத்திலேயே இதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றிக் கொண்டனர். அதன் அடிப்படையில் மனோகணேசனுக்கு தேர்தலின் போது ஒட்டுமொத்த வியாபாரிகளும் வாரிவாரி இறைத்தனர்.

மேல்மாகாண தமிழர்களின் நலன், அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தின் தேவை என்கிற அரசியலை பிரச்சார தந்திரோபாயமாக்கிக் கொண்டு களமிறக்கப்பட்டாலும் முழு ஆட்பலத்திற்கும், அர்ப்பணிப்புக்கும் இந்த மேல்மாகாணத்திலுள்ள அடிப்படைப் பிரிவினரான உழைக்கும் தொழிலாளர்களும், ஏழை சேரிப்புற மக்கள் பிரிவினரைச் சேர்ந்த இளைஞர்களுமே நின்றனர்.

இப்போது நமக்கு உள்ள பிரச்சினை இது தான், இப்படியொரு வலதுசாரி பிரதிநிதி ஒருவர், ஒருபுறம் நகர்புற-மேட்டுக்குடி-உயர் சாதியினரின் நலன்களையும், மறுபுறம் நகர்புற-உழைக்கும் வர்க்க-அடக்கப்படும் சாதியினரின் நலன்களையும் ஒரே நேரத்தில் பாதுகாக்க முடியுமா? அப்படி ஒரு வரலாற்று அனுபவம் நமக்குத்தான் உண்டா? அடக்குவோரினதும், அடக்கப்படுவோரினதும் நலன்களையும் ஒரே நேரத்தில் பாதுகாப்பதாக உறுதியளிப்பதை நம்புமளவுக்கு "மேல்மாகாண தமிழ் மக்கள்" இன்னமும முட்டாள்களாகவில்லையே.

மனோகணேசனின் "தடாலடி சாகசத்தனங்களையும்", புல்லரிக்கச் செய்கின்ற அரசியல் முழக்கங்களையும் வரலாற்றில் பல தடவைகள் கண்டு அழுத்துப்போன விடயங்கள். இரண்டு கோயில்கள் கட்டுவது, பத்து கோயில்களை திருத்துவது, ஐம்பது மலசல கூடங்களை கட்டுவது, இரண்டு பாடசாலைகளுக்கு நிதி வழங்குவது போன்ற இன்னோரன்ன தேவைகள் தான் மேல்மாகாண மக்களின் நலன்கள் என்றால் அதை மனோ கணேசன் திறம்படச் செய்துவருகிறார். அவர்களின் அடிப்படை வாழ்நிலையில் மாற்றங் காண, அவரது காலத்தில் செய்து காட்டுவதையே அவர் சவாலாக எடுத்துக் கொள்ள வேண்டியவை.

குறிப்பாக, இதே மேல்மாகாணத்தில் தமிழர்கள், சிங்கள சமூகத்தினர் அனுபவிக்கின்ற அடிப்படை நலன்களை அனுபவிக்குமளவுக்காவது அடிப்படையில் மாற்றங்களைக் கொண்டு வந்தாலே அவரது அளவுக்கு பெரியதொரு சாதனையாகக் கொள்ளலாம். தமிழர்களாக இருப்பதாலேயே முகம் கொடுக்கின்ற இன்னல்களையும், பாரபட்சமான அரச நடத்தைகளையும் குறைத்தாலே பெரிய விடயமாகக் கருதுவோம். மனோ கணேசனின் வெற்றிக்காக தமது உழைப்பையும், சக்தியையும் கொடுத்த பிரிவினரின் அவாவும் அது தான்.

-அருந்ததியன்


அன்புடன் நண்பர்களுக்கு,

## செல்வியின் நினைவுப் பதிவு



செல்வியின் (செல்வநிதி தியாகராஜா) நினைவாய் அவரது பன்முக ஆளுமைகளையும், சிந்தனைகளையும், பதிவு செய்ய விரும்புகின்றோம். செல்வியினால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், தினக்குறிப்புகள் மற்றும் அவரின் ஓவியங்கள், அவர் எடுத்த புகைப்படங்கள், அவரது புகைப்படங்கள், அவரது ஏனைய எழுத்துப்பிரதிகள் தங்களிடம் இருப்பின் அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறோம். மூலப்பிரதிகள் தங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதி அளிக்கிறோம். செல்வி பற்றிய நினைவுகளையும், உங்கள் படைப்புகளையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

**தொடர்புகளுக்கு**

செல்வி படைப்புகள் தொகுப்பு
UYIRNIZHAL
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, FRANCE.
e-mail: EXILFR@aol.com

... மானுட நேயம் நோக்கிய வாழ்வை படைத்திட
முயல்கையில் எத்தனை தடைகள். கொடூரம் மிகுந்த
விழிகள் தொட வாழ்தலில் கசப்பு நெஞ்சை
நெருடும். மனிதம் மறந்து சவமாய் கிடந்து
வாழ்தலில் எனக்குப் பிரியமேயில்லை...


-செல்வி



## வெளிவந்து விட்டது!

இன்றைய நம் காலத்தின் சமூக
அசைவிற்கான விமர்சன ஆய்விதழ்

## அசை




தேடலையும், அறிதலையும் தூண்டுவதற்கும் சமூக அக்கறையை வளர்த்தெடுக்கவும், இன்று புதிதாய் தோன்றிக் கொண்டிருக்கும் அரசியல் கலாசார சமூக முகிழ்ப்புக்களைப் பற்றிய ஆய்வுகளையும் விமர்சனப் பார்வைகளையும், கூரிய அவதானிப்புக்களையும் பதிவு செய்யும் வெளியீட்டுக் களமாக அசை வெளிவருகின்றது.

**பிரதிகளுக்கு**

MOONDRAVATHU MANITHAN
37/5, Vouxhall lane
Colombo - 02

**தொடர்புகளுக்கு:**

Assaie
45, Rue davy
75017 Paris
France

E.mail : Assaie@hotmail.com
தொலைபேசி / தொலைநகல் : 00331 42633176

# வேலியைக் கடக்கிறது காற்று!

## ஈழப்போராளிகள் பற்றிய ஒரு திரைப்படம்

-றேவ்

2000ம் ஆண்டளவில் படத் தயாரிப்பின் போதே பெரும் சர்ச்சைகளுக்கு உள்ளாகிய காற்றுக்கென்ன வேலி திரைப்படம் தமிழ் தீவிரவாதத்துக்கு ஆதரவான படம் என்ற முத்திரை குத்தப்பட்டு பின்பு தடைசெய்யப்பட்டது. இதனை இயக்கிய புகழேந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டார். பலத்த போராட்டத்திற்குப் பின்னர் இப்போது இத்திரைப்படம் வெளிவந்துள்ளது.

வழமையாக போராளிகளை பயங்கரவாதிகளாகச் சித்திரித்து, அவர்களை மனித நேயம் அற்றவர்களாக, கடத்திக் கொண்டு போய் சித்திரவதை செய்யும் கொடூரக் கும்பலாக காட்சிப்படுத்தி, கடைசியில் அந்தத் தீவிரவாதிகளை கொலை செய்யும் தேசபக்த கதாநாயகன்களை அறிமுகப்படுத்திய இயக்குனர்கள் பலர் உள்ளனர். தங்களது நலன் சார் வர்க்கத்தின் ஊதுகுழல்களாகச் செயற்படும் இந்த இயக்குனர்கள் மக்களுக்கான, அவர்களது உரிமைகளுக்கான போராட்டமே இல்லை என்பதைப் போல் கதையளந்து மக்களின் உரிமைக்காக போராடு-பவர்களின் உயிர்களின் மேலிருந்து இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து தாம் சார்ந்த வர்க்க நலனைப் பூர்த்தி செய்த மகிழ்ச்சியைக் கொண்டாடி-னார்கள்.

இதன் மூலம் யதார்த்தத்திலும் இப்படியே மக்களுக்காகப் போராடுபவர்களை ஒடுக்கிய இந்திய அரச இயந்திரத்திற்குத் துணை நின்றார்கள். இதற்கு தமிழ் சினிமா காத்திரமான பங்களிப்பினை வழங்கியுள்ளது.

இப்படிப் போராளிகளை தீவிர-வாதிகளாகச் சித்திரித்த படங்களில் உயிரே, ரோஜா, குருதிப்புனல் போன்ற படங்கள் முக்கியமானவை.

மக்களின் உணர்வுகளை இனம் காட்டாத, அவர்களின் போராட்டத்-தினைப் பற்றிக் கதைப்பதாக சொல்லிக் கொண்டு அவற்றினைச் சிதைத்த இயக்குனர்களுக்கு மத்தியில் ஒரு விடுதலைப் போராளியின் கதையை, அதுவும் இந்தியாவில் இந்திய அரசினால் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினரது கதையை போராளி என்ற நிலையில் வைத்து சித்திரிப்பதானது ஒரு சவால் நிறைந்த விடயமே. காற்றுக்கென்ன வேலி திரைப்படத்தின் இயக்குனர் புகழேந்தி இந்த சவால்களைக் கையிலெடுத்து வெற்றியும் அடைந்துள்ளார். இதற்காக அவரை முதலில் பாராட்ட வேண்டும்.

தாய் மூவீஸ் மேக்கர்ஸ் வழங்கியிருக்கும் இத்திரைப்படத்தினை தயாரித்தவர் வெள்ளையன். இயக்கம் புகழேந்தி தங்கராஜ் இசை இளையராஜா.

மனிதர் பற்றிய மனிதத்தின் அடிப்படையில்

வாழ்வதை மறந்தோம்.

இது சிவரமணியின் கவிதை வரிகள் இதையே இப்படத்திற்கான கருத்தளமாகக் கொள்ளலாம்.

ஒரு ஈழப் பெண் போராளி காயமடைந்து சிகிச்சைக்காக இன்னும் இரு போராளிகளுடன் தமிழ் நாட்டின் கரை ஒதுங்குகிறார். இதன் பின் அங்கு அவர் சிகிச்சை பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் கடைசியில் அங்கிருந்து சிகிச்சை முடிந்து ஈழம் நோக்கி திரும்புவதும் தான் கதை.

**ஆயினும் கதையை மிகவும் நேர்த்தியாகவும் யதார்த்தமாகவும் செய்துள்ளார் இயக்குனர் புகழேந்தி. பெண் போராளி தனது காலில் பட்ட காயத்தினால் கால் கழற்றப்படுவதைத் தவிர வேறுவழியில்லாத நிலையில் இருந்தும் கூட தான் செத்தாலும் பரவாயில்லை. ஆனால் கால்** கழற்றப்படக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதென்பது பார்ப்பவருக்கு சிலவேளைகளில் அந்த மருத்துவரைப் போன்று ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தாலும் அதன் பின்னாலுள்ள அரசியல் என்பது சரியாகக் கொண்டுவரப்பட்டிருப்ப-தானது இயக்குனரின் வெற்றியே.

இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு அதனால் தனக்குத் தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொண்ட தனது ஆசிரியையின் மரணத்திற்கு, அவருக்கு கால் இல்லாமல் போனதே காரணம் என்று சொல்லும் போராளிப் பெண் தனக்கு இவற்றிலிருந்து தப்புவதற்கு கால் வேண்டும் என்று சொல்கிறாள்.

அதே நேரம் இந்திய சட்டத்திற்கு மதிப்பளித்து மருத்துவர் ஒருவர் போராளிக்கு சிகிச்சை அளிக்க மறுப்பதும், பின்பு மனிதாபிமான அடிப்படையில் சிகிச்சை அளிக்க முன்வருவதும் ஒரு மருத்துவருக்கு இயல்பிலேயே இருக்க வேண்டிய மனித நேயம் சட்டத்தினால் விலங்கிடப்பட்டு தடுக்கப்படுகின்ற போது, மனிய நேயத்திற்கு முன்னால் தண்டனைகளை கொடுக்க மட்டுமே தெரிந்த சட்டம் ஒன்றுமில்லாததாகிப் போகின்றது.

இறுதியில் நியாயமான போராட்டத்தினைப் புரிந்து கொள்ளும் மருத்துவர் தனது நாட்டின் சட்டங்களை மீறுவதோடு அல்லாமல் போராளிகளுக்கு உதவி அளிப்பதற்காகப் போராடுவதும் மனிதாபிமானத்திற்கான போராட்டம் மட்டுமானதா அல்லது போராட்டம் சார்ந்த நியாயத்தன்மை நோக்கியதா என்ற கேள்வியில் தளும்புகிறது.



# காற்றுக்கென்ன வேலி

> தமிழ்நாடு எனது தாய் நாடு என்று வந்தேன். ஆனால் இது என் நாடல்ல.



அதே நேரம் பயங்கரவாதி என்று இந்திய அரசினால் அரசு சார் ஊடகத்தினால் பிரச்சாரப்-படுத்தப்படுபவர்களான தமிழ் மக்களுக்காகப் போராடுபவர்களை போராளிகளாக அங்கீகரிக்க கோரும் ஒரு முயற்சியும் இப்படத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவிற்கு சிகிச்சைக்காகச் சென்றிருந்த பெண் போராளிக்கு உதவியாகச் சென்ற இரு போராளிகளில் ஒருவனைப் பார்த்து தீவிரவாதி என்று கூறும் போது போராளிகள் என்று திருப்பிச் சொல்வதானது ஈழப் போராளிகளின் தார்மீகக் கோபத்தினை வெளிப்படுத்தும் ஒரு காட்சியாகும்.

**தமிழ்நாடு எனது தாய் நாடு என்று வந்தேன். ஆனால் இது என் நாடல்ல. என் நாடு அங்கே இருக்கிறது என்று வெறுப்புற்றுப் பெண் போராளி சொல்வதும், தமிழைப் பிழையாக எழுத அவர்கள் தமிழ் நாட்டைச்** சார்ந்தவர்களல்ல, உண்மையாக மொழியை இனத்தை நேசிக்கின்ற ஈழத்தவர்கள் என்பது போன்ற வசனங்கள் இன்றைய தமிழ் நாட்டு மக்களின் சிந்தையை கிளறக்கூடிய வரிகள்.

போராளிக்கு உதவி செய்யும் மருத்துவரை கைது செய்து கொண்டு போய் சித்திரவதை செய்யும் பொலிஸாரிடம், சித்திரவதைக்குள்ளான மருத்துவர் காந்தி இருந்திருந்தாலும் இதனையே செய்திருப்பார் என்று தெரிவிப்பதும் காந்தியை உதாரண புருஷராகக் கொள்பவர்களிடையே மனிதாபிமானத்தினையும், மனித நேயத்தினையும் வலியுறுத்துவதற்காக சொல்லப்படுகின்றது. அதே நேரம் பத்திரிகைக்காரர்கள் மருத்துவரை (ஒரு தேசபக்தனின் மகனை) இந்திய தேசத்துரோகியைப் போன்று சித்திரிப்பதும் அவரிடம் இருந்து ஆயுதங்கள் போன்றவற்றை எடுத்ததாக அறிக்கையிடுவதும் இந்தியப் பத்திரிகைகள் இந்த விடயங்கள் தொடர்பாக யாருடைய நலனில் இருந்து **செயற்படுகின்றன என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. தடா சட்டத்தினை விட மிகவும் மோசமான பொடோ சட்டம் அமுலுக்கு வர இருக்கும் வேளையில் இச்சட்டங்கள் யாரை நசுக்கப் பயன்படுகின்றது என்ற** தெளிவுக்கு வருதல் அவசியம்.

பொடோ போன்ற சட்டங்கள் அடிப்படை பத்திரிகைச் சுதந்திரத்தினையே மறுக்கின்ற போது இந்தியப் பத்திரிகையாளர்கள் தம்மை விமர்சிக்கின்றது என்பதற்காக இப்படத்தினை கண்டுகொள்ள-வில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அதே நேரம் அநேகப் பத்திரிகைகளும் இந்திய அரச இயந்திரத்திற்கு முதுகு சொறிபவர்கள் என்பதால் ஈழப்போராட்டத்தினை ஆதரிக்கும் போராளிகளாக அங்கீகரிக்கும் இப்படத்தினை கண்டும் காணாதவர் போல் இருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

இத்திரைப்படத்திற்கு உயிர் கொடுப்பது போன்று பாரதியாரின் பாடல்கள் காணப்படுகின்றன. ஒரு போராளி பாரதியின் பாடலை அழகாகப் பாடுவதாக சித்திரித்திருப்பது போராளியை ஒரு சாதாரண மனிதனாக காட்சிப்படுத்த எடுத்த முயற்சியே ஆகும். வழமையாக எல்லா ஊடகங்களும் போராளிகளை அந்தச் சமூகங்களிற்கு வெளியில் இருந்து குதித்துக் கலகம் செய்பவர்களைப் போன்றே சித்திரிக்கின்றன. வெறிபிடித்து அலையும் ஓநாய்களைப் போன்று சித்திரிக்கும் இந்த ஊடகங்கள் இந்தப் போராளிகள் அவர்களுடைய மக்களுக்கான உரிமைகளுக்காக உயிரையும் கொடுக்கத் தயாரானவர்கள் என்பதை திட்டமிட்டே இருட்டடிப்புச் செய்கின்றது. இந்த வகையில் போராளியை அந்த மக்களின் உரிமைக்காகப் போராடும் மனிதனாகச் சித்திரித்ததும் இயக்குனரின் நல்ல முயற்சியே.

**படத்தின் இறுதிக் கட்டத்தில் சிறிய போட்டில் தப்பிச் செல்லும் போராளிகளைப் பார்த்து பொலிஸ் அதிகாரி அவர்களை கடல் எல்லைக்குள் வைத்துப் பிடித்துவிட முடியும் என்று தெரிவிக்கின்ற வேளை மருத்துவரிடம் இருந்து வெளிவரும் வார்த்தைகளான 'உங்களுக்கு இது கடமை அவர்களுக்கு வாழ்க்கை. அவர்கள் கடல் எல்லையைக் கடந்து விடுவார்கள்" என்பது ஈழப்** போராளிகளின் வாழ்க்கையின் உணர்வு நிலையை எடுத்தியம்புகிற வார்த்தைகள்.

இலங்கையிலேயே போராளிகளை ஆகாயத்தில் இருந்தோ, அல்லது வேற்றுக் கிரகத்தில் இருந்தோ குதித்தவர்களைப் போன்றே தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்திக் காட்டும் ஊடகங்களும், அரசியல்-வாதிகளும் அவர்களை வெறும் பயங்கரவாதிகள் என்று பிரச்சாரப்-படுத்துவதன் மூலம் அவர்களின் போராட்டத்தினை மழுங்கடிக்க முயன்றிருக்கின்றன. இந்த நேரத்தில் ஈழத்தமிழர்களுக்கு என்று பிரச்சினைகள் இருக்கின்றது. அவர்களுக்காகப் போராடுபவர்களை போராளிகள் என்று அங்கீகரிக்கக் கோரும் இப்படம் ஈழத்தமிழர்களை உண்மையில் மகிழ வைத்திருக்கும்.

அதேநேரம் இப்படத்தின் பலவீன அம்சங்கள் பற்றி ஆராய்தலும் அவசியம்.

ஈழத்தில் வாழும் ஒரு பெண் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்கொலை செய்து தான் ஆக வேண்டுமா? இன்றும் பெண்ணின் பெருமையைப் பேசுவதாக நினைத்துக் கொண்டு முட்டாள் தனங்களுக்கு வழிகாட்டுதலை அனுமதிக்கப் போகிறோமா?

இப்படித் தற்கொலை செய்து தான் ஒரு பெண் தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இல்லை. அப்படியாயின் ஈழத்தில் வாழும் எத்தனை பெண்கள் தற்கொலை செய்திருக்க வேண்டும். இனிமேலாவது முட்டாள்தனங்களுக்கு விடை அளிப்பது நல்லது.

அதே நேரம் இப்படியான கருத்துக்களை இட்டு போராடும் பெண்களும் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். இன்று போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் நாளை ஒரு தீர்வினை நோக்கி நகரும் பட்சத்தில் மீண்டும் அடிமை நிலைக்குச் செல்வதற்கு இப்படியான கருத்துக்கள் வழிகோலும் வாய்ப்பு உள்ளது. அதற்கு அடிப்படையாக இப்படியான உடல் ரீதியான கற்பினைக் கோரும் கருத்துக்களை நிராகரித்தல் அவசியம்.

அதே நேரம் சட்டத்தினை அமுல்படுத்தும் பொலிஸ்காரனிடம் மனித நேயத்தினைக் கோரும் இப்படம் உண்மையான தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை எடுத்தியம்ப மறந்து விடுகிறது. மனிதநேயமிக்க மருத்துவரும் அவரது தாயாரும் மட்டுமே மனிதநேயத்திற்கான எடுத்துக் காட்டாகிப் போகிறார்கள். இங்கு நல்ல தலைவர்கள் இல்லை. ஆனால் சில நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள் என்று கூறியதன் உள்ளார்ந்து இவர்கள் இருவரும் மட்டுமே வந்து போகிறார்கள்.

மொத்தத்தில் படம் மனித நேயத்தினைக் கோரினாலும் மனிதநேயம் ஹீரோயிசத்தினால் நிரப்பப்படுவது அல்ல என்பதைப் புரிதலும் அவசியம். ஒட்டுமொத்த மக்களின் நேசமாக இருக்கப் பெறல் வேண்டும்.

அதே நேரம் யாழ்ப்பாணத்து தமிழை கதைப்பதாக நினைத்து தமிழையும் துன்பத்திற்குள்ளாக்காமல் விட்டிருக்கலாம்.


**ஆயினும் வேலியைக் கடந்து காற்று ஓரளவிற்காகவது வெளிவந்திருப்பதால் பலவீனங்களுக்கு அப்பால் இந்த வெற்றியைப் பாராட்டுதல் அவசியமாகிப் போகின்றது.**

○

# அமைதி வழியில் தீர்வு கிடைக்குமானால் மகிழ்ச்சியே !

**சு.ப.தமிழ்ச்செல்வன்**
**விடுதலைப் புலிகளின்**
**அரசியற்துறைப் பொறுப்பாளர்**

நேர்கண்டவர் : என்.ஜீவேந்திரன்



***தமிழ்ச்செல்வன் அவர்களே, புதிய சூழல் தோன்றியிருக்கின்றது. குறிப்பாக சமாதானத்திற்கான வாய்ப்புகள் தோன்றியிருக்கின்றது. இது குறித்து நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?***

என்னைப் பொறுத்தவரை இது சமாதான நடவடிக்கையின் ஒரு ஆரம்ப கட்ட நடவடிக்கை தான். தொடர்ந்து இலங்கை அரசாங்கம் உறுதியுடன் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மூலம் சமாதானம் நல்லபடியாக வரும் என்று நினைக்கிறேன்.

***புதிய அரசாங்கம் சமாதானத்தை நேர்மையாக நிலைநாட்டுமென நீங்கள் நினைக்கின்றீர்களா?***

தற்போது பொருளாதாரத் தடை எனும் சிறுதளர்வைத் தான் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கின்றது. இந்த நடவடிக்கை நல்ல முயற்சியாக வரவேற்கக் கூடியதாக இருக்கின்றது. தொடர்ந்தும் பொது மக்கள் இயல்பு வாழ்கைக்கு வர வேண்டுமாக இருந்தால் எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்துத் தடைகளையும் நீக்கி முழுமையான போர் நிறுத்தம் வந்து இரண்டு தரப்பினருக்கிடையில் இருக்கும் பகைமை, சந்தேகம் நீக்கி எமது மக்கள் வாழக்கூடிய ஓர் இயல்பு நிலை, அதாவது சிறிலங்காவில் சிங்கள மக்கள் எப்படி வாழ்கின்றார்களோ அதே போன்ற வாழ்க்கை எமது மக்களுக்கும் வரவேண்டும். ஒரு முழுமையான தடை நீக்கமும், முழுமையான போர் நிறுத்தமும் வந்தால் தான் மக்களுடைய இயல்பு நிலை ஒரு சுமூக நிலை காணும்.

***இதுவரைகாலமும் போராட்டத்தின் மூலம் அல்லது தனிநாட்டுக் கோரிக்கையுடனான போராட்டத்தின் மூலமே தீர்வைக் காண நீங்கள் விரும்பினீர்கள். இப்போது பேச்சுவார்த்தை மூலமான தீர்விற்கு முன்வந்திருக்கிறீர்கள். இந்தமாற்றம் ஏன்?***

முக்கியமான கேள்வி. எங்களுடைய அமைப்பைப் பொறுத்த வரை நாங்கள் அரசியல் இராணுவ ரீதியாக ஒரு பலம் பெற்ற அமைப்பு. எங்களுடைய இலட்சியம் ஒரு அரசியல் இலட்சியம். தமிழ் மக்களின் அபிலாஷைகள், உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும். இராணுவ ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ வென்றெடுக்கப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அரசியல் ரீதியாக, அமைதி வழியிலே தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்குமாக இருந்தால், அழிவின்றி யுத்தமின்றி அடைவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அப்படி அடைவதில் எமது தலைவரும் மிகுந்த எதிர்பார்ப்போடு இருக்கின்றார்.

***இப்போது புதிதாக வந்துள்ள அரசாங்கம் நியாயமாக செயற்படுகின்றதென நீங்கள் நினைக்கிறீர்களா?***

தற்போது உள்ள புதிய அரசு, நாங்கள் நம்பிக்கை கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. காரணம் கடந்த அரசியலில் ஏற்பட்ட செயற்பாடுகளை, பிரச்சினைகளை ஒரு பாடமாக கொண்டு ஆட்சி பீடம் ஏறியிருக்கின்றது. குறிப்பாக சிங்கள மக்கள் ஒரு சமாதானமான தீர்வு, தமிழ்மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் தங்களது ஏகோபித்த ஆதரவை தெரிவித்து இவர்களை ஆட்சி பீடம் ஏற்றியிருக்கின்றார்கள். அந்த வகையில் இந்த புதிய அரசு மக்களது ஆணையை புறம் தள்ளுவது கஷ்டமாக இருக்கும். ஆகவே அந்த வகையில் இந்த புதிய அரசு நம்பிக்கையான ஓர் நிலையைக் கட்டியெழுப்பி தமிழ் மக்களின், பிரச்சினையின் நியாயமான அபிலாஷைகளை, அவர்களது உரிமைகளை வென்றெடுக்க பக்கபலமாக இருக்கும் என்றே நம்புகின்றோம்.

***இதே சமயம் ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க இருக்கிறார். பிரதமராக வேறுகட்சியை சேர்ந்தவர் இருக்கிறார். இந்த நிலையில் இவர்கள் இருவருக்குமான இழுபறிகள் அல்லது இரு வேறுகட்சிகளுக்கான பிரச்சினைகள் இந்தச் சமாதானத்தை பாதிக்காதென நீங்கள் நினைக்கின்றீர்களா?***

ஆம், இருவேறு கட்சிகள் இரு முனைகளில் தான் நிற்கின்றன. இருந்தாலும் இந்தத் தீவிலே வாழும் அனைத்து இனத்தவர்களும் ஏகோபித்த அளவில் அமைதி, சமாதானத்திற்காக வாக்களித்து ஒரு புதிய அரசைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அது மட்டுமல்ல சர்வதேச சமூகமும் அமைதி வழியிலான சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் பக்கபலமாக நிற்பதால் இரண்டு கருத்துக்களையும் தூக்கி எறிந்து புறந்தள்ளி சந்திரிகா இந்த சமாதான முயற்சியைக் குழப்புவார் என்று நான் நம்பவில்லை. குழப்ப முற்பட்டாலும் அது வலுவான நிலையில் நிற்காது. சமாதான முன்னெடுப்புகளை சிறிலங்கா அரசு எடுத்துச் செல்வதற்கு அவா ஒத்துப் போக வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கின்றது.

***செப் 11ம்திகதிக்கு பின்னரான நிலைமைகள். குறிப்பாக அமெரிக்கா தாக்குதலுக்கு பிறகான உலக நிலைமைகள் காரணமாகத்தான் நீங்கள் பயந்து அழுத்தத்திற்கு உட்பட்டு பேச்சுவார்த்தைக்கு வந்திருப்பதாக கூறப்படுகின்றது. நீங்கள் இந்த கருத்திற்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?***

அது தவறான கருத்து. ஏனென்றால் நாங்கள் இப்போது தான் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகின்றோம் என்பதல்ல. எமது தலைவர் ஒவ்வொரு காலகட்டத்திலும் சமாதானத்திற்கான அமைதிக்கான வேண்டுகோளை பல தடவை விடுத்திருக்கின்றார். நாங்கள் பல அமைதிப் பேச்சுக்களை நடத்தி இருக்கின்றோம் அதனுடைய தொடர்ச்சி, அதாவது தமிழ் மக்களுடைய பிரச்சினையை பேசித் தீர்க்கக் கூடிய வாய்ப்பு இருந்தால் அது எல்லோராலும் வரவேற்கப்படக் கூடும், என்ற நிலையில் ஒரு தொடர்ச்சியான நிலைப்பாட்டில் தான் சமாதானப் பேச்சுக்கள் நடக்கின்றது. அதிலும் குறிப்பாக கடந்த அரசாங்கத்திற்கு மக்கள் சமாதான ஆணையை வலுவாகக் கொடுத்திருந்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே தான் எமது தலைவர் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை மேற்கொண்டு எம்மிடமிருந்த நீண்ட காலக் கைதிகளை விடுவித்து ஒரு நல்லெண்ண நடவடிக்கையை சர்வதேச சமூகத்திற்கும், சிங்கள மக்களுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் தெரிவித்திருக்கிறார்.

***நல்லெண்ண நடவடிக்கையாக நீங்கள் பத்துக் கைதிகளை விடுதலை செய்திருக்கின்றீர்கள் இதன் நோக்கம் என்ன? எதற்காக இதைச் செய்தீர்கள்? இதன் மூலம் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?***

இவர்கள் போர் கைதிகள். இவர்களை நாம் விடுவித்திருக்கின்றோம் என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததொரு விடயம். எமது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சிறையிலே வாடிக் கொண்டு இருக்கின்றார்கள். சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்; சிறைகளிலேயே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படியான சூழலிலும் கூட, போர் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில், சகோதரத்துவ மனப்பாங்கில் இது வரைகாலமும் வைத்து பராமரித்து, ஒரு நல்லெண்ண சமிக்ஞையாக எமது தலைவர் விடுதலை செய்திருக்கின்றார். இந்த நல்லெண்ண நடவடிக்கை, சிங்கள மக்களுக்கு நாம் கொண்டிருக்கும் சமாதான எண்ணத்தை, அல்லது ஆர்வத்தை வெளிப்படுத்தும். ஓர் பெரிய செய்தியாக இருக்கும்.

***விடுதலைப்புலிகள் என்றால் போரிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ஒரு வருடம் போரிடாமல் இருந்தாலே அவர்கள் சிதைந்து விடுவார்கள் என்ற கருத்து இருக்கின்றது. அது குறித்து நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?***

நிச்சயமாக இருக்காது. எல்.ரீ.ரீ.ஈ யைப் பொறுத்த வரை இது ஓர் அரசியல் இராணுவ மயப்படுத்தப்பட்ட வலுவான அமைப்பு. எங்கள் குறிக்கோள் அரசியல் குறிக்கோள் தான். அந்த அரசியல் குறிக்கோள் எமது மக்களின் உரிமைகள் சுதந்திரம் பற்றியது. இந்த அடிப்படையிலே எமது அமைப்பு கட்டியமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களில் எவ்வளவோ பெரிய தலையீடுகளும், நெருக்கடிகளும் இருந்தும் எமது தலைவர், எமது அமைப்பை ஒரு விடுதலை அமைப்பாக உறுதியாக கட்டியெழுப்பியிருக்கிறார். உலகத்திலே எல்லோரும் பார்க்கக் கூடியவாறு, எமது மக்களின் பேராதரவோடு வலுவான ஒரு தேசிய விடுதலை அமைப்பாக இது கட்டியமைக்கப்பட்டிருக்கின்றது. எனவே போரிடும் சந்தர்ப்பத்தில் தான் இது வலுப்பெறுகின்றது என்பது தவறான கருத்து. எனவே எந்த வழிமுறையையும் எமது போராளிகள் எதிர்கொள்வர். எமது அமைப்பு எதிர் கொள்ளும். அந்த வகையில் ஓர் தெளிவான விடுதலை அமைப்பைத் தான் எமது தேசிய தலைவர் கட்டியெழுப்பியிருக்கின்றார்.

***தெற்கிலுள்ள சில சக்திகள் விடுதலைப் புலிகளை போரின் மூலம் அழித்தொழிப்பதன் மூலமே சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென நம்புகிறார்கள். இது பற்றி உங்கள் கருத்தென்ன?***

கடந்த காலங்களில் போரின் மூலம் தீர்வு காண எத்தனித்தவர்கள் எல்லாம் பல பாடங்களை கற்றுக் கொண்டு விட்டார்கள். இன்று போரின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை, தமிழ் மக்களை, அவர்களது இலட்சியங்களை, அபிலாஷைகளை அழித்தொழிக்க முற்பட்டவர்கள் முழு அளவில் தேற்றுப் போய், இன்று அவர்களது குரல்கள் கூட கேட்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஆகவே போரின் மூலம் ஒரு இனத்தின் கட்டமைப்பை, இருப்பை அழித்தொழிப்பதென்பது தனக்குத் தானே குழி தோண்டுவதாகத் தான் அமையும். கடந்த காலங்களில் மாறி மாறி வந்த அரசுகள் இதைத்தான் முயற்சி செய்தன. தமிழீழ விடுதலைப் புலிகளை காலம் குறித்து அழித்தொழிக்க முயற்சி செய்தனர். காலத்தை குறித்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் இன்று இந்த போரிடும் போக்கைக் கடைபிடித்தவர்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக தமிழ் இனத்துக்கு மாத்திரம் அழிவுகளை இழைத்து விடவில்லை. சிங்கள மக்களுக்கும் சிங்கள தேசத்திற்கும் பெரும் அவலங்களையும் நெருக்கடிகளையும் செய்திருக்கின்றனர். இன்று பெரும் பொருளாதார பழுவைச் சுமத்திவிட்டுப் போயிருக்கின்றார்கள். ஆகவே இவர்கள் கொண்டிருக்கும் பிழையான தவறான கொடூரமான போக்கை இனியும் சிங்கள மக்கள் அனுமதிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.

***பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களின் மூலம் தமிழர்கள் எவ்வாறு பாதிப்புகளுக்கு ஆளாக்கப்பட்டார்களோ அதே போல தமிழர்கள் மூலம் முஸ்லிம்களுக்கு பல பாதிப்புகளை ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக வடகிழக்கிலிருந்து முஸ்லிம்களை நீங்கள் வெளியேற்றினீர்கள். இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றீர்கள்?***

முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரை நாம் அவர்களது அபிலாஷைகள் தனித்துவங்களை முழுமையாக மதிக்கின்றோம். நிச்சயமாக அவர்களது சொந்தத் தாயகத்தில் வாழும் சுதந்திரம் அவர்களுக்கு இருக்கின்றது. அந்த நியாயபூர்வமான மக்களது எண்ணப்பாடுகளை எமது தலைவரும் அமைப்பினரும் மிக உறுதியாக ஏற்றுக் கொள்கின்றார்கள். கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கும் அந்த துரதிர்ஷ்டவசமான சம்பவம் அப்போதிருந்த சிறிலங்கா அரசாங்கத்தினாலும் தவறான சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் ஏற்பட்டு விட்டன. நிச்சயமாக இது விடுதலைப் புலிகளது நிலைப்பாடு இல்லை. முஸ்லிம் மக்கள் எமது சகோதர மக்கள். அவர்களது உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். இங்கு ஒரு சுமூகமான நிலை உருவாகும் போது நிச்சயமாக முஸ்லிம் மக்களை நாம் வரவேற்போம். அவர்களை அவர்களது சொந்த மண்ணில் வாழ வழி செய்து கொடுப்போம். இது தான் எமது தலைவரின் உறுதியான கொள்கையாக இருக்கின்றது.

***நீங்கள் தற்போது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு இருக்கின்றீர்கள். அப்படியென்றால் நீங்கள் எதிர்பார்க்கின்ற தீர்வு என்ன?***

நாங்கள் சமாதானப் பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றோம். எமது அபிலாஷைகள் குறிப்பாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு தெளிவாகத் தெரியும். அதன் அடிப்படையில் தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்ப கட்டம் தொடங்கியிருக்கின்றது. காலப்போக்கில் சிறிலங்கா அரசு எமது மக்களின் அபிலாஷைகள், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்பவற்றை வைத்துக் கொண்டு எதைக் கொடுக்க முன்வருகின்றதோ அதனடிப்படையில் தான் எமது தீர்வு சம்பந்தமாக தெளிவாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

*இன்று இந்த போரிடும் போக்கைக் கடைபிடித்தவர்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக தமிழ் இனத்துக்கு மாத்திரம் அழிவுகளை இழைத்து விடவில்லை. சிங்கள மக்களுக்கும் சிங்கள தேசத்திற்கும் பெரும் அவலங்களையும் நெருக்கடிகளையும் செய்திருக்கின்றனர். இன்று பெரும் பொருளாதார பழுவைச் சுமத்திவிட்டுப் போயிருக்கின்றார்கள். ஆகவே இவர்கள் கொண்டிருக்கும் பிழையான தவறான கொடூரமான போக்கை இனியும் சிங்கள மக்கள் அனுமதிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை.*

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

# விடுபட்டுப் போய்விடக்கூடாத சில விடயங்கள் -2

சி. சகாதேவன்

இந்த நாட்டின் மிகப் பெரிய பிரச்சினை இனங்களுக்கிடை-யேயான தொடர்பியல் முடக்க-மேயாகும். ஒரு இனக்குழுமத்தின் பிரச்சினைகள் மற்ற இனக் குழுமத்தால் (குழுமங்களால்) புரிந்துணர்வுடன் அணுகப்-படாவிட்டால், பிரச்சினைக்கான தீர்வு உருவாக்கப்படுவதில் சிக்கல்கள் ஏற்படும் என்பதற்கு இலங்கையின் 53 வருட கால "சுதந்திர"த்தின் வரலாறு அனுபவமாகும்.

தீர்த்திருக்கப்படத் தக்க அரசியற் பிரச்சினை, தீர்வு காணுவது முடியாததாகிவிட வன்முறையான போராகி அந்தப் போரின் கோரம், அது ஏற்படுத்தியுள்ள துவம்சங்கள் ஆகியனவற்றைத் தாங்க முடியாது, சிங்கள மக்கள் போர் நிறுத்தம் வேண்டுமென்றும், தமிழ் மக்கள் (ஒற்றுமைப்படுத்த முடியாத போக்-குகள் கொண்ட அரசியற் சக்திகளை ஒன்றுபடச் செய்து தமது குறைபா-டுகளின் பொதுமையை வற்புறுத்-துவதற்கு) ஏறத்தாழ ஏகமனதாக ஒரு கூட்டமைப்பைத் தெரிவு செய்து அனுப்பிய பின்னரும், போர் நிறுத்தத்தை சமாதான ஆய்வுக்கான தளமாகத் திரிகரண சுத்தியுடன் தொழிற்பட வேண்டிய சிங்கள அரசியற் சக்திகள் தொடர்ந்தும் "கீறல் விழுந்த தகட்டின் குரலாக" முன்னர் சொன்னவற்றையே மீள, மீள பல்வேறு சொல் விகற்பங்களுடன் சொல்வதைப் பார்க்கும் பொழுது, சமாதானத்தில் உண்மையான நாட்டம் கொண்ட சக்திகள், சமாதானத்துக்கான தீர்வுகளின் அம்சங்கள் பற்றி மாத்திரமல்லாது, ஒரு சமாதானத் தீர்வு ஏற்கப்படக் கூடியதான ஒரு "மனச் சூழலை" சிந்திப்புப் பின்பு-லத்தை ஏற்படுத்த வேண்டியது மிக அத்தியாவசியமான கடமையாகிறது.

சமாதானத்தின் அம்சங்கள் குறித்த சிங்கள நிலைப்பாடுகளைச் சொல்லும், தமிழருடன் இன அந்நியரல்லாத ஜெயராஜ் பெர்-னாண்டோபிள்ளை முதல் (சுவர்ண-வாகினி அரசியற் கருத்தாடலில்), பௌத்த பீடமொன்றின் தலைமைப் பிக்கு ஒருவர் வரை கூறுவதைப் பார்க்கும் பொழுது, எதற்குத் தீர்வு காண்பதற்குப் பேச்சு வார்த்தைகள் நடைபெறப் போகின்றன என்ற நியாயமான பயம் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்றது.

சிங்கள மக்களுக்கு ஏற்பட வேண்டிய அரசியல் தெளிவு இது தான்.

1. இப்பொழுது விடுதலைப் புலிகள் நடத்தம் போர் (யுத்தம்), தமிழ் மக்களின் உரிமைக்கானதாகும்.

2. இந்த உரிமைப் போரை நடத்த பலர் 1984 முதல் முன்னிலையில் நின்றாலும், விடுதலைப் புலிகளே தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

3. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுள் சில விமர்ச-னத்துக்கு உட்படுத்தப்பட வேண்டு-மென்றாலும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான இந்தப் போரில் அவர்கள் வழியாகவே தீர்வு வர வேண்டுமென்ற நிலை உருவாகியுள்ளது. இதனை இன்று சம்பந்தப்பட்ட குழுக்கள், கட்சிகளுள் இரண்டொன்றைத் தவிர மற்றவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்தத் தெளிவு - தமிழ் மக்களின் சமாதானம் பற்றிய நிலைப்பாடு - பெரும்பாலான சிங்கள ஊடகங்களில் இன்னும் தெளிவாகவில்லை.

*இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பது எப்படி? இந்த விடயம் பற்றி தமிழ்த் தரப்பில் யாதேனும் செய்யப்பட முடியுமா?*

இது பற்றி விநயத்துடன் சிந்தித்தல் தமிழர் கடமை என்பது என் அபிப்பிராயம். ஏனெனில், சிங்களத் தரப்பிலுள்ள தாராண்-மைவாதிகள் சிலருக்குக்கூட இன்ன-மும் பிரிவினைவாதத்தின் எழுச்சி பற்றிய, காரணம் பற்றிய தெளிவில்லை. (சில சிங்கள அரசியல் கட்சியினர், விமர்சகர்களிடம் உண்டு).

இந்த நிலையிலே தான் மரபுவழிச் சிங்கள ஊடகங்களின் (இப்பிரச்சினை பற்றிய) பிரதான இயல்பு தெளிவா-கின்றது.

1. பிரதான, பொது நீரோட்டச் சிங்களப் பத்திரிகைகள், இலங்கையின் தமிழர் பிரச்சினையை புரிந்துணர்வுடன் பார்க்காமல் சிங்கள மக்களுக்கான அச்சுறுத்தலாகவே பார்க்கும் தன்மை.

(இது சிங்களப் பத்திரிகை வரலாற்-றின் அடித்தளத்திலுள்ள சிங்கள, பௌத்த காரணியின் எதிரொலி)

2. பௌத்த சிங்களவர்களின் அபிப்பிராய முதல்வர்களாகவும், அபிப்பிராய உருவாக்கிகளாகவும் தொழிற்பட்டு வருகின்ற பிரதான பௌத்த மதகுருமார் எல்லாக் காலத்திலும் (ஏறத்தாழ மகாவம்ச காலம் முதல்) "தமிள" குரோத மனப்பான்-மையையே கொண்டு வந்துள்ளனர்.

(இது இலங்கை "தேரவாத"த்தின் அரசியல் அம்சமாக இருந்து வந்துள்ளது. <u>*இந்தச் சக்திகள் முஸ்-லிம்களுக்கும் எதிரானவையே)*</u>

சுருக்கமாகச் சொன்னால், இவர்கள் மற்றையோரை இலங்கைய-ராகக் கொள்வது கூட இல்லை. இவர்கள் எழுத்துக்கள் பேச்சுக்கள், உபதேசங்கள் இந்தப் பாணியிலேயே இருந்து வந்துள்ளன.

சிங்கள வழிக் கல்வி முறை-மையில் இந்தச் சக்திகளே ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளன. இதனால் பாடப் புத்தக வழித் தமிழ் ஒடுக்குமுறையும் நடைபெற்றுள்ளது.

இத்தகையதொரு "துருவ நிலைப்பாட்டிற்கு" நல்ல உதாரணம் ஜே.வி.பி ஆகும். தன்னை ஒரு மார்க்சிஸ்ட் இயக்கமாகவும், விடுதலை இயக்கமாகவும் அடையாளப்-படுத்துவதில் அக்கறை கொண்டுள்ள இக்கட்சி தமிழ்ப் பிரச்சினையை "தேசியப் பிரச்சினை"யாகவே பார்ப்பதாகவும் கூறிக் கொள்ளும் இக்கட்சி, தமிழர்கள் முகம் கொடுக்கும் சனநாயக மறுப்புகளுக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர், விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதக் கண்டனத்திலே, அதுவும் "வகுப்புவாத"ச் சொற் பிரயோகங்களுடன் கண்டிப்ப-திலேயே கவனம் செலுத்துகின்றனர். தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்-படுவதால் புலிகளின் கோரிக்கைகளின் வேகம் குறைந்து விடும் என்ற அடிச்சுவடி அரசியலை மறந்து விட்டு, தேர்தல் அரசியலுக்காக, அதே <u>மொழிகளைப்</u> பயன்படுத்துகின்றனர். பௌத்த பீடாதிபதிகளின் கருத்துக்களை அறிவதிலும் அவற்றைப் பிரபல்யப்படுத்துவதிலும் விசேட கவனம் செலுத்துகின்றனர். படை-யினரின் ஒடுக்குமுறைகளுக்கான தங்கள் வரலாற்றை மறக்கின்ற அளவுக்கு தமிழப் பிரச்சினைப் புறக்கணிப்பு நோக்கு உள்ளது. இப்பொழுதுள்ள நிலையில், மலை-யகத் தமிழரை தங்கள் செல்வாக்கு வட்டத்தினுள் வைப்பதில் அவர்க-ளுக்குள்ள சிரத்தை பாரம்பரிய இலங்கைத் தமிழர்களின் அபிலா-ஷைகள் பற்றி இல்லை.

இப்போக்குக்குப் <u>புறநடையாக</u> இருந்த சிங்கள மக்கள் பலர் இருந்துள்ளனர். இப்பொழுதும் இருக்கின்றனர். தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பது பௌத்-தத்திற்கு முரணான செயல் என்று சொல்லும் பிக்குகளும் உள்ளனர். (பார்க்க எச்.எல்.செனிவிரத்ன எழுதியுள்ள Where the King Come From சிக்காக்கோ 2000)

அத்துடன் விக்கிரமபாகு கரு-ணாரத்ன, வாசுதேவ நாணயக்கார போன்ற மார்க்சியவாதிகளின் பங்கும் மகத்தானது. அவர்கள் தேர்தல்களில் தொடர்ந்து தோற்பதற்குக் காரணமே அவர்கள் தமிழ் மக்களின் பிரச்-சினைகளுக்கு ஆதரவாகப் பேசுவது தான்.

இவர்கள் போன்ற இன்னும் சில சக்திகள் உள்ளன. ஆனால் அவை-யெல்லாம் அம்பலமேறாத குரல்கள். ஏனெனில் சிங்கள ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது சிறுபான்மை விரோத குரோதக் குரலே. அது பல உத்திகள் மூலம் தொழிற்படுவது.




## தமிழர் சுமக்கும் சனநாயக மறுப்புக்களும் அது பற்றிய சிங்களவர் அறிகையும்

இந்த நிலையிலே தான். தமிழர் நிலையை நோக்க வேண்டிய தேவை உள்ளது. இந்தத் தொடர்பாடல் முடக்கத்தில் நமது நிலை என்ன? இது பற்றிச் சிந்திக்கும் பொழுது எழும் முதலாவது வினா, இத் தொடர்பாடல் முடக்கம் பற்றி நமக்கு சிரத்தை இருக்க வேண்டுமா என்பதே.

எந்த நிலைப் போராட்டமும் இறுதியில் <u>அரசியல் தீர்வு</u> பெற்றே நிறைவுற வேண்டும் என்ற மறுத-லிக்கப்பட முடியாத வரலாற்றுண்-மையை நாம் உணர்ந்து கொண்டால், நாம் நமது நிலைபாட்டை, எவர்களின் பிரதிநிதியாக - எவர்களின் பெயரால் - அரசு தொழிற்படுகின்றதோ அந்த மக்களுக்கு இப்போராட்டத்தின் அவசியத்தையும் நியாயப்பாட்டையும் எடுத்துக் கூறல் அவசியம். அதி-லொரு அரசியற் தர்மம் கூட இருக்கிறது.

*புதிதாக பாராளுமன்றத்தில் தோற்றம் பெற்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தாங்கள், ஏன் அரசு புலிகளுடன் பேச வேண்டுமென்பதை வற்புறுத்த வேண்டியுள்ளது என்பதைத் தெளிவான சிங்களத்தில் எடுத்துக் கூறினால் போதும் இந்தப் பயணம் நன்கு தொடங்கி விடும்.*

மேலே சொன்ன முடக்கும் சக்திகள், நமது எடுத்துரைப்பினை: திரிவுபடுத்தியும், பிழையாகவும் சிங்கள மக்களுக்கும் எடுத்துக் கூறும் என்பது உண்மையே. ஆனால் நாங்கள் எங்கள் நியாயப்பாட்டை அவர்கள் விளங்கிக் கொள்ளும் முறையிலே கூறுவது ஒரு கடப்பாடு ஆகும்.

துரதிர்ஷ்டவசமாக எங்கள் நாட்டு அரசியலின் துவேசச் சூடு காரணமாக இந்த, வெளிச்சம் வீசப்படாமலே போய்விட்டது. ஜே.வி.பி.யின் மொழிநடையும், சிஹல உறுமயவின் கண்ணோட்டமும் எம்மைத் தடை செய்தாலும், தமிழரின் உரிமைக்காக சிங்களத்தில் எழுதுபவர்களாவது அவர்கள் மொழிநடையில் எங்கள் குறைகளை விவரிக்க வேண்டும். அது நியாயமுமாகும்.

தமிழர்களின் குறைகளைப் பட்டி-யலிட்டுள்ள கருத்துக்கள் பெரும்-பாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. ஆங்கிலத்தில் எழுதுவதற்கான பிரதான நிலைப்பாடு அது சர்வதேச மொழி என்பதே என்றாலும், அதற்-குள் ஒரு காலனித்துவத் தெரிவு உள்ளது என்பதும் மறுக்க முடியாததாகும்.

சிங்களத்தில் எழுதுவதை ஒரு நிலையிறக்கமாகக் கொள்வது என்பது, உரிமைப் போராட்டம் பற்றிய தவறான விளக்கமாகும். எந்த நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அந்த நாட்டின் ஆங்கிலம் தெரியாத சிங்கள மக்களுக்கு நேரடியாக அவர்கள் மொழியில் தெரிவிப்பது என்பது ஒரு வீரமுள்ள செயலாகும். எங்கள் நியாயத்தை எந்த மொழி-யிலும் சொல்லல் வேண்டும். சொல்-லப்படும் விடயமும், சொல்லப்படும் முறைமையுமே முக்கியமாகும்.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் சில முன்னர் சிங்களத்தில் ஒலிப-ரப்புக்கள் நடத்தியதை நினைவுறுத்திக் கொள்ளல் வேண்டும்.

சிங்களத்தில் எழுதிய உடனேயே நாம் எதிர் பார்க்கும் "புரிந்துணர்வு" வந்துவிடப் போவதில்லை. உண்-மையில் சிங்களத்தின் பாரம்பரிய "ஊடகங்கள்" இந்த முயற்சிக்கு பயம் உட்படப் பல்வேறு காரணங்களைக் கற்பிக்கலாம். அத்தோடு தங்கள் எதிர்ப் பிரச்சாரங்களை மேலும் அதிகரிக்கலாம்.

ஆனால் அது யாரோ ஒரு சிங்கள வாசகரை எட்டத்தான் செய்யும். அப்படி எட்டாவிட்டாலும் நாம் நம் கடமையைச் செய்தவர்-களாவோம்.

புதிதாக பாராளுமன்றத்தில் தோற்றம் பெற்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தாங்கள், ஏன் அரசு புலிகளுடன் பேச வேண்டுமென்-பதை வற்புறுத்த வேண்டியுள்ளது என்பதைத் தெளிவான சிங்களத்தில் எடுத்துக் கூறினால் போதும் இந்தப் பயணம் நன்கு தொடங்கி விடும்.

தொடர்பாடல் இல்லாமல் எந்த ஊடாட்டமும் நிகழ்வதில்லை. அந்த ஊடாட்டமும் ஒரு மீள் ஊட்டு (Feed back) இல்லாமல் முடிவுறுவதில்லை.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திசை மாற விடக்கூடாது

- டி.சிவராம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பை எப்படியாவது காலி பண்ணிவிட்டு தங்களுடைய வழக்கமான பின் கதவு அரசியலில் ஈடுபடும் நோக்குடன் கழுவிய மீன்களில் நழுவிய மீன்களாகவும் தமக்கே உரிய மதிநுட்பத்துடனும் சில மூத்த அரசியலாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். இது பற்றி சாடைமாடையாகவோ நேரடியாகவோ நீங்கள் அறிந்திருப்பீர்கள். புலிகளின் நேரடி முகவர்கள் போலவே வெளி நாடுகளிலும் , தேர்தல் நேரங்களிலும் இவர்களிற் சிலர் பேசிய எழுச்சியூட்டும் பேச்சுக்களையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

**பிரித்தாளும் தந்திரத்தை முறியடிக்கும் நோக்கமா?**

இது என்னே முரண்பாடு என நீங்கள் எண்ண வேண்டாம். தமிழ் மக்களைக் காலங்காலமாக நசுக்குவதற்கும் தமது தேசிய உரிமையையும் குறிக்கோள்களையும் அடைய விடாது அவர்களைத் தடுப்பதற்கும் சிங்களப் பேரினவாதமும், இந்திய வல்லாதிக்கமும் பயன்படுத்தி வந்த பிரித்தாளும் தந்திரோபாயமே இது. இதை எப்படியாவது முறியடித்துத் தமிழ் மக்களின் விடிவிற்காகப் பாடுபட வேண்டும் என்ற புனித நோக்குடன் எமது "தமிழ் தேசிய" அரசியலாளர்கள் முண்டியடித்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க முன்னின்றார்கள் என்று நீங்கள் நினைத்தால் அது மகா பிழை. தங்கள் தங்கள் தனித்துவங்களைப் பேணவும் சுயநலன்களை முதன்மைப்படுத்தவும் இவர்கள் எடுத்த பெரு முயற்சிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினுள் வர மறுத்து சில மூத்த தலைவர்கள் ஆடிய ருத்திரதாண்டவங்களும் பலரறியார். ரெலோவைக் கூட்டமைப்புக்குள் கொண்டு வந்தால் புலிகள் கடுமையாக எதிர்ப்பார்கள் என்று கூறி ஒருவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்தைத் தடுத்திடப் பார்த்தார். இன்னொருவர் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் மட்டும் தான் கூட்டுத் தேவை என ஒற்றைக் காலில் நின்றார். இந்தத் தமிழ் அரசியலாளார்கள் போட்ட பெரும் முட்டுக் கட்டைகளை "வேறு வழிகளால்" உடைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி வெற்றியும் பெற்று விட்டது. (இதில் புளொட் இணைக்கப்படாமற் போனது ஒரு பின்னடைவு எனக் கொள்ள வேண்டும்)

**கட்சியாகும் உருவாக்கும் முயற்சியை முறியடிக்க**

இப்போது தமிழ்த் தேசிய எழுச்சியை நிறுவன மயப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிக்க மீண்டும் எமது "தமிழ் அரசியலாளர்கள்" மிக நுட்பமான முயற்சிகளில் இறங்கியுள்ளனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிறுவன மயப்படுத்தப்பட்டு அதனூடாக மக்கள் சகல மட்டங்களிலும் அணிதிரட்டப்படக் கூடிய நிலை ஒன்று உண்டானால் தங்களுடைய தலைமைகளுக்கும், கேட்பார் பார்ப்பார் இல்லையென்ற எண்ணத்தில் சிறிலங்காவின் நாடாளுமன்றிலும் வெளியிலும், காதும் காதும் வைத்தது போல தாங்கள் செய்யும் வேலைகளுக்கும் ஆபத்த வந்துவிடும் என இவர்கள் பயப்படுகிறார்கள் போல் தெரிகிறது.

**எதிர்த்து போராடாமல் விட்டதன் விளைவு**


1977இல் சுதந்திரத் தமிழ் ஈழத்தை எப்பாடுபட்டாயினும் அமைப்போம் எனக் கூறிச் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணி 1981 ஆம் ஆண்டு உப்புச் சப்பில்லாத மாவட்ட சபைகளுக்கு ஒத்துக் கொண்டது. மிகவும் படித்த சட்ட வல்லுநர்களாக இருந்த கூட்டணித் தலைவர்கள் 1979இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராகப் போராடாமல் ஜே.ஆரின் பேச்சை நம்பி வாளாவிருந்தனர். 1977இல் சுதந்திரத் தமிழீழத்தைப் பெற்றுத் தருவோமென தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையைப் பெற்றுச் சென்றவர்கள் அடுத்த ஆண்டே அதே தமிழீழ விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்த இளைஞர்களையும் அப்போராட்டத்தை ஆதரித்த மக்களையும் நசுக்கி ஒழிப்பதற்கெனக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடூரத்தை எதிர்த்து மக்களை அணிதிரட்டிப் போராடாமல் விட்டதன் விளைவை இன்று பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் அனுபவித்து விட்டனர். நமது அரசியல் தலைமைகள் தாம் மக்களிடம் வாக்குகளை மட்டும் பெற்றுக் கொண்டால் போதும், பின்னர் தாம் எந்தத் திருகுதாளத்திலும் விரும்பியபடி ஈடுபடலாம், எது மக்களுக்கு நல்லது என்பது எங்களுக்கே தெரியும் என மீண்டும் செயல்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் மேற்படி விடயங்களையெல்லாம் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.


**நிறுவனமயப்படுத்த வேண்டியது அவசியம்**

தேர்தல் முடிந்த கையோடு இந்தியத் தூதுவரை கூட்டணியினர் சந்தித்ததும், பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவுடன் சில தமிழ் அரசியலாளர்கள் தனித்தனியாகத் தொடர்பு கொண்டதும் பழைய குருடி கதவைத் திறடி என்ற கதைதானோ என்ற ஐயத்தை பல தமிழ் அரசியல் ஆர்வலர் மத்தியில் உருவாக்கிற்று. தமிழ் தேசியக் கூட்டமைப்பே இவர்கள் இம்முறை தம் வெற்றிக்குப் பயன்படுத்திய ஏணியாகும். தம் வெற்றிக்கு அப்போது பயன்படுத்திய தமிழீழ விடுதலை என்ற ஏணியை 1978இல் தட்டிவிட்ட அதே பாணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தட்டிவிட இவர்களை அனுமதிக்கலாகாது என்பதற்காகவே கூட்டமைப்பு தமிழ்ச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் வேரூன்றக் கூடிய வகையில் நிறுவன மயப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் நிறுவனமயப்படுத்தப்பட்டு பரந்துபட்ட தமிழ் மக்களை அணிதிரட்டிடக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்ற கேள்வி உங்கள் முன் எழலாம் அதற்குப் பின்வரும் மறுமொழிகளை இங்கு முன் வைக்கின்றேன்.

1. தமிழரின் பின் கதவு அரசியலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க த.தே.கூட்டமைப்பு நிறுவனமயப்பட வேண்டியுள்ளது. அதாவது தமிழர் தேசிய மாநாடு. தமிழரின் அரசியல் அபிலாஷைகளின் தேசியப் பிரகடனம், நாடாளுமன்றத்தில் எமது அரசியல் செயற்பாடுகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள், த.தே.கூ விற்கான மக்களால் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியல் யாப்பு எனப் பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது தான் எமது தேசிய அரசியற் குறிக்கோள்கள் ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் அனுப்பப்படும் தொலை நகல்களில் சிதறுண்டு போகாமல் முனைப்புடன் இருக்கும். பின் கதவுத் தொடர்புகளூடாகவும் தொலை நகல்களூடாகவும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வது தான் தமிழ் மக்களின் நோக்கமாக இருந்திருக்குமென்றால் நண்பர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சி பொதுஜன ஐக்கிய முன்னணி என்பவற்றின் தமிழ் முகவர்களுக்கும் அவர்கள் வாக்களித்திருப்பார்கள். எமது தேசிய இனப் பிரச்சினைகள் சரியான முறையில் தீர்க்கப்படாமல் விட்டால் எந்த அற்ப அரச சலுகையாலும் எந்தப் பயனுமில்லை எனபதை தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்கள் உணர்ந்ததன் அடிப்படையிலேயே தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது. ஆனால் நான் மேற்கூறிய வகையில் த.தே.கூ நிறுவனமயப்படுத்தப்படாத காரணத்தாலேயே மக்களை அணிதிரட்டி எமது விடிவின் குறிக்கோளை நோக்கி நடைபோடுவதை விடுத்து மீண்டும் சலுகைச் சகதிக்குள் இறங்கும் வேலையில் பல த.தே.கூ தலைவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.





> *தேர்தல் முடிந்த கையோடு இந்தியத் தூதுவரை கூட்டணியினர் சந்தித்ததும், பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவுடன் சில தமிழ் அரசியலாளர்கள் தனித்தனியாகத் தொடர்பு கொண்டதும் பழைய குருடி கதவைத் திறடி என்ற கதைதானோ என்ற ஐயத்தை பல தமிழ் அரசியல் ஆர்வலர் மத்தியில் உருவாக்கிற்று. தமிழ் தேசியக் கூட்டமைப்பே இவர்கள் இம்முறை தம் வெற்றிக்குப் பயன்படுத்திய ஏணியாகும். தம் வெற்றிக்கு அப்போது பயன்படுத்திய தமிழீழ விடுதலை என்ற ஏணியை 1978இல் தட்டிவிட்ட அதே பாணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தட்டிவிட இவர்களை அனுமதிக்கலாகாது என்பதற்காகவே கூட்டமைப்பு தமிழ்ச் சமூகத்தின் சகல மட்டங்களிலும் வேரூன்றக் கூடிய வகையில் நிறுவன மயப்படுத்தப்பட வேண்டிய அவசியம் உண்டு.*

**நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட இல்லாதது ஏன்?**

இன்று (30.01.2002) இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கையில் யாழ் செயலகம் முன்பாக மீனவர்களின் பெரும் மறியற் போராட்டம் ஒன்று நடைபெறுகின்றது. த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட அங்கு களத்தில் இல்லை. இந்தியத் தூதுவரைச் சந்திக்கக் காட்டிய அவசரம், ரணிலை சந்திக்க காட்டிய அவசரம், மீனவர் போராட்ட விடயத்தில் இவர்கள் காட்டவில்லை. ஏற்கெனவே போராட்டத்தின் திகதி கூட அறிவிக்கப்பட்டிருந்தது. உண்மையில் இந்தப் போராட்டத்தை முன்னின்று ஒழுங்கு செய்து நடத்தியிருக்க வேண்டியவர்கள் யார்? த.தே.கூ. தலைவர்கள் அல்லவா? சிறிலங்காவின் சிறைகளில் பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அநியாயமாக அடைக்கப்பட்டு வாடுகின்றார்கள். இதை எதிர்த்து ஒரு துரும்பைத் தூக்கிடும் வகையிலேனும் தமிழ் மக்களை அணி திரட்டிட த.தே.கூ. தலைமைகள் முன் வருகின்றனவா என்றால் இல்லை. மாறாக மீனவருக்குக் கடற்படையினர் அடித்து விட்டனர். சம்பந்தப்பட்ட அதிகாரியின் கவனத்திற்கு அதை நான் கொண்டு வந்துள்ளேன் என ஒருவர் அறிக்கை விடுவார். மற்றவர் தமிழ் அரசியற் கைதிகள் விடயம் பற்றிப் பிரதமருடன் பேசியுள்ளேன் என நாளேடுகளில் செய்தி வரக் கூடியவாறு அலுவல் பார்ப்பார். ஆனால் மேற்படி பிரச்சினைகளுக்குக் காரணமான பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு எதிராக தமிழ் மாவட்டம் தோறும் மக்களை அணிதிரட்டிட முயற்சி எடுத்தால் அதை அவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள். மீன் பிடித்தடை, விவசாயத்தடை, போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் , பொருளாதாரத் தடை, பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் ஒட்டுமொத்த பிரச்சினைகள். இவை ஒட்டு மொத்தமாக எதிர்க்கப்பட்டு, ஒட்டுமொத்தமாக இல்லாதொழிக்கப்பட வேண்டிய விடயங்களாகும். மயிலே!மயிலே இறகு போடு எனக் கேட்பதைப் போல கந்தனின் பிரச்சினையைப் பற்றியோ, சுமதியின் பிரச்சினையைப் பற்றியோ சிறிலங்கா அரசிடம் பேசி அவற்றிற்குத் தனித்தனி தீர்வு கேட்பதனால் எந்தப் பயனுமில்லை. ஆனால் இப்படியாக எமது அரசியல்வாதிகள் செயற்படுவதைத் தான் சிறிலங்கா அரசு ஊக்குவிக்கின்றது. ஏனெனில் இதன் மூலம் ஒட்டு மொத்தப் பிரச்சினைகள் இருப்பதையே மக்கள் மறந்து அவற்றைத் தமது வாழ்க்கையின் இன்றியமையாத யதார்த்தமாக, அதாவது வானம் நீலம், கடல் உப்பு என்பதைப் போல ஏற்றுக் கொள்ளப் பழகி விடுகிறார்கள். சகல ஒடுக்குமுறை அரசுகளும் இவ்வாறாகவே சிறுபான்மை இனங்களையும் உழைக்கும் வர்க்கங்களையும் கத்தியின்றி, இரத்தமின்றி, போர்ச் செலவும் இன்றி இலகுவாக அடக்கி ஆள்கின்றன. உங்கள் பிரச்சினைகளைப் பற்றி நான் பிரதமருக்குத் தொலை நகல் அனுப்பி விட்டேன் எனக் கூறி அத்தோடு அலுவலை முடிக்கும் அரசியல்வாதிகளே பேரினவாத அரசின் அடக்கு முறை அமைப்பிற்கு எதிரான மக்களின் முரண்நிலை அணிதிரண்டு பேரலையாகக் கிளம்பி விடாமல் பார்த்துக் கொள்கின்ற மிக முக்கிய வேலையைச் செய்கிறார்கள். இவர்கள் மேற்படி வேலையைச் செவ்வனே செய்யாவிட்டால் ஆயிரம் இரண்டாயிரம் படைகளை வைத்துக் கொண்டு 2 - 4 இலட்சம் தமிழ் மக்களை பல மாவட்டங்களில் சிறிலங்கா அரசு அடக்கியாண்டிட முடியாது.

**தமிழ் அரசியல்வாதிகள் நழுவுவதும் காரணமாகும்**

இது போல தமது ஒட்டு மொத்தப் பிரச்சினைகளில் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இருக்கும் கவனக் குவிவும் இவர்களின் மேற்படி செயல்களால் இல்லாது போகிறது. இதனால் எமது தேசிய விடிவுப் பாதையில் ஒருங்கிணைந்து முன்னேறுவதற்கான அரசியல் அணிதிரட்டலை எமது மக்களிடையே செய்வது இன்று வடக்கு கிழக்கின் பல இடங்களில் சற்றுக் கடினமாயுள்ளது. அது மட்டுமல்லாது உலக அரங்கிலும் தமிழ் மக்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டின் உண்மை வடிவம் சிதைவுற்றும், பிறழ்வுற்றும் தோற்றமளிப்பதற்கு தமிழ் அரசியல்வாதிகள் எமது ஒட்டு மொத்தப் பிரச்சினைகளையும் நோக்கி தமிழ் மக்களை அணிதிரட்டிப் போராடிட வேண்டிய இக்காலகட்டத்தின் தேவையிலிருந்து திட்டமிட்டு நழுவுவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

1977இல் கொடுக்கப்பட்ட மக்கள் ஆணை எவ்வித மனச்சாட்சியுமின்றி எமது தமிழ் அரசியல்வாதிகளால் கொச்சைப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த ஆணையின் அடிப்படையில் உருவாகிய போராட்டமே எம்மை நிமிர வைத்தது. எமது விடிவுப் பாதையின் அடுத்த முக்கிய கட்டத்தை நோக்கிக் காலடியெடுத்து வைப்பதற்காக 24 வருடங்களுக்குப் பின்னர் மீண்டுமோர் மக்களாணை கிடைத்துள்ளது. அதைக் கொச்சைப்படுத்திட நாம் எமது அரசியல்வாதிகளை அனுமதிக்க முடியாது. த.தே.கூ அரசியலாளரும் இவற்றைச் சரியாக உணர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை உடனடியாக நிறுவன மயப்படுத்தி தமிழ்த் தேசிய அபிலாஷைகளின் பிரகடனம் ஒன்றை வெளியிட ஒரு தேசிய எழுச்சி மாநாட்டை நடத்த உடன் ஆவன செய்ய வேண்டும்.

# யாழ்ப்பாணம்: "விடுதலை" பெற்று ஆறாண்டுகளின் பின்னர்...

-சுனந்த தேசப்பிரிய

அரசாங்கத்தின் கருத்துப் படி யாழ்ப்பாணம் விடுக்கப்பட்ட பிரதேசமாகும். அவர்களின் கருத்துப்படி அப் பிரதேசம் எல்.ரி.ரி.ஈயினரிடமிருந்து கைப்பற்றப்பட்டு அரசாங்கப் பரிபாலனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதாகும். யாழ்ப்பாணத்தை விடுவித்துக் கொள்வதற்காக வேண்டி அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் தலைமையில் 1987ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கைக்கு 'ஒபரேசன் லிபரேஷன்" என்று பெயரிடப்பட்டிருந்தது. 1995ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் கோணல் ரத்வத்தையினதும் தலைமையில் இன்னொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்தும் 95% த்தை தனது பரிபாலணத்தின் கீழ் கொண்டுவர இதனால் முடிந்தது. இந்த நடவடிக்கையின் போது 450 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதோடு இரண்டாயிரம் பேரளவில் காயமுற்றனர். அன்று தொடக்கம் இன்றுவரை யாழ்ப்பாணத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டி 20,000 - 30,000 அளவிலான இராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். ஒரு இராணுவ வீரருக்காக வேண்டி மாதந்தோறும் குறைந்த பட்சம் 25,000 ரூபாய்க்கு மேல் செலவிடப்படுகின்றது. போர் நடவடிக்கைகளுக்கான செலவை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும் 20000 இராணுவ வீரர்களுக்காக வேண்டி மாதம்தோறும் ரூபா 50கோடி செலவிடப்படுகிறது.



இவ்வாறு பாரிய அளவு பணத்தைச் செலவழித்து இலங்கை அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டு பாதுகாத்து வரும் யாழ்ப்பாண மக்களின் நலன்களுக்காக வேண்டி இலங்கை அரசாங்கம் எந்தளவு அக்கறை கொண்டுள்ளது? இது சம்பந்தமாக மனதை நெகிழ வைக்கும் செய்திகள், விபரங்கள் பலவற்றைப் பற்றி சென்ற வாரம் எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. அது மாற்றுக் கொள்கை நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த 'யாழ்ப்பாணத்தின் சுகாதாரச் சேவைகளும் மருந்துப் பங்கீடும்" என்ற தலையங்கத்தின் கீழ் நடைபெற்ற கருத்தரங்கின் போதேயாகும்.


யாழ்ப்பாணத்திற்கான பொருள் தடை முதலில் அமுல் செய்யப்பட்டது 1987ம் ஆண்டு லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் போதே. முதலில் போருக்காக வேண்டி உபயோகப்படுத்திக் கொள்ளமட்டும் முடியுமான பொருள் தடை, பின்னர் மருந்து வகைகள் வரை விரிவாக்கப்பட்டது. எல்.ரி.ரி.ஈயினரின் போரிடும் சக்தியைக் குறைப்பதற்கே இந்தப் பொருள் தடையென்பது அரசாங்கத்தின் வாதமாக இருந்தது. இந்தக் கருத்தரங்கின் முக்கிய பேச்சாளராக சமூகம் தந்திருந்த தயாளதேவா அவர்கள் தனது உரையின் ஆரம்பத்தில் இவ்வாறான ஒரு கேள்வியை எழுப்பினார். 'இந்தப் பொருள் தடை எல்.ரி.ரி.யினரின் மீது எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பற்றி என்னால் எதுவும் கூற முடியாது. பாதுகாப்பு அமைச்சின் கருத்துப்படி எல்.ரி.ரி.ஈயினரிடம் இலக்கை நோக்கி குண்டுகளை ஏவக்கூடிய துப்பாக்கி, மல்டி பெரல் ரொக்கட் லோஞ்சர், மிசயில் போன்றவைகளும் உள்ளன. எல்.ரி.ரி.யினர் இது போன்ற நவீன கனரக ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது இலங்கை அரசாங்கத்தின் உதவியினால் அல்ல. இரகசியமான முறைகளினாலேயே அவர்கள் பெறுகின்றனர். இவ்வாறான நிலையில் எல்.ரி.ரி.யினருக்கு மருந்து போன்ற பொருள்களின் பிரச்சினை காரணமாக போர் செய்ய முடியாததொரு நிலை ஏற்படுமா?

யாழ்ப்பாண மருத்துவமனைகளில் மருந்துப் பங்கீட்டுக் கொள்கைத் தடை காலத்துக்குக் காலம் வித்தியாசப்படும். தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரிக்கும்.' இன்று யாழ்ப்பாண மருத்துவமனைகள் மருந்து வகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி பின்பற்றும் கொள்கை இவ்வாறாக உள்ளது.

**மருந்துகளின் பட்டியல் அங்கீகாரம் பெற வேண்டும்**

யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் தேவையான மருந்து வகைகளின் பட்டியலொன்றைத் தயாரித்து, அதனைத் தவணை முறையில் பிரித்து கொழும்புக்கு அனுப்புவார். யாழ்ப்பாண சுகாதார அதிகார சபையை பிரதிநிதித்துவப்படுத்தும்படியாக இந்த மருந்துப் பட்டியலை அங்கீகரித்துக் கொள்வதற்காகவும், அவசரத் தேவைகளுக்கான அனுமதியைப் பெறவும் கொழும்பில் இரண்டு பிரதிநிதிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த இரு பிரதிநிதிகளும் தமக்குக் கிடைக்கும் பட்டியலை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து கிடைக்கும் தடை செய்யப்பட்ட மருந்துப் பட்டியலோடு ஒப்பிட்டு திருத்தங்களை மேற்கொள்வர். இதனை யாழ்ப்பாணத்தில் செய்ய முடியாததற்கு இடையிடையே தடை செய்யப்படும் மருந்து வகைகள் வித்தியாசப்படுவதினாலேயே ஆகும். பின்னர் அந்தப் பட்டியலுக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி சுகாதார களஞ்சியப் பிரிவிற்கும், பாதுகாப்பு அமைச்சிற்கும், யாழ்பாணத்திற்கு எடுத்துச் செல்வதற்காக செஞ்சிலுவைச் சங்கத்திடமும் ஒப்படைத்தல் வேண்டும்.



பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பிரகாரமே சுகாதாரக் களஞ்சியப் பிரிவு மருந்து வகைகளை வழங்குகிறது. பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த இயக்குநர்கள் இருவர் இந்தப் பட்டியலின் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய மருந்து வகைகளையும், அளவையும் தீர்மானிப்பர். இறுதி முடிவு அதுவேயாகும். பின்னர் கொழும்பில் தங்கியிருக்கும் பிரதிநிதிகள் இருவரும் இந்த மருந்து வகைகளை மருந்தகக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பெற்றுக் கொண்டு லொறிகள் மூலம் திருகோணமலைக்கு எடுத்துச் செல்வர். திருகோணமலையில் கடற்படையினரால் பார்சல்கள் உடைக்கப்பட்டு நுணுக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். கப்பலில் ஏற்றப்படுவது அதன் பின்னரே. மீண்டும் பருத்தித் துறையில் தீவிர பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். மருத்துவமனைகளுக்கு மருந்து எடுத்துச் செல்லப்படுவது அதன் பின்னரே!

தயாளதேவா அவர்களின் கருத்துப்படி இவ்வாறு யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லும் மருந்து வகைகளில் 20% வீதமான அளவு காலாவதியாகவுள்ள மருந்து வகைகளே.

திரும்பத் திரும்ப பார்சல்களை உடைப்பதால் மருந்து வகைகளில் 12-15 வீதமானளவு அழிந்து போகின்றன. அதேபோன்று கொண்டு செல்லும்போது ஏற்படும் வெப்பம் என்பவற்றாலும் மருந்து வகைகள் பழுதடைகின்றன.

யாழ்ப்பாண சுகாதார அதிகாரிகள் வேண்டி நிற்கும் மருந்து வகைகளில் 21% முழுமையாகவே அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டவையாகும்.

மேலும் 23% மருந்து வகைகளும் வழங்கப்படுவது கேள்வியிலிருந்தும் 25% மட்டுமேயாகும்.

இன்னும் 19% மருந்து வகைகளும் வழங்கப்படுவது 50% மாத்திரமேயாகும்.

இந்தக் கட்டுப்பாடுகள், தடைகள் ஏற்படுத்தும் முறைகள் சம்பந்தமாக அரசாங்கமோ அல்லது பாதுகாப்பு அமைச்சோ எந்த விதமான கொள்கைகளையும் முன்வைத்தது இல்லை. முழுமையாகவே தடைசெய்யப்பட்ட மருந்து வகைகளுள் "பெண்டேஜ்" வகைகளும் அடங்கியுள்ளன. ஹைதரசன் பெரொக்ஸைட்டும் முழுமையாகவே தடைசெய்யப்பட்ட ஒரு மருந்து வகையாகும். இந்த மருந்து வகைகளை தென்னிலங்கையில் எல்லா இடங்களிலும் மிக இலகுவாகப் பெறலாம். யாழ்ப்பாணம் அரசாங்கப் பரிபாலனத்தின் கீழ் இருக்கையில் இதுபோன்ற பாரதூரமான கட்டுப்பாடுகளும் தடைகளும் முன்னெடுக்கப்படுவதன் காரணமென்ன? அது முன்னைய அரசாங்கத்தின் கொள்கையான சமாதானத்திற்கான போரின் இன்னொரு பகுதியா? பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கழிவுகளை உண்டு வாழ்ந்த சமாதானப் புறாக்கள் இது போன்ற தடைகளை அனுமதித்ததா?

இது போன்ற அர்த்தமற்ற தடைகளினால் எல்.ரி.ரி.ஈ.யிற்கு எந்தவிதமான தாக்கங்களும் ஏற்படவில்லை என்பது சென்ற வருடம் அவர்கள் பெற்றுக் கொண்ட வெற்றிகளின் மூலம் தெளிவாகின்றது. 1998ம் ஆண்டு தொடக்கம் அவர்களினால் கைப்பற்றப்பட்ட ஒட்டிசுட்டான் முகாம், கிளிநொச்சி முகாம், ஆனையிறவு முகாம் என்பனவற்றில் பல வருடங்களுக்குப் போதுமான அளவு மருந்து வகைகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. 'ஜயசிக்குறு" நடவடிக்கைக்காக மட்டும் எட்டு ஏக்கர் நிலம் பூராவும் ஆயுதம், மருந்து, உணவு வகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டு வைத்திருந்ததாக கூறப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட கருத்தரங்கில் வெளியான விபரங்களின்படி யாழ்ப்பாண மருத்துவமனைக்கு நிவாரணங்களுக்காக வரும் நோயாளிகளுள் 50% மானவர்களுக்கு மட்டுமே மருந்து வழங்க முடிகிறது.

நீரிழிவு, புற்று நோய், சிறுநீரக நோய்கள், தொய்வு போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியான மருந்து வினியோகம் செய்யப்படுவதில்லை.

வலி நிவாரண மருந்து வகைகளைக் கட்டுப்படுத்தியதின் காரணத்தால் சத்திர சிகிச்சைகளுக்கு உட்படும் நோயாளர் தாங்க முடியாத வேதனைகளைப் பொறுக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண மருத்துவமனைக்கு ஒட்சிசன் சிலின்டர்கள் பலாலி இராணுவ முகாமினால் குறுகிய அளவிலேயே வழங்கப்படுகின்றது. அவசரத் தேவைகளின் போது ஒக்சிசனைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி 25 கிலோமீட்டர்களைக் கடந்து பலாலி முகாமிற்குச் செல்ல வேண்டியுள்ளதோடு அதற்காக 4 மணி நேரம் வீணாகின்றது.

கர்ப்பிணிப் பெண்களுக்கான ஏற்பூசி மருந்து போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளவும், மயக்க மருந்து போன்றவற்றைப் பெறவும், பக்டீரியா தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்வதும் மிகவும் கஷ்டமாகவே உள்ளது.

சத்திர சிகிச்சைக்கும் சிறு வெட்டுக்காயங்களுக்கும் செய்யும் சிகிச்சைகளுக்குத் தேவையான அவசர குணமடைவதற்குத் தேவையான மருந்துகளும் சொற்ப அளவே கிடைக்கின்றன.

மன நோயாளர்களைக் குணப்படுத்துவதற்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதும் மிகச் சொற்பமே.

போர் பீதி மனநோயாளர்களின் அளவை அதிகரிக்கச் செய்தாலும் இலங்கையில் மன நோயாளர் சிகிச்சைப் பிரிவொன்றில்லாத ஒரே மருத்துவமனை யாழ்ப்பாண மருத்துவமனையாகும். மனநோயாளர்களை அமைதிப்படுத்தத் தேவையான ஊசி, மருந்து வகைகள் இங்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் ஆய்வு கூட வசதிகள் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. புற்றுநோய் பரிசோதனை போன்ற எல்லா நடவடிக்கைகளுக்கும் கொழும்பு செல்ல வேண்டியுள்ளது. இங்கு புற்று நோய்ப் பிரிவொன்றும் கூட இல்லை. புற்று நோயாளர்கள் சிகிச்சைகளுக்காக கொழும்புக்குச் செல்ல வேண்டியுள்ளது.

**தனது ஆட்சிக்குட்பட்ட மக்களுக்கு இவ்வளவு சோதனைகளா?**

யாழ்ப்பாண மக்களை தமக்குச் சமமான மக்களாகக் கணிக்க கடந்த ஐம்பது வருடங்கள் பூராவும் இலங்கை அரசாங்கங்களினால் முடியாமல் போயின. இன்று அந்த நிலை சாதாரண எதிர்ப்பு நிலைக்கும் அப்பால் சென்று பயங்கரமான முனையில் மேற்கொள்ளப்படும் பழிவாங்கலாக மாறியுள்ளது. யாழ்ப்பாணம் ஒரு போர் பிரதேசமாயினும் எல்.ரி.ரி.ஈ.யின் பரிபாலனத்தின் கீழ் இயங்கும் ஒரு பிரதேசமல்ல. தனது ஆட்சிப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இந்தளவு வேதனைகளையும் பிரச்சினைகளையும் பெற்றுக் கொடுக்கும் ஒரு அரசாங்கத்திற்கு அந்த மக்களை ஆள்வதற்கான உரிமை

தொடர்ச்சி 7ஆம் பக்கத்தில்...

> இந்தப் பொல்லாத மருந்துக் கொள்கையின் காரணமாக நோயாளர்களாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மரணிக்கும் மக்களின் விகிதாசார அளவு அதிகரித்துள்ளது. கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் மரண விகிதாசாரம் 18%மாக அதிகரித்துள்ளது. இலங்கையில் அதிகமான மலேரியா நோயாளர்களும் அதனால் மரணிப்பவர்களின் தொகையும் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாகவுள்ளனர்.

6ம் பக்கத் தொடர்ச்சி...

இல்லையென்றே கூற வேண்டும். ஏனைய பிரதேசங்களில் இல்லாத மருந்துக் கட்டுப்பாடுகள், மருந்துக் தடைகள் யாழ்ப்பாணத்திற்காக மட்டும் விதிக்கும் போது அந்த மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அரசாங்கத்தால் எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? இந்தப் பொல்லாத மருந்துக் கொள்கையின் காரணமாக நோயாளர்களாக யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மரணிக்கும் மக்களின் விகிதாசார அளவு அதிகரித்துள்ளது. கர்ப்பினி மற்றும் குழந்தைகள் மரண விகிதாசாரம் 18% மாக அதிகரித்துள்ளது. இலங்கையில் அதிகமான மலேரியா நோயாளர்களும் அதனால் மரணிப்பவர்களின் தொகையும் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாகவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், யாழ்ப்பாண பிரதேச பல் மருத்துவ மனைகளின் பிரதான மனநோய் வைத்திய நிபுணருமான பேராசிரியர் தயாசோமசுந்தரம் அவர்களின் கருத்துப்படி மருந்து வகைகளின் கட்டுப்பாடுமட்டுமன்றி சுகாதார சேவை உத்தியோகஸ்தரின் தட்டுப்பாடும் யாழ்ப்பாணத்திலேயே அதிகமாகும். இந்த நிலை 1983ம் ஆண்டு தொடக்கம் நிலவி வந்தாலும் தற்போது அந்த நிலை தாங்க முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. தேவையான மருத்துவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான சிபார்சுகளை தான் செய்த போதிலும் அவை செயற்படுத்தப்படுவதில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

**தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையின் உத்தியோகஸ்தர் நிலை.**

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமான தொடர்பாடல் வசதிகள் தாமதிப்பு, சுகாதார சேவைக்கு மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடும் பேராசிரியர் சோமசுந்தரம் தான் எழுதும் கடிதங்களை கிடைத்ததாகக் கூட பதில்


நிலையங்கள் வைத்தியசாலைகள், சிகிச்சை நிலையங்கள், மருந்தகங்கள், சுகாதார உத்தியோகஸ்தர் காரியாலயங்கள் போன்றவை 55 இருக்கின்றன அவற்றுள் 12 முற்றாக மூடப்பட்டுள்ளது. 08 பாதியளவில் செயற்படுகின்றது. 35 முழுமையாக இயங்குகின்றன. இருந்தாலும் இவைகளின் உத்தியோகஸ்தரின் பட்டியல் இவ்வாறாகும்.

போதனா வைத்திய சாலைகள் தவிர்த்து 12 அட்டவணை ......

யாழ்ப்பான போதனா வைத்தியசாலையின் நிலை

அட்டவணை ....

அரச கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் நிலைமை இவ்வாறாயின்



முழுமையாகவே புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் சுகாதார நிலையும் சுகாதார வசதிகளும் எவ்வாறானவைகளாக இருக்கும்? இந்தப் பிரதேசங்கள் யுத்தத்திற்கு உட்பட்டு

**வேதனைகளையும் சோதனைகளையும் தனது பிரதேச மக்களுக்கு கொடுக்கும் அரசு அவர்களை ஆளத் தகுதியற்றது!**

கிடைப்பதில்லையெனச் சுட்டிக் காட்டுகிறார். யாழ்ப்பாண மக்கள் முகம் கொடுக்கும் இந்தத் தொடர்பாடல் வசதிகள் இல்லாமையின் காரணத்தால் அவர்கள் அதிகமான சந்தர்ப்பங்களை இழக்கின்றனர். இதன்படி நோக்கும் போது தற்போதே உடலாலும் உள்ளத்தாலும் நாடு இரண்டுபட்டு உள்ளது என்பதேயாகும்.

யாழ் மாவட்ட சுகாதார சேவை

இருப்பதினாலோ அல்லது புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதன் காரணத்தினாலோ இவைகளுக்கு உடந்தையாளர்கள் இந்த அப்பாவி மக்களா? இந்த மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கும் பொறுப்பு யாருடையது?

**தாதிமார்களின் அளவு**

| | தற்போதைய நிலை | தேவையான அளவு |
|---|---|---|
| பூரணமான | 14 | 54 |
| மனநோயாளர் பிரிவு | 05 | 10 |
| மனநோயாளர் சிகிச்சைப் பிரிவு | 01 | 01 |

**போதனா வைத்தியசாலைகள் தவிர்த்து**

| தொழில் | தேவையான அளவு | இருக்கும் அளவு |
|---|---|---|
| வைத்திய நிபுணர்கள் | 09 | 02 |
| மருத்துவர்கள் | 59 | 05 |
| பல்வைத்தியர்கள் | 16 | 08 |
| உதவி வைத்தியர்கள் | 58 | 42 |
| M.O.H | 11 | 02 |
| எக்ஸ்ரே | 05 | 01 |
| இரசாயன நிபுணர்கள் | 16 | 04 |
| தாதிகள் | 270 | 383 |
| மருத்துவச்சிமார் | 80 | 31 |
| குடும்ப நல வைத்திய உத்தியோகத்தர்கள் | 269 | 69 |
| பி.எச்.ஐ. | 100 | 46 |

**யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைகளின் நிலை**

**(அட்டவணை)**

| தொழில் | தேவையான அளவு | தற்போதைய அளவு |
|---|---|---|
| வைத்திய நிபுணர்கள் | 32 | 06 |
| வைத்தியர்கள் | 87 | 67 |
| பயிலுனர் வைத்தியர்கள் | 26 | 17 |
| தலைமைத் தாதிகள் | 05 | 01 |
| தாதிகள் | 22 | 02 |
| தாதிகள் ஆண்/பெண | 382 | 244 |
| ஆய்வு கூட உத்தியோகஸ்தர்கள் | 20 | 11 |
| எக்ஸ்ரே நிபுணர் | 15 | 04 |

# விற்றதும் பெற்றதும் ஒரு நீதியரசரின் பார்வையில் !

"1948 - ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரமடைந்ததும் இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமையை அரசாங்கம் பறித்தது. இலங்கையுடன் நேர்மையான உண்மையான தொடர்பு கொண்டிருந்தவர்களின் குடியுரிமையும் பறிக்கப்பட்டது.

வாக்குகளைச் சம்பாதித்துக் கொள்வதே இதன்நோக்கமாக இருந்தது.

பாடசாலைகளில் சிங்களத்தையும் தமிழ் மொழியையும் போதிக்காமலே 1956 ஆம் ஆண்டில் உத்தியோக மொழிச் சட்டத்தை நிறைவேற்றி வாக்குகளுக்காக நாங்கள் மொழியை விற்றோம்.

1958 ஆம் ஆண்டில் வாக்குகளுக்காக விவசாயத்தை விற்றோம். இதற்காக நெற்காணிச் சட்டத்தை நிறைவேற்றினோம். இச் சட்டம் கூட்டுப் பண்ணை முறையை சீரழித்ததுடன் கிராமங்களின் ஒற்றுமையையும் சீர்குலைத்தது.

1972 ஆம் ஆண்டில் பௌத்தத்தை அரச மதமாக்கியதன் மூலம் மதத்தை நாங்கள் வாக்குகளுக்காக விலைக்கு விற்றோம்.

இதற்கு முன்பதாக மதச்சார்புக் கல்வி நிலையங்களை வாக்குகளுக்காக தேசிய மயமாக்கி கல்வியை நாசமாக்கினோம்.

1972, 1973 ஆம் ஆண்டுகளில் நிலச்சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் தோட்டத் தொழிலை வாக்குகளுக்காக விலைக்கு விற்றோம். தவறான நிர்வாகத்தினால் பணப் பொருளாதாரத்தை நாசமாக்கினோம்.

1977 ஆம் ஆண்டில் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை உருவாக்கினோம்.

இப்படி 53 ஆண்டுகளாக எங்கள் நாட்டை அரசியல் பொருளாதாரம், சமூக ரீதியாக சீர்குலைத்திருக்கிறோம்.

இவ்வாறு ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் கே. எம். எஸ். குலத்துங்க நமது நாடு சீரகேடு அடைந்ததைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார்.

கடந்த வருடம் அம்பலாந்தோட்டையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்க பேசுகையில் "கடந்த ஏழு ஆண்டுகளாக நாம் கஷ்டங்களுக்கு மத்தியில் பொறுமையாக சகித்துக் கொண்டிருந்திருக்கிறோம். இனியும் பொறுக்க முடியாது எங்களை அவர்கள் கொல்ல முயற்சித்தால். அவர்களைக் கொல்லுங்கள், ஒரு கொலைகாரனைக் கொல்லுவதில் தவறு ஏதும் இல்லை"" என்று கூறியதாகச் செய்திகள் வெளிவந்தன.

இதற்கு மறுப்பு எதுவும் வெளிவரவில்லை. ஆனால் முன்னாள் பிரதமர் ஒரு விளக்கம் மட்டும் கொடுத்தார். அந்த நேரத்தில் ஏற்பட்ட உணர்ச்சி வசத்தால் வெளியிடப்பட்ட வார்த்தைகள் என்பது அவரது விளக்கம்.

ஜனாதிபதியின் இந்தக் கூற்று அடிப்படை உரிமைகளுக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை மீறுவதாகும் என்றும் ஓய்வு பெற்ற நீதியரசர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

தேர்தல் பிரசாரம் எந்த அளவுக்குத் தாழ்ந்து போயிருந்தது என்பதையே நாட்டின் ஜனாதிபதியின் இந்தப் பேச்சு எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

பெரும்பான்மைப்பலத்தை இழந்த ஒரு அரசாங்கத்தை பெரும்பான்மைப் பலம் பெற்ற அரசாங்கமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு பகீரதப் பிரயத்தனமே இது என்றும் ஓய்வு பெற்ற நீதியரசர் கூட்டிக் காட்டியிருக்கிறார்.

ஒரு ஆங்கிலத் தினசரியில் ஓய்வு பெற்ற நீதியரசர் குலத்துங்க எழுதியுள்ள ஒரு சிறிய கட்டுரையில் இவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நாடு சுதந்திரமடைவதற்கு முன் நாங்கள், சாதி, இனப்பாகுபாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நாட்டை பிளவுபடுத்தினோம். சுதந்திரத்தின் பின் சோல்பரி ஆணைக்குழு எதிர்பார்த்ததற்கு மாறாக, சகல மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கும் ஆட்சியமைக்கும் வாய்ப்பை மறுத்ததன் மூலம் இலங்கையின் தனித்துவம் உருவாக்கப்படுவது தடுக்கப்பட்டது.

பிரிட்டனின் வெஸ்ட் மினிஸ்ட்டர்



முறையின் கீழ் வெற்றி பெற்றவரே நிறைவேற்று அதிகாரம் கொண்டவராவர். இது பெரும்பான்மைச் சமூகத்தில் பாதிப்பேருக்கு வாக்குரிமையை இழக்கச் செய்து விடுகிறது. பொரும்பான்மைச் சிங்களக் கட்சியுடன் சேர்ந்தவர்கள் தவிர சிறுபான்மையினர் அனைவரினதும் வாக்குரிமையை இழக்கச் செய்து விடுகிறது.

சிறுபான்மையினர் தனியாக விலகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகவும் ஏற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை நாராயண சாமி எழுதிய "இலங்கையின் புலிகள்"" என்ற நூலும் அனிதா பிரதாப் எழுதிய "இரத்தத் தீவு"" என்ற நூலும் எடுத்துக் காட்டுவதாகவும் ஓய்வு பெற்ற நீதியரசர் குலத்துங்க சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்த நிலையில் தெற்கில் ஒரு போரும் வடக்கில் ஒரு போரும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தெற்கில் சகல கட்சிகளும் இனப்பிரச்சினையின் அடிப்படையில் பிரசாரம் செய்கின்றன. வடக்கில் சமரசப் பேச்சுக்கே இடமில்லாத பிரபாகரனின் ஈழம்.

மூன்றாவது நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்று பிரபாகரன் ஈழம் அமைக்க முடியாவிட்டாலும் கூட இந்தப் போர் வெற்றி பெற முடியாது என்று கூறும் முன்னாள் நீதியரசர் குலத்துங்க சிறுபான்மையினரின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்கு ஒரேயொரு வழிதான் இருப்பதாகத் தெரிவிக்கிறார். அவர் கூறும் தீர்வு இது தான்.

பிஜித்தீவின் 1998 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் படி பல கட்சியினரையும் கொண்ட நிறைவேற்று அதிகாரம் உள்ள சுயாதிபத்தியமுள்ள அமைச்சரவையை அமைப்பதன் மூலம் சிறுபான்மையினரின் ஆதரவைப் பெறுவதுடன் சிங்களவர்களுக்கிடையேயுள்ள பகைமையையும் முடிவுக்குக் கொண்டுவரலாம்." என்று கூறும் முன்னாள் நீதியரசர் குலதுங்கா இதன் மூலம் சுயாதிபத்திய முள்ள ஒரு நாட்டின் சுயாதிபத்தியமுள்ள சகல மக்களுக்கும் பங்கிருக்கிறதென்பதை இது ஏற்படுத்தும் என்று கூறுகிறார்.

முன்னாள் நீதியரசர் குலத்துங்க தெரிவித்திருக்கும் இந்த யோசனையின் ஒரு வடிவமாகத்தான் கடந்த பொதுத் தேர்தல் முடிந்ததும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடனும் இதர அரசியல் கட்சிகளுடனும் பிரதமர் ரணில் பேச்சு நடத்தி "தேசிய அரசு" என்ற பெயரில் ஆட்சி அமைக்க முனைந்தார். நவக்கிரகங்களை ஒன்று சேர்க்க முடியாமல் போனது.

1965 ஆம் ஆண்டில் டட்லி சேனாநாயக்காவும் பல கட்சிகளையும் சேர்த்து "தேசிய அரசாங்கம்" அமைத்தார். அதுவும் உருப்படியாக எதையும் செய்ய முடியாமல் போனது.

முன்னாள் நீதியரசரின் யோசனை இன்றுள்ள நிலையில் செயல்பட முடியுமா?

விக்டர் ஐவன்

# நாடே அழிந்த பின்னர் நமக்குச் சுதந்திரம்?

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது. இலங்கை சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டாலும் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை அது பூரணப்படுத்திக் கொள்ள முடியாமல் போயுள்ளது. எதிர்வரும் நான்காம் திகதி சுதந்திரத்தின் 54ம் ஆண்டு நிறைவை நினைவு படுத்த வேண்டியுள்ளதும் மனநிறைவோடல்ல என்றே கூறவேண்டும்.

பெரும்பாலான நாடுகள் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக இரத்தம் சிந்த நேர்ந்தது. சுதந்திரத்திற்காக இரத்தம் சிந்திய நாடுகளுக்கு அது அர்த்தங்களையும் பெறுமதியையும் பெற்றுக் கொடுத்தன. மேலும் இரத்தம் சிந்தாமல் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான கோட்பாடுகளையும் புது அரசியல் முறைகளையும் பெற்றுக் கொடுத்தன. இருந்தும் இலங்கை ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமலேயே சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. பெற்றுக் கொண்ட சுதந்திரத்தை பூரணப் படுத்திக் கொள்ளத் தேவையான சமுதாயக் கோட்பாடுகளையும் அரசியல் முறையையும் உருவாக்கிக் கொள்ள முடியாமல் போனதன் காரணத்தால் இன்று முடிவில்லாதவாறு இரத்தம் சிந்தும் ஒரு நாடாக மாறியுள்ளது.

ஆங்கிலேயர்களிடமிருந்து எமக்கு சுதந்திரம் மட்டுமல்ல, அரசியல் அமைப்புச் சட்டமும் கூட பரிசாகவே கிடைத்தது! இருந்தாலும் எழுத்து மூலமான அரசியல் அமைப்புச் சட்டமொன்றைப் பரிசாகத் தந்த இங்கிலாந்துக்கு எழுத்து மூலமான அரசியல் அமைப்புச் சட்டமொன்று இருக்கவில்லை. ஆங்கிலேயர்களால் எமக்கு வழங்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தினுள் இருக்க வேண்டிய புதிய கருத்துக்கள் அடங்கியிருந்தாலும் பிளவுபட்டிருந்த இனக்குழுக்களை ஒன்றாக இணைக்கக் காரணமாக அமையும் அங்கங்கள் அதனுள் அடங்கியிருக்கவில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை அம்சங்கள் இந்தியச் சிறைக் கூடத்தினுள்ளேயே பிறந்தன. அது நவீன அரசியல் சட்டங்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டம் மட்டுமல்லாது தனது நாட்டினுள் புரையோடியுள்ள பிரச்சினைகளை மட்டுமல்லாது, எதிர் காலத்தில் ஏற்படவுள்ள பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஒரு அரசியல் அமைப்புச் சட்டமுமாகும். இந்தியா முன்னோக்கிச் செல்வது அந்த அரசியலமைப்புச் சட்டத்தின் துணையுடனேயே. இருந்தாலும் நாங்கள் வெள்ளைக்காரர்களிடம் பெற்ற சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டத்தையும் தள்ளிவிட்டு, கொல்வின் ஆர்.டி.சில்வாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட 1972ம் ஆண்டு குடியரசுச் சட்டத்தையும் புறக்கணித்து விட்டு 1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட மூன்றாவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்குப் பதிலாக புதியதொரு அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டிய நிலையையடைந்துள்ளோம். இன்னும் நாங்கள் இருளினுள் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

சுதந்திரத்தைப் பெற்றக் கொள்ளும் போது நாங்கள் அபிவிருத்தித் துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவு கோல்களின்படி இலங்கை ஆசியாவின் ஏனைய நாடுகளை விட முன்னணியில் நின்றது. ஆனால் இன்று எமது நாடு வெகுதூரம் பின்னோக்கிச் சென்றுள்ளது.

2001ம் ஆண்டில் இலங்கையின் ஒரு தனிநபரின் வருடாந்த வருமானம் 2500 டொலர்களாகும். சிங்கப்பூரில் அது 26300 டொலர்களாகும். தாய்லாந்தில் 16500 டொலர்கள். மலேசியாவில் அது 10300 டொலர்கள், 1960 ம் ஆண்டு ஆரம்பத்தில் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ தனது நாட்டை ஒரு இலங்கையாக மாற்ற வேண்டுமெனக் கனவு கண்டார். ஆனால் இலங்கைத் தலைவர்களுக்கு எமது நாட்டை ஒரு சிங்கப்பூராக மாற்றக் கனவு காண வேண்டிய நிலை வந்துள்ளது.

இன்று இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியின் வேகம் 0.6 நிலைக்குப் பின் சென்றுள்ளது. 2001 ம் வருடம் முழு வலயத்திலும் அதிக அளவில் பண வீக்கத்தைக் காட்டி நின்ற நாடாக இலங்கையே உள்ளது. இலங்கையின் அளவு 15% மாகும். இந்தியாவின் அளவு 4.3% மாகும். சிங்கப்பூரில் 1.2% மாகும். தாய்லாந்தில் அளவு 1.7% மாகும். தற்போது இலங்கை வெளிநாடுகளில் இருந்தும் பெற்றுக் கொண்டுள்ள கடன்களுக்காகச் செலுத்த வேண்டியுள்ள வட்டியின் விகிதம் வருடத்திற்கு வெளிநாடுகளில் இருந்து உதவியாகக் கிடைக்கும் பணத்தொகையையும் மிஞ்சும் நிலையையடைந்துள்ளது.

யுத்தத்திற்காக வேண்டி மட்டும் இலங்கை அரசாங்கம் இதுவரை செய்துள்ள செலவின் அளவு ரூபா 50 ஆயிரம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற வருடம் அதற்காகச் செய்யப்பட்ட செலவு ரூபா 10 ஆயிரம் கோடியாகும். நாட்டின் சனத்தொகையின் அளவு இரண்டு கோடிக்கு சற்று குறைவாகும். வடக்குகிழக்கு யுத்தத்தினாலும் தென்னிலங்கை கிளர்ச்சிகளின் காரணத்தாலும் மரணித்தவர்களின் அளவு ஒரு இலட்சம் பேரெனக் கூறப்படுகின்றது. அநாதரவானவர்களின் அளவு பத்து இலட்சத்துக்கும் மேலாகும்.

எழுத்தறிவில் இலங்கையரான நாங்கள் முன்னேறிய நாடுகளையும் விட முன்னணியில் இருப்பதாகப் பெருமைப் படுகின்றோம். இருந்தாலும் நாம் பின்பற்றும் சமுதாயக் கோட்பாடுகள், நடத்தைகள் எமது எழுத்தறிவுக்குத் தகுந்தாற் போல் இல்லை. இலகுவில் வெற்றிபெற முடியாத இயற்கை அனர்த்தங்கள் போன்ற ஆபத்துக்களின் காரணத்தால் எழுந்து நிற்க முடியாத நாடுகள் பல இருந்தாலும் நாங்கள் பாரிய பிரச்சினையாக ஏற்படுத்திக் கொண்டுள்ளது இலகுவில் தீர்வுகளைத் தேடிக் கொள்ளக்கூடிய பிரச்சினைகளேயாகும்.



இலங்கை மக்கள் தமது வாழ்க்கையைப் பொருளாதார ரீதியில் பிரயோசனமான காரியமொன்றிற்காகச் செலவழிப்பதை விட பொழுது போக்காகக் கழிக்கவே விரும்புகின்றனர். விடுமுறை நாட்கள் அதிகம் உள்ள நாடும் இலங்கையேயாகும். கிடைக்கும் உத்தியோகபூர்வ விடுமுறை நாட்களை விட சம்பளம் இல்லாமல் அதிக அளவு விடுமுறையைப் பெற்றுக் கொள்ளும் நாடும் இலங்கையாக இருத்தல் வேண்டும். சிங்கள வருடப் பிறப்பு முடிந்து பல வாரங்கள் கொழும்பு நகரில் வியாபார ஸ்தாபனங்கள் மூடி வைக்கப்படுகின்றன.

இருந்தாலும் இந்த இலங்கையர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கையில் அவரது வாழ்க்கையும் நடத்தைகளும் புரட்சிகரமான முறையில் மாற்றமடைகின்றன. அப்போது அவர் மற்றவரின் உரிமைகளை மதிக்கும், கஷ்டம் பாராது உழைக்கும், சட்டத்தைப் பின்பற்றும் செயல்திறன் மிக்கவராக மாறுகின்றார். செயல் திறனில் தாம் ஏனையவர்களை விட இரண்டாம் தரமானவர் அல்ல என்பதையும் காட்டி நிற்கின்றார்.

அரசியல் துறையிலும் இது போன்ற முரண்பாடுகளைக் கண்டு கொள்ள முடிகின்றது. இலங்கையர் போன்று உணர்பு பூர்வமான மனிதர்கள் எந்த நாட்டிலும் இல்லையென்றே கூற வேண்டும். ஆனால் நாட்டின் நிலவுவது அந்த அறிவுக்கும் உணர்வுக்கும் பொருத்தமற்ற கீழ்மட்ட அரசியல் கலாசாரமாகும். லீ குவான் யூ ஒரு காலம் சிங்கப்பூரை ஓர் இலங்கையாக மாற்றுவதற்குக் கனவு கண்டாலும் இன்று அவர் தோல்விக்கு நிதர்சனமாகக் காட்டும் நாடும் இலங்கையேயாகும்! இனங்களிடையே நிலவும் ஆவேச உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், பரிபாலிக்கவும் முடியாமை இந்தப் பின்னடைவுக்கு முக்கிய காரணமென அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கையரான நாங்கள் காலனிக் கொள்கைகளை புறம் தள்ளியது எமது தேவை காரணமாகவல்ல வெள்ளையர்களின் தேவை காரணமாகவேயாகும். எமக்கு சுதந்திரம் கிடைத்ததும் சுதந்திரம் எமக்குத் தேவையாக இருந்ததினால் அல்ல வெள்ளையர்களின் தேவை காரணமாகவேயாகும். இவைகளனைத்தும் எமது மூளைகளைச் சுத்திகரிக்காமல் நடந்தவைகளாகும். அதனால் முதலாளித்துவவாதிகளாக, ஜனநாயகவாதிகளாக முன்னிற்கும் தேவை எமக்கு இருந்தாலும் எமது நரம்புகளில் இன்னும் ஓடிக்கொண்டிருப்பது காலனித்துவ இரத்தமேயாகும். தமது இன உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு மற்றவர்களின் உரிமைகளைக் கௌரவிக்கும் பக்குவம் இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை.

சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டுகளைக் கடந்து விட்டாலும் இனத்துவ வரம்புகளை மீறிய அனைத்து மக்களினதும் கௌரவத்திற்குப் பாத்திரமாகும் வகையிலான தலைவர்களை உருவாக்கிக் கொள்ள எம்மால் முடியாது போயுள்ளது. டி.எஸ்.சேனாநாயக்க, பண்டார நாயக்க, சிறிமா பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தனா. பிரேமதாச போன்ற தலைவர்கள் சிங்கள மக்களின் கௌரவத்திற்குப் பாத்திரமான தலைவர்களேயொழிய தமிழ், முஸ்லிம் மக்களின் கௌரவத்திற்குரிய தலைவர்கள் அல்லர். தமிழ் சமுதாயம் உருவாக்கிய ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களும் தமிழ் மக்களின் கௌரவத்திற்குரிய தலைவர்களாக இருந்த போதிலும் சிங்கள, முஸ்லிம் மக்களின் கௌரவத்திற்குறிய தலைவர்களாக இருக்கவில்லை. புரட்சிகரமான வன்முறை மிக்க மார்க்கங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட பிரபாகரன், வீஜேவீர போன்றவர்களால் கூட சிங்களம் அல்லது தமிழ் அறிஞர்களிடம் மட்டுமே யொழிய சிங்களம், தமிழ், முஸ்லிம் எல்லோருடைய கௌரவத்தையும் பெறும் தலைவர்களாக மாற முடியவில்லை.

இலங்கையின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுவது மக்களின் தொடர்புகளுக்கு அடிப்படைக் காரணமாக அமையவுள்ள இந்த இனங்களிடையே நிலவும் பிரச்சினைக்கு தீர்வு தேடுவதற்கு எமக்குள்ள திறமையின் அளவிலேயேயாகும். இவ்வளவு காலமும் நாங்கள் பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்கள் அதற்கான நல்ல சிந்தனையை ஏற்படுத்திக் கொள்வதற்கு போதுமானதாக அமையாதிருப்பின் அதற்கான சிந்தனை எமக்குப் பிறப்பது முழு நாடும் அழிந்தொழிந்து சென்றதன் பின்னரேயாகும். அந்த இடமும் இலகு தூரத்தில் இல்லை என்றே கூறத் தோன்றுகின்றது.

இதுவரை பெற்ற அனுபவம் போதாதெனில் இனி முழு நாடும் அழிந்த பின் கிடைத்து என்ன பயன்?


நிழலின் பிரதிபலிப்பாய்...

கடந்த மூன்று வருடங்களாக புகலிட இலக்கியப் பரப்பில் படர்ந்து தொடரும் "உயிர்நிழல்" சஞ்சிகையின் மீதான மீள்நோக்கும், அதன் நகர்திசை குறித்த ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள் சேகரிக்கும் முகமான ஒன்று கூடலும்.

03.02.2002
ஞாயிற்றுக் கிழமை
பிற்பகல்
2.00 மணி

தமிழர் வித்தியாலயம் -
பல்கலைக் கல்லூரி
70-75 Rue Phillie de Girard
75018 PARIS
M: La Chapelle ou Marx Dormoy

தலைமையுரை : யா.பாலகிருஷ்ணன்
கருத்துரை வழங்குவோர்:
உமாகாந்தன்
சிவலிங்கம்
சிவபாலன்
நவா ஜோதி
புஸ்பராஜா
மனோகரன்
வாசுதேவன்
சிவலிங்கம் (இங்கிலாந்து)
சச்சிதானந்தம்
உதயகுமார்
அசோக்
அருந்ததி
இயல்வாணன்
ஞானி

இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தொடர்ந்தும் கருத்துப் பகிர்வு நடைபெறும்

-சிவஒளி

# பொடோ ஒரு சட்ட பயங்கரவாதம்!

சர்வதேசமெங்கும் சஞ்சரிக்கின்ற ஓர் அரச வியாதி தான் பயங்கரவாத தடைச்சட்டங்கள். ஆட்சி முறைகள் வேறுபட்டாலும் அடக்கு-முறை வடிவங்கள் ஒரு இலக்கை நோக்கியே. நகர்த்தப்படுகின்றன.. அதாவது உரிமைக்காகப் போராடுகின்ற இனத்தினையும், அது சார்பான மக்களையும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்குகின்றன.

இனத்தின் சுயநிாணய உரிமைக்காக போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரசு தடைசெய்தது மாத்திரமன்றி கடந்த ஆட்சியின் கௌரவத் தமிழரான (?) வெளிநாட்டமைச்சரைக் கொண்டு உலக நாடெங்கும் இரட்டைவேட முகமூடியோடு ஓலமிட்டு அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலிகளின் செயற்பாடுகளுக்கு தடைவிதித்தது. தமது இனத்தின் விடுதலை எனும் இலட்சித்திற்காய் அர்ப்பணிப்புடன் போராடுகின்றவர்களை தடைச்சட்டங்கள் தடுத்துவிடும் என்பது அதிகாரவெறி பிடித்த அடக்குமுறை அரசுகளின் ஆணவ எண்ணம். தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக இலங்கையில் எவ்வகையான சட்டங்கள் காணப்படுகின்றனவோ, அதேபோன்று தான் இந்தியாவிலும் உரிமைக்காகப்-போராடுகின்ற அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒடுக்கும் நோக்குடன் புதிதாக ஓர் சட்டம் உருவாக்கப்-பட்டுள்ளது.

### தடாக் கைதிகள் இன்னமும் இருக்கையிலே பொடோவுமா?

இதற்கு முன்னதாக இந்தியாவில் அமுல்படுத்தப்பட்டு, அகற்றப்பட்ட தடைச்சட்டம் "தடா ( The Terrorist and Disruptive Activities prevention Act)." தடா நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் கைதானவர்கள் தொடர்ந்தும் 8 ஆண்டுகளாய் சிறையில் வாடுகிறார்கள். தொடர்பற்றவர்கள் கூட சித்திரவதைகளின் வெளிப்பாட்டால் தொடர்புடையவர்களாக காட்டப்பட்டு விசாரணையின்றி சிறையில் வாடுகிறார்கள். குறிப்பாக இதில் ராஜீவ்காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களும் கூட.

தடாவின் கொடூரமே இத்தகைய-தெனில் புதிதாக அமுல்படுத்தப்-பட்டுள்ள சட்டம் அதனையும் விட பன்மடங்கு பயங்கரமானது. மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசுகள் அடக்குமுறை சட்டங்கள் மீது அதீத நம்பிக்கை வைத்து அவற்றைக் கையிலெடுக்கின்றன. அத்துடன் அமெரிக்கா போன்ற மேலாதிக்க நாடுகளை திருப்திப்படுத்தி, அவர்களிடமிருந்து இராணுவ பொருளாதார சலுகைகளை பெறுவது, உள்நாட்டில் உருவாகிவரும் பொருளாதார நெருக்கடி, மக்களின் குமுறல்கள் போன்றவற்றிலிருந்து அவதானத்தை அசைய வைத்து தமது ஆட்சியை தக்கவைப்பதற்கான அக்கறை. இதுவே பயங்கரவாத சட்டங்கள் மீதான பின்னணி. மக்களையும், ஒடுக்கப்படுகின்ற இனத்தின் உரிமைக்காக போராடுகின்ற இயக்கங்களையும் இல்லாதொழிக்க துடிக்கின்றனா். இந்த நடவடிக்கை மூலம் பயங்கரவாதத்தை உரிமைக்கான குரலை நசித்து விடலாம் என்பது மனக் கணக்கு. பயங்கரவாதம் என்றால் என்ன? அதில் சம்பந்தப்பட்ட தரப்பான பயங்கரவாதிகள் என்றால் எப்படிப்பட்டவர்கள் என்பதை சரிவர வரையறுக்காமல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் "பயங்கரவாதம்" என்பதை சாதுரியமாக பயன்படுத்தி வருகையில், பயங்கரவாதத்தை எதிர்கொள்வது என்ற பெயரில் அடிப்படையிலேயே மனித உரிமைகளுக்கு எதிரான சட்டத்தை கொண்டுவர இந்திய மத்திய அரசு தருணம் பார்த்துக் காத்திருந்தது. பயங்கரவாதத்தை அடியோடு அழிப்பதற்கான ஒரே வழி தடைச்-சட்டங்களே எனப் பகல் கனவு காண்கிறது.

### ரௌலத் சட்டத்தையும் விஞ்சும் பொடோ

இவற்றின் விளைவு "தடா" எனும் கொடூரமான சட்டம் தாண்டவமாடியது. இருவருடத்துக்கு ஒரு தடவை நீடிக்கப்பட்ட இச் சட்டம் நடைமுறை காலத்தில் பல்லாயிரம் தலைகளின் உயிர்களுக்கு விலைவைக்கப்பட்டது. இதன் நச்சுவீச்சில் பாதிக்கப்பட்ட மக்களின் கடுமையான எதிர்ப்பால் மீண்டும் தன் மூர்க்கமூச்சை பரப்ப முடியாமல் மூச்சுத்திணறி தன் கதையை தானே முடித்துக் கொண்டது. இதற்கு அவசர சிகிச்சை அளிக்க அப்போதைய அரசு முயற்சித்தும் முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது. தற்போதைய மத்திய அரசு தருணம் பார்த்திருந்து மற்றுமொரு தடைச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இச்சட்டம் அடிப்படையில் தவறானதும் தடாவை விடப் பயங்கரமானதும் கூட அமெரிக்காவை அதிரவைத்த "செப்டெம்பர் 11"ஐ ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி புதிதாக ஓர் சட்டத்தை அழுத்தித் திணிக்க அரசு முயல்கிறது. ஆம் அந்த அதிபயங்கரமான சட்டம் தான் "பொடோ"( Prevention of Terroism Ordinance). பொடோவின் வரவானது மிகப்பெரிய ஜனநாயக நாடாக சொல்லப்படும் இந்திய ஜனநாயகத்-தையே அவமதிப்பதற்கு ஒப்பானது. இச்சட்டம் பிரித்தானிய ஆட்சியின் போது சுதந்திரப் போராட்டத்தை நசுக்க கொண்டு வரப்பட்ட "ரௌலட்" சட்டத்தையும் விஞ்சிவிடுகிறது.

இத் தடைச் சட்டத்தின் இலக்கு எது என்பது பற்றி மூத்த வழக்கறிஞா் தமிழ் நாட்டின் கண்ணபிரான் பின்வருமாறு கூறுகிறாா். தற்போது இந்தியாவில் 23 அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சுயநிர்ணய உரிமைக்காக தற்போதைய காலகட்டத்தில் தீவிர முனைப்போடு போராடி வருபவை. ஆனால் எந்த அமைப்பும் இந்துசாா் அமைப்பல்ல. இவா்களின் போராட்டம் முனைப்பு பெறுவதற்கான காரணம் திரைமறைவில் இடம்பெற்றுவரும் இந்து அரசை கட்டியமைப்பதற்கான செயற்பாட்டால் தாம் மதச் சார்பின் மையை இழந்து விடுவோமோ என்ற அச்சுறுத்தலாகும். இந்த நிலைதான் சிறுபான்மை சமூகத்தவரிடையே போராளிகளின் எண்ணிக்கையை உயர்வடையச் செய்கிறது. இச்சந்தர்ப்பத்தில் பன்முகத்தன்மை நிறைந்த ஜனநாயக சமூக அமைப்பை உண்மையான கூட்டாட்சி அமைப்பாக மாற்றாமல் இந்து சமூகமாகவோ அல்லது சாதி ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் அமைப்பாகவோ வடிவம் பெறச்செய்வது கடும் தோல்வியை சந்திப்பதுடன் சிறுபான்மையினரின் உரிமைப் போராட்டம் மேலும் முனைப்போடு உறுதிமிக்கதாக அமையவும். வழிசமைக்கும் என்கிறாா்.

தடாச்சட்டம் மனிதா் உயிா்வாழ்-வதை தடுத்தது. அது ஓா் ஒட்டுமொத்த மக்கள் கிளர்ச்சியின் போது ஓரங்கட்டப்படக் கூடியது. ஆனால் "பொடோ" மனிதரின் உயிா்வாழ்வுக்கு உத்தரவாதமின்றி பொசுக்கக் கூடியது. பயங்கரவாதத்துக்கான காரணங்களை இனம்கண்டு அதற்கான பரிகாரத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக உரிமைகளை உருக்குலைக்கின்ற மேலாட்சியே "பொடோ." இது அதிகாரத்தை சிறப்புற செயற்படுத்தாத இந்திய காவல்துறையை இன்னும் அட்டூழியங்களை அரங்கேற்ற வழிசமைக்கிறது. இச் சட்டத்தை சாதாரணமாக சிறிய அளவில் பயன்படுத்தினாலே மனித, உரிமை மீறல்கள் தலைவிரித்தாடும் சுதந்திரத்தை நேசிப்பவா்களையும், பயங்கரவாதத்தை எதிர்ப்பவா்களையும் மிகுந்த கவலை கொள்ளச் செய்யும் என்கிறார் பத்திரிகையாளா் பிரபுல் மித்வாய் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச உடன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்த நாடு இந்தியா. அதன் பிரகாரம் விசாரணை நடந்து முடியும் வரை ஒருவரையும் சிறையில் அடைக்க முடியாது என்கிறது ஐ.நா உடன்பாட்டின் 9(3)வது பிரிவு. ஆனால் பொடோவின் கீழ் கைதானால் ஒருவரின் பிணைமனு அரசவழக்கறி-ஞர்கள் எதிர்க்காமல் இருப்பின் ஒருவருட சிறைவாசத்திற்குப் பின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் குற்றம் சாட்டப்பட்டவா் நிரபராதி என நீதிபதி கருதினால் மட்டுமே அவா் பிணையில் செல்லமுடியும். சுருங்கக் கூறின் பொடோவின் பிணையே ஒரு மாயைதான். இவற்றிற்கெல்லாம் அப்பால் 48(9) பிரிவின் படி கைதுசெய்யப்பட்டவா் வெளிநாட்டவராக காணப்பட்டால் அவருக்கு பிணையில் விடுதலையாகும் உரிமையே கிடையாது.

> ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டை ஏற்று, அதற்கு ஒப்புதலும் தந்தள்ள இந்தியா, அந்த உடன்பாட்டின் விதிகளுக்கு எதிராக, இந்த சட்டத்தை கொண்டு வந்துள்ளது. தடா சட்டம் கொண்டு வரப்பட்டபோதே ஐ.நாவின் மனித உரிமைக்குழு அதற்கு எதிர்ப்பும், வருத்தமும் தெரிவித்தது. அதன்பிறகும் பா.ஜ.க. ஆட்சி இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது முறையல்ல.




"பொடோ" சட்டத்தை கண்டித்த சர்வதேச பொது மன்னிப்பு மன்றம் தனது அறிக்கையில் பின்வறுமாறு தெரிவிக்கிறது. ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டை ஏற்று, அதற்கு ஒப்புதலும் தந்தள்ள இந்தியா, அந்த உடன்பாட்டின் விதிகளுக்கு எதிராக, இந்த சட்டத்தை கொண்டு வந்துள்ளது. தடா சட்டம் கொண்டு வரப்பட்டபோதே ஐ.நாவின் மனித உரிமைக்குழு அதற்கு எதிர்ப்பும், வருத்தமும் தெரிவித்தது. அதன்பிறகும் பா.ஜ.க. ஆட்சி இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது முறையல்ல.

அடுத்து பயங்கரவாதிகள் என அடையாளம் காணப்படுகிறவா்களுடன் சிறுதொடர்பு வைத்திருந்தால் கூட தொடர்பு வைத்தவா் பயங்கரவாதியாகக் கருதி தண்டிக்கப்படுவாா் என்று 21 (2) (சி) பிரிவு கூறுகிறது. அண்மையில் ஜம்மு - காஷ்மீா மாநில போராளி அமைப்பின் பிரதிநிதிகளுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தை நடாத்தியது. இனியும் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக பிரதமரும், உள்துறை அமைச்சரும் கூறுகிறார்கள். அப்படியானால் இந்தப் பேச்சு வார்த்தையில் பங்கெடுப்பவர்-களையும் கைது செய்ய வேண்டி-யிருக்குமே? ஐ.நாவின் 25(1)வது பிரிவு இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட-லாகாது என்கிறது. "பொடோ"வோ இரகசிய விசாரணையை திணிக்கிறது. இதனால் சித்திரவதைக்கான வாய்ப்பு அதிகமுள்ளதுடன் குற்றம் சாட்டப்பட்டவா் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் உரிமையையும் மறுக்கிறது.

### தடா - பொடோ வேற்றுமை

டெல்லி தொடர்குண்டு வெடிப்பின் விளைவால் 1985இல் நான்கு மாநிலங்களுக்கு மட்டும் அமுல்படுத்தப்பட்டது "தடா."

இப்போது இந்தியா முழுவதற்கும் அமுல்படுத்தப்பட்டுள்ளது "பொடோ." தடா இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடிக்க வேண்டும். "பொடோ" ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நீடித்தாலே போதுமானது. தடா பயங்கரவாத செயல்களில் ஈடுபடுவோரை தண்டிக்க கொண்டுவரப்பட்டது. ஆனால் "பொடோ" சட்டப் பிரகாரம் பயங்கரவாத அமைப்பென்று அரசு எந்த அமைப்பை கருதுகிறதோ அதை தடைசெய்ய முடியும். இதன் மூலம் குறித்த அமைப்புடன் ஓா் சிறியளவிலான தொடர்பு வைத்தாலே வைத்தவரை பயங்கரவாதி எனக் கூறி கைதுசெய்ய முடியும். பொடோவின் ஒரு பொறி யாதெனில் எது பயங்கரவாதம் என்று வரையறுக்கப்படவில்லை. வரையறுக்கப்படாமை என்பதற்கான சான்றாக திட்டவட்டமற்ற வகையில் ஓா் சொற்தொடா் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது நாட்டின் பாதுகாப்புக்கான உடமைகள், அடிப்படைத் தேவைகள் தொடர்பான விநியோகம் தொடர்பானவற்றை சேதப்படுத்துதல், அழித்தல் இது தொடர்பான வேறுநோக்கங்களோடு செயற்படுவோா் பயங்கரவாதிகள் என சட்டம் கூறுகிறது. இங்கு "வேறுநடவடிக்கைகள்" என்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படாமை-யால் எந்த ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டவா் மீதும் இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து மரண தண்டனையோ, ஆயுள்தண்டனையோ அளிக்கலாம். குறைந்தபட்ச அபராதம் 10 இலட்சம் ரூபாயாகும். "ஆயிரம் குற்றவாளி-களுக்காக ஒரு சுத்தவாளியும் தண்டிக்கப்படக் கூடாது என்கிறது நீதி. ஆனால் பொடோ ஒரு குற்றவாளிக்காகப் பல்லாயிரக் கணக்கானோரின் வாழ்வைப் பறிக்கப் பார்க்கிறது.'

### சட்டங்களால் பிரச்சினை தீருமா?

"பொடோ" 3(8) மற்றும் 14இன்படி பயங்கரவாத நடவடிக்கை பற்றித் தெரிந்திருந்து காவல்துறைக்கு தகவல் தெரிவிக்காவிடில் அவா் அதில் எந்தவித தொடர்பும் அற்றவராக காணப்-பட்டாலும், கூட ஒருவருட சிறைத்-தண்டனை அனுபவிக்க வேண்டும். தெரிவிக்கும் தகவல் தவறாயின் 3வருட சிறைத்தண்டனை' என்பது முக்கிய விடயம். இவ்விதியானது எழுதாத சட்டமாகவும், ஒவ்வொரு பிரஜையும் காவல்துறைக்கான மறைமுக உளவாளியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இச்சட்டம் பத்திரிகையாளா்களையும் பாதிப்புக்-குள்ளாக்குகின்றது. தனது பத்திரிகைக்கு தகவல் சேகரிக்கும் பத்திரிகையாளா் அத்தகவல்களை காவல்துறைக்கு தெரிவிக்காவிடின் அவரும் ஓா் பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்படுவாா். இது ஓா் பத்திரிகையாளன் தனது தலையாய கடமையான மக்களுக்கு தகவல் தெரிவிப்பதை பார்க்கிலும் முதலில் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று நிா்ப்பந்திக்கிறது. இது பத்திரிகையாளரின் அழுத்தமற்ற சுதந்திரமான செயற்பாட்டுக்கு தடைவிதிக்கிறது.

இச் சட்டத்தை கடுமையாக எதிர்க்கும் தேசிய மனித உரிமை ஆணையாளா் தலைவா் நீதிபதி ஜே.எஸ்.வா்மா பின்வருமாறு கூறுகிறாா். இத்தகைய சட்டங்களால் பிரச்சினை-களை தீர்த்து விட முடியாது. அப்பாவிகள் அநியாயமாக தண்டிக்கப்படக் கூடாது என்பதற்கு சட்டம் தந்துள்ள பாதுகாப்புகள் அனைத்தையும், இந்தச் சட்டம் பறித்து விடுகிறது. அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான இந்தச் சட்டம், சர்வதேச அளவில் ஏற்றுக்-கொள்ளப்பட்ட சட்ட அடிப்படை-களுக்கு எதிரானது.

மற்றுமொரு மிகப் பிரதானமான விடயம் யாதெனில், ஒரு நாட்டின் ஜனநாயக செயற்பாட்டை அளவிடும கருவியான நீதிமன்றத்தை அவமதிப்பது போன்று நீதித்துறை சம்பந்தமான செயற்பாடுகளை காவல்துறையின் கைகளுக்கு பொடோ அளித்துள்ள-தானது காவல்துறை அராஜகம் மேலோங்கச் செய்யும். இது உலகில் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவை சா்வதேசத்தின் மத்தியில் தலைகுனிய வைக்கும் என்பது திண்ணம்.

-என்.சரவணன்-

# 75 வருடங்களின் பின்னும் பெண் பிரதிநிதித்துவம் கோரி....



## பெண்கள் வாக்குரிமை போராட்டத்திற்கு வயது 75

## தேசியப்பட்டியலில் ஒரு பெண் கூட இல்லை!

## அமைச்சரவையில் ஒரே ஒரு பெண் மாத்திரமே!

12வது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்து இரு மாதங்களாகின்றன. இத்தேர்தலில் மொத்தமாக 118 பெண்கள் போட்டியிட்டிருந்தனர். தெரிவான 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 10 பேர் பெண்களாவர். இது மொத்த உறுப்பினர்களில் 4.4 வீதமாகும். கடந்த 1989, 1994 ஆகிய தேர்தல்களில் 5.3 வீத பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இருந்தது. 2000இல் இது 4 வீதமாக குறைந்தது.

மேரி லெரின் பெரேரா, சந்திராணி பண்டார, சித்ரா மன்திலக்க, அமரா பியசீலி ரத்நாயக்க, ஆகியோர் ஐ.தே.க சார்பிலும் சோமாகுமாரி தென்னகோன், பவித்ரா வன்னியாராச்சி, சுமேதா ஜி.ஜயசேன, மல்லிகா டி மெல், பேரியல் அஸ்ரஃப், பொ.ஐ.மு சார்பிலும் அன்ஜான் உம்மா ஜே.வி.பி. சார்பிலும் இம்முறை தெரிவாகியுள்ளனர்.

இம்முறை ரொனி டி மெல் மற்றும் அவரது மனைவி மல்லிகா டி மெல் ஆகியோர் பாராளுமன்றத்தில் தம்பதிகளாக அங்கம் வகிக்கின்றனர். 60, 70களில் லெஸ்லி-விவியன், பிலிப்-குசுமா, ராஜரட்ன-குசுமா, இலங்கரத்ன-தமராகுமாரி போன்றவர்கள் தம்பதிகளாக பாராளுமன்றத்தில் இடம்பெற்றதை நினைவுபடுத்துகிறது.

ஆனால் பெண்கள், இன்னமும் அரசியல் செல்வாக்குள்ள ஆண் உறவுமுறைச் செல்வாக்கின் மூலம் அரசியலுக்கு வரவேண்டிய அவல நிலையை இவை உணர்த்துவதாக இருக்கிறது. (பார்க்க அட்டவணை) தகப்பன் அல்லது கணவனுக்குப் பதிலாக அல்லது அவர்களின் செல்வாக்கு காரணமாக அரசியலுக்குப் பிரவேசிப்பது என்பது நமது நாட்டில் ஆரம்பத்திலிருந்து இருந்து வருகிறது. பாராளுமன்ற பெண் பிரதிநிதித்துவத்தின் தொடக்கமே இப்படித்தான் இருந்தது. 1931இல் எட்லின் மொலமூரே தனது தகப்பனின் மரணத்தைத் தொடர்ந்து ருவன்வெல்ல தொகுதியில் இடம்பெற்ற இடைத் தேர்தலில் போட்டியிடச் செய்யப்பட்டார்.

தற்போதைய பெண்கள் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்நாயக்க தேர்தலின் போது அவரது கணவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது இடத்துக்குப் போட்டியாளராக நிறுத்தப்பட்டதன் மூலமே அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டார்.

இம்முறை ஆண் அரசியல் உறவுமுறை செல்வாக்கு இன்றி புதிதாக பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களில் முக்கியமானவர் சித்ரா மன்திலக்க. கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தெரிவான இவர் ஒரு ஆசிரியராகவும், தொண்டர் அமைப்புகளில் நீண்டகாலமாக சேவையாற்றியவர். மேலும், 1993இல் இவர் மத்திய மாகாண சபை உறுப்பினராக தெரிவானார். மீண்டும் 1999இல் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் தெரிவானதோடு எதிர்கட்சித் தலைவியாகவும் தெரிவானார். இலங்கையிலேயே முதற் தடவையாக எதிர்கட்சித் தலைவியாக மாகாண சபையொன்றுக்கு தெரிவான முதல் பெண் இவர்.

### 75 வருடங்களின் பின்னும்

காலனித்துவ காலகட்டத்தில் டொனமூர் குழுவின் சிபாரிசின் பேரில் 1931இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட போது பெண்களுக்கும் சேர்த்தே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது. பெண்களும் ஒரே நேரத்தில் வாக்குரிமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னால் பெண்களின் நிறுவனமயப்பட்ட போராட்டம் இருந்தது.

1925இல் இலங்கை தேசிய காங்கிரசில் அங்கமாக இருந்த மல்லிகா குலங்கன சமித்திய என்கிற அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி எசிலின் தோமஸ் பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமையையாவது வழங்குமாறு கோரியிருந்தார். கிழக்கு மாகாண சட்டசபை பிரதிநிதியாக இருந்த ஈ.ஆர்.தம்பிமுத்து 1920ஓகஸ்ட் 13இல் வாக்குரிமையை பயன்படுத்தவதில் பால்வேறுபாடு காரணமாக உள்ள தடைகளை அகற்றுமாறு கோரியிருந்தார். 1927இல் (Women Franchise Union) பெண்கள் வாக்குரிமைச் சங்கம் அமைக்கப்பட்டது. 1928 ஜனவரி 14 அன்று இவர்கள் டொனமூர் குழுவின் முன் சாட்சியமளித்தனர்.

பெண்களுக்கான வாககுரிமையை அடிப்படையாக வைத்து பெண்கள் வாக்குரிமைச் சங்கம் 75 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த 75 வருடங்களின் பின்னும் பிரதிநிதித்துவத்துக்காகப் போராடும் நிலையே இருக்கிறது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்ட முதன்மை நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்கிய போதும் பிரதிநிதித்துவமானது 75 வருடங்களின் பின்னும் 5 வீதத்தை தாண்ட முடியாத அவல நிலை தான் இன்னமும் காணப்படுகிறது.

சமீப காலமாக பெண்கள் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்நாயக்கா, மற்றும் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொரகொட போன்றோர் வெளியிட்ட பேட்டிகள், விசேட செய்தியாளர் மாநாடு என்பவற்றின் போது பெண்களின் வீதத்தை அதிகரிக்க கரிசனை கொள்வதாக வாய்ச்சவடால் விட்டவண்ணமிருக்கின்றனர். குறிப்பாக அவர்கள் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களில் 20 வீத பெண் பிரதிநிதித்துவத்திற்கு இடம் வழங்கப்படும் என்கின்றனர். உள்ளூராட்சி மன்றங்களில் 2 வீதம் கூட பெண்கள் இல்லை.

"இளைஞர் ஆணைக்குழு சிபாரிசின்படி 40 வீத இளைஞர்கள் (18-35 வயதுக்குட்பட்ட) வேட்பாளர் பட்டியலில் இருத்தல் அவசியம். அதில் 50 வீதத்தை அதாவது 20 வீதம் பெண்கள் உள்ளடக்கப்படுவார்கள்" என்கின்றனர் இவர்கள். இது மொத்தத்தில் மோசடியாகும். சனத்தொகையில் 50 வீதத்தைக் கொண்ட பெண்களுக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்திலிருந்து 20 வீதத்தை மட்டும் தான் வழங்கமுடியும் என்கிற முறைமையைக் கொண்டுவர எத்தனிக்கும் இந்த போக்கு குறித்து எந்த பெண்கள் அமைப்பும் இது வரை கவலைபட்டதாகத் தெரியவில்லை.

மேலும் 1997 மற்றும் 1999 காலப்பகுதிகளில் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இந்த 20வீத பிரதிநிதித்துவ வாக்குறுதியை அளித்தும் கூட அதனைக் கடந்த தேர்தலில் நிறைவேற்றவில்லையே.

இறுதியாக நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில் 10 பேர் தெரிவு செய்யப்பட்டது கூட தேர்தலின் மூலமாகத் தான். 1960க்குப் பின் முதற் தடவையாக நியமன உறுப்பினர்ளாக பெண்கள் தெரிவு செய்யப்படாதது இம்முறை தான். தேசியப்பட்டியலின் மூலம் இம்முறை பெண்கள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. பெண்களின் பிரதிநிதித்துவத்தில் அக்கறை கொண்ட கட்சிகளாக இருந்திருந்தால் இந்தப் பெரிய கட்சிகள் முதலில் இதனை ஓரளவு சரிக்கட்ட தேசியப் பட்டியலை பயன்படுத்தியிருக்க முடியும். அமைச்சரவை அந்தஸ்து கூட ஒரே ஒரு பெண்ணுக்குத் தான் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் பெண்கள் விவகார அமைச்சு என்பது கவனிக்கத்தக்கது. சந்திரிகா அமைச்சரவை தற்போதைய நிலைமையை விட மேல் எனலாம்.

### அமைச்சரவையில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| | | |
|---|---|---|
| 1947 | 13 | 0 |
| 1942 | 13 | 0 |
| 1956 | 12 | 1 |
| 1959 தஹநாயக்க | 1.4 | 1 |
| 1960 மார்ச் | 07 | 0 |
| 1960 யூலை | 09 | 1 |
| 1965 | 16 | 0 |
| 1970 | 19 | 1 |
| 1977 | 22 | 1 |
| 1978 பிரேமதாச | 25 | 1 |
| 1989 விஜேதுங்க | 21 | 1 |
| 1993 ரணில் | 23 | 1 |
| 1994 சந்திரிகா | 20 | 3 |
| 1994 சிறிமாவோ | 20 | 3 |
| 2001 | 25 | 1 |

### 12வது பாராளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம்

| | | | பிரவேசிக்க துணைநின்ற ஆண் உறவுமுறைச்செல்வாக்கு | |
|---|---|---|---|---|
| பெண் உறுப்பினர் | கட்சி | மாவட்டம் | ஆண் | உறவுமுறை |
| மேரி லெரின் பெரேரா | ஐ.தே.க. | புத்தளம் | | |
| சந்திராணி பண்டார | ஐ.தே.க. | அனுராதபுரம் | சந்திரா பண்டார | தகப்பன் |
| சித்ரா மன்திலக்க | ஐ.தே.க. | கண்டி | | |
| அமரா பியசீலி ரத்நாயக்க | ஐ.தே.க. | குருநாகல் | விமலரத்ன | கணவன் |
| சோமாகுமாரி தென்னகோன் | பொ.ஐ.மு. | குருநாகல் | | |
| பவித்ரா வன்னியாராச்சி | பொ.ஐ.மு | ரத்தினபுரி | வன்னியாராச்சி | தகப்பன் |
| சுமேதா ஜி.ஜயசேன | பொ.ஐ.மு. | மொனறாகலை | சுனேதா | கணவன் |
| மல்லிகா டி மெல் | பொ.ஐ.மு. | மாத்தறை | ரொனிடிமெல் | கணவன் |
| பேரியல் அஸ்ரப் | பொ.ஐ.மு. | திகாமடுல்ல | அஸ்ரப் | கணவன் |
| அன்ஜன் உம்மா | ஜே.வி.பி. | கம்பஹா | | |

### பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்

| | | | |
|---|---|---|---|
| 1947 | 95 | 2 | 2.1 |
| 1952 | 95 | 2 | 2.1 |
| 1956 | 95 | 3 | 3.1 |
| 1960 மார்ச் | 151 | 3 | 2 |
| 1960 யூலை | 151 | 2 | 1.3 |
| 1965 | 151 | 4 | 2.6 |
| 1970 | 151 | 6 | 4 |
| 1977 | 168 | 8 | 4.8 |
| 1989 | 225 | 12 | 5.3 |
| 1994 | 225 | 12 | 5.3 |
| 2000 | 225 | 9 | 4 |
| 2001 | 225 | 10 | 4.4 |


பவித்ரா


அன்ஜான் உம்மா


சோமாகுமாரி


பேரியல் அஸ்ரஃப்


மல்லிகா டி மெல்


அமரா பியசீலி


மேரி லெரின்


சுமேதா டி ஜயசேன


சந்திராணி பண்டார


சித்ரா மான்திலக்க

# வாசகர் செ(ா)ல்லடி

## நிகரிக்கு வாழ்த்துக்கள்

நிகரி பார்க்கக் கிடைத்தது. சந்தோசம். 90ஆம் ஆண்டு வீரகேசரி, தினகரன் என்ற இரண்டே இரண்டு நாளேடுகளைத் தவிர வேறு பத்திரிகைகள் தமிழில் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து அப்போது உதயன், ஈழநாதம் மற்றும் ஈழநாடு என்பன வெளிவந்ததாக நினைவு. அன்றைய காலகட்டத்தில் சரிநிகரின் வருகை அரசியல் பத்திரிகை உலகிற்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது.

ஆனால் இன்று பத்து வருடங்களுக்குப் பின்னரும் கொழும்பில் இருந்து நான்கு நாளேடுகளும் (வீரகேசரி, தினகரன், தினக்குரல், சுடரொளி), யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு நாளேடுகளும் (உதயன், வலம்புரி), மட்டக்களப்பில் இருந்து ஒரு நாளேடும் வெளிவரும் இன்றைய சூழ்நிலையில் கூட சரிநிகர் போன்ற ஒரு பத்திரிகைக்கு இடம் இருந்தே வருகிறது. இடையில் வெளியான தினமுரசு மற்றும் ஆதவனால் கூட அந்த இடத்தை நிரப்ப முடியவில்லை. நிகரி முதல் பத்திரிகையிலேயே அந்த இடத்தை நிரப்பும் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

வாழ்த்துக்கள்

குமரன், கொழும்பு-06

## வரலாற்றுக் குறிப்பு இது !

ரணிலின் பேச்சு: கீறல் விழுகிறதா? நல்லதொரு கட்டுரை. பெரும்பாலான பத்திரிகைகள் ரணிலின் பாராளுமன்றப் பேச்சை ஆஹா ஓஹோ எனப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ரணிலின் பாராளுமன்றப் பேச்சுப் பற்றிய ஒரு சரியான பார்வையை அக்கட்டுரை தருகிறது. பின்னாளில் ரணில் எப்படி மாறப் போகிறார் என அது சுட்டிக்காட்டுகிறது. எங்களைப் போன்ற வாசகர்கள் மட்டுமல்ல மற்றப் பத்திரிகையாளர்களும் குறித்துக் கொள்ள வேண்டிய பத்தி இது.

ரஜீவகுமார், கொட்டாஞ்சேனை

## அவசியமான கட்டுரை..!

டி.சிவராமின் கட்டுரை மேற்குலகின் குறிப்பாக அமெரிக்கா சார்ந்த மேற்குலகின் அரசியலை அம்பலமாக்குகிறது. ஏகாதிபத்தியம் ஏகாதிபத்தியம் என்று வாய்கிழியக் கத்துபவர்கள் கூடப் பார்க்க மறந்த பார்வை அது. மேற்கின் அரசியல் நலன்கள் எவ்வாறெல்லாம் தேசிய விடுதலை இயக்கங்களைச் சீரழித்தது என்று புரிந்து கொள்ள இவ்வாறான கட்டுரைகள் அவசியம். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க சிவராம் சொல்வதைப் போல் மதிநுட்பமும் மரபுவழிப்படையும் அவசியம். இவ்வாறான கட்டுரைகள் அவசியம். அத்தோடு இலக்கை அடைவதற்கான சரியான மார்க்கமும் அவசியம் என்பதையும் சிவராம் சொல்லி இருந்தால் கட்டுரை முழுமை பெற்றிருக்கும். சரியான அரசியல் வழிமுறை இல்லாமல் சரியான இலக்கை அடைய முடியாது என்பது எனது அபிப்பிராயம்.

முகுந்தன், சொய்சாபுர தொடர்மாடி, இரத்மலானை

## அறிமுகம் நன்று !

சல்மா பற்றிய அறிமுகம் நன்றாக இருந்தது. முஸ்லிம் பெண்ணின் மன உணர்வுகளை மிக வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார். என்னால் ஒரு சல்மாவாக முடியவில்லையே என்று ஏக்கமாக இருக்கிறது. இலங்கையிலும் முஸ்லிம் பெண்களாகிய எங்களுடைய வாழ்வு இதற்கும் மேலாக இல்லைத் தான். இவ்வாறானவர்களை அறிமுகப்படுத்தி வைத்தாலே பிரயோசனமானது. தொடர்வீர்கள் என்று நம்புகிறேன்.

நிசானா, தெமட்டக்கொட வீதி, தெமட்டக்கொட

## எப்படிப் புரிந்துகொள்வது..?

சிவராமின் கட்டுரையில் அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் புலிகளைத் தடை செய்யக் காரணம் அவற்றின் நலன்களே தவிர, கதிர்காமர் காரணமல்ல என்று குறிப்பிடுகிறார். மேற்குலகுக்கு சிவராம் குறிப்பிடும் அத்தனை நலன்களும் இருந்த போதும் புலிகளைத் தடை செய்யாமலே அதனைக் காரியமாக்கியிருக்கலாம் அல்லவா? புலிகளும் ஒன்றும் மேற்குலகுக்கு விரோதமானவர்களாக தங்களை வெளிப்படுத்திக் கொண்டதில்லையே. இன்னும் செப்.11இல் அமெரிக்கா தாக்கப்பட்ட போது அனுதாபம் தெரிவித்தவர்கள் அல்லவா? அது மட்டுமல்லாமல் புலிகள் தங்களை ஒரு போதும் ஒடுக்கப்பட்ட மக்களுடன் அல்லது அவர்களுடைய போராட்டங்களுடன் கைகோர்ப்பவர்களாக அடையாளம் காட்டியதில்லை. கடந்த மாவீரர் தினப் பேச்சும் நாங்கள் விடுதலைப் போராளிகள். எங்களைத் தடை செய்வது தவறு. பயங்கரவாதிகள் இருக்கத் தான் செய்கிறார்கள் அவர்களை எங்களிலிருந்து வேறுபடுத்தித் தடை செய்யுங்கள் என்ற பாணியிலே அல்லவா அமைந்திருந்தது. அப்படியானால் சிவராமின் கட்டுரை பலவீனமானதாகிறதே. உண்மையில் இந்த இடத்தில் தான் அமெரிக்காவின் நலன்களை தற்போது உயர்த்திப் பிடிப்பதில் புலிகளை விட சிறிலங்கா அரசு முனைப்புடன் இருக்கிறது. நாளையே சிறிலங்கா அரசைவிட புலிகள் மேற்கின் நலன்களை உயர்த்திப் பிடிப்பார்களாயின் புலிகள் மீதான தடையை அகற்றி அங்கீகரிக்க மாட்டார்கள் என்று சொல்வதற்கில்லை.

இந்த இடத்தில் தான் கதிர்காமரின் முக்கியத்துவம் வருகிறது. புலிகளைத் தடை செய்ய அவர் ஆற்றிய பணி வருகிறது என்று நினைக்கிறேன். அதனால் தான் பொ.ஐ.மு. அரசாங்கம் போய்விட்டாலும் ஐ.தே.மு அரசாங்கம் கடந்த நிகரியில் குறிப்பிட்டுள்ளதைப் போல சகல வசதிகளும் செய்து கொடுத்து பேணிப் பராமரித்து வருகிறது. நாளை ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தாலும் கதிர்காமரின் இடத்திற்கு ஒரு போதும் ஆபத்து வராது. அவர் தேசிய தலைவராக மதிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை என்கிறேன்.

செல்வநாயகம், கொழும்பு-04.

## தோற்றுத்தான்...

(முதலாம் பக்கத் தொடர்..)

இதன் முதல் கட்டமாக கடந்த செவ்வாய்க் கிழமை மாலை கோட்டே ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவு மாணவ அமைப்பில் அங்கம் வகிக்கும் ஐநூறுக்கும் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வெளியே பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். வாகனப் போக்குவரத்தையும் தடுத்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை எதிர்த்து தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தத் தீர்மானித்திருக்கும் அதே நேரம் ஏழு சிங்கள தேசிய அமைப்புக்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாது என அரசாங்கத்தை வலியுறுத்தி உள்ளன.

புலிகள் தங்களின் பயங்கரவாத நடவடிக்கையைக் கைவிடும் வரை அவர்கள் மீதான தடையை எந்த ரூபத்திலும் நீக்கக் கூடாது என்று தேசிய சங்கசபை, தேசிய இணைப்புக் குழு, சிங்கள வீரவிதான, சிங்கள ஜாதிக சங்கமய முதலிய ஏழு அமைப்புக்கள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளன.

இந்த அமைப்புக்களைச் சேர்ந்த புத்த பிக்குகளும் கண்டனக் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

1957ம் ஆண்டில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பிரதமர் எஸ்டபிள்யூ.ஆர்.டி பண்டார நாயக்க தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் பேச்சு நடத்தி ஒப்பந்தம் செய்தார். இதை எதிர்த்து ஜே.ஆர்.ஜயவர்தன கண்டி யாத்திரை புறப்பட்டார். பண்டாரநாயக்க கட்சிக்குள்ளேயே அமைச்சராக இருந்த விமலா விஜயவர்தனாவும் மற்றும் சிலரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். புத்த பிக்குகள் எதிர்த்தனர். ஒப்பந்தத்தை பண்டார நாயக்காவே கிழித்தெறிந்தார்.

1965ஆம் ஆண்டு செய்த டட்லி சேனாநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தமும் வெளியில் இருந்து கிளம்பிய எதிர்ப்பு மட்டுமல்லாது ஆளும் கட்சிக்குள் கிளம்பிய எதிர்ப்பினாலும் கிழித்தெறியப்பட்டது.


இப்பொழுதும் ஆளும் கட்சிக்கு ஆதரவு மாணவர் அமைப்புக் குழுக்களுடனும் புத்த பிக்குகளையும் சேர்ந்த குழுக்களுடனும் அரசு புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு எதிர்ப்பு கிளப்பப் படுகின்றது. இதே சமயம் முன்னர் ஆயுதப் புரட்சியினால் ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முனைந்து தோல்வி அடைந்த ஜே.வி.பியும் எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தூண்டி அமைதியைக் குலைக்க முன் வந்துள்ளது.

கடந்த ஆட்சியின் கடைசிக் காலத்தில் அதற்கு கைகொடுத்து உதவிய ஜே.வி.பி. இப்பொழுது கிளர்ச்சி செய்து சமாதான முயற்சிகளைக் குலைக்க வழிதேடும் சமயத்தில் எமது ஜனாதிபதி அதிகாரத்தில் இன்னும் இருபத்தைந்து வீத அதிகாரத்தை தான் பாவிக்கவில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

சமாதான முயற்சிகள் நம்பிக்கை அளித்துவரும் அதே சமயம் சமாதான முயற்சிகளை குழப்பும் முயற்சிகளும் தலை தூக்கி வருவது நல்ல அறிகுறியாகத் தென்பட-வில்லை. நிரந்தர சமாதானத்தை நீடிக்க வைக்கும் முயற்சி வெற்றியளிக்குமா, சமாதானம் நீடிக்குமா, சமாதானத்தைக் குழப்பும் முயற்சி வெற்றி பெறுமா? பிரதமர் ரணில் உறுதியுடன் நின்று பிடிப்பாரா?

## அமைதி வழியில்....

3ஆம் பக்க பேட்டி தொடர்ச்சி...



**இந்தியாவில் பேச்சு நடத்த நீங்கள் விருப்பம் தெரிவித்திருந்தீர்கள் . ஆனால் இந்தியா இதை மறுத்துள்ளதாக பல செய்திகள் தெரிவிக்கின்றன. நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

இது ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக வருவதை நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் ஒரு மனிதாபிமான நோக்கோடு தான் இந்தக் கோரிக்கையை விடுத்தோம். அதாவது எமது அமைதி சமாதான முன்னெடுப்புகளை முன் கொண்டு செல்வதற்கு, எமது அரசியல் ஆலோசகரான அன்டன் பாலசிங்கம் அவர்கள் வந்து எம்மோடு தகவல்களை பரிமாற்றிக் கொள்ளக் கூடிய வகையில் ஓர் அயல் நாட்டு உதவி இருக்குமாக இருந்தால் இந்த அமைதி முயற்சிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லலாம் என்பது எமது மனிதாபிமான வேண்டுகோள். இதையொரு அரசியல் சர்சைக்குரிய பிரச்சினையாகக் கொண்டு வருவதை நாம் விரும்பவில்லை. இந்தியாவும் இதை அதிகாரபூர்வமாக மறுத்ததாகவும் எமக்குத் தெரியவில்லை. ஆகவே இதை ஒரு பிரச்சினையான விடயமாக ஊடக அரசியல் திரிபுபடுத்துவது தவறான விடயம்.

**கடந்த காலங்களில் போர் நிறுத்தம் வந்திருக்கின்றது. அரசியல் பேச்சுவார்த்தைகள் வந்திருக்கின்றது. ஆனால் அவை இடையில் முறிந்து மீண்டும் மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. இம்முறையும் அவ்வாறு நடந்து விடுமோ என்ற பயம் மக்களிடையே இருக்கின்றது. அதற்கு என்ன சொல்லப் போகின்றீர்கள்? அவ்வாறு நடக்கும் என எண்ணுகின்றீர்களா?**

இது எமது மக்களிடையே இருக்கும் தவிர்க்க முடியாத சந்தேகம். கடந்த காலங்களில் சமாதான கோஷங்கள், சமாதான உடன் படிக்கைகள் எல்லாம் இழுத்தடிக்கப்பட்டு முகம் மாறப்பட்டும் இருக்கின்றது. ஆகவே கடந்த பல சகாப்தங்களாக இருந்த வரலாற்றின் அடிப்படையில் மக்கள் சந்தேகம் கொள்வது இயல்பு. புதிய அரசாங்கம் இனி நம்பிக்கையை கட்டியெழுப்பும் விதத்தில் தான் எமது மக்கள் மனதில் இருக்கும் சந்தேகங்களை நீக்கலாம்.

**பேச்சுவார்த்தைக் காலத்தைப் பயன்படுத்தி புலிகள் தம்மை மீள கட்டியமைத்துக் கொள்கின்றார்கள். அதற்காகத்தான் பேச்சுவார்த்தைக் காலத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்ற ஒரு கருத்து தெற்கில் இருக்கின்றது. அவர்களுக்கு நீங்கள் சொல்லும் பதில் என்ன?**

இது ஓர் தவறான கணிப்பு. ஏனெனில் நாம் பெற்ற வெற்றியென்பது, போர் நிறுத்த காலத்தில் ஏற்படுத்திக் கொண்ட வெற்றியல்ல. முல்லைத்தீவு மீட்பு, ஜயசிகுறு வெற்றி, வன்னி மீட்பு, ஆனையிறவு வெற்றி. இது போன்ற பல வெற்றிகளுக்கு பின்னால் போர் நிறுத்தம் இருந்ததில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களின் ஆதரவு எப்போதுமே இருந்திருக்கின்றது. அது அமைதிக் காலத்திலாயினும், போர் காலத்திலாயினும் எமது மக்களின் முழுமையாக பங்களிப்புகள் எமக்கு உண்டு. எனவே இது ஏற்கக் கூடிய கருத்தல்ல. இது நிச்சயமாக தமிழர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் ஒரு பிரிவினரின் கருத்துருவாக்கம் என்றே நான் நினைக்கிறேன்.

**உங்களுடைய போராட்டம் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு மட்டும் தானா? மலையக மக்களுக்கு இதில் எந்தப் பங்கும் இல்லையா? அவர்கள் குறித்து நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? அவர்களது நிலை குறித்து நீங்கள் ஏதும் அபிப்பிராயம் வைத்திருக்கின்றீர்களா?**

நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு. அதற்கான சூழல் எட்டப்படும் நிலையில் மலையக மக்களுக்கும் ஓர் சுமுகமான, அவர்களது உரிமை தொடர்பான கௌரவமான நிலைமை தோன்றும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

**இந்தப் பேச்சு வார்த்தையில் நோர்வே அரசாங்கம் பங்கெடுக்க இருக்கின்றது. குறிப்பாக மூன்றாம் தரப்பாக பங்கெடுக்க இருக்கின்றது. இது ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தும் அல்லது கடந்த காலங்களைப் போன்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியடையாமல் பாதுகாக்க இது ஒரு வாய்ப்பாக அமையும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

கடந்த காலங்களில் நாம் பேசிய போதெல்லாம் ஏமாற்றப்பட்டு, குழப்பப்பட்டது வரலாறு. இம்முறை ஓர் சர்வதேச நாடு இதில் பங்கெடுப்பதால் இதனை இலகுவாக தூக்கியெறியக் கூடிய வாய்ப்பு குறைவு என்றே நான் நினைக்கின்றேன்.

Registred as a Newspaper

நிகரி
NIHARI

83, பிலியந்தலை வீதி, மஹரகம
தொலைபேசி : 851672, 851673 தொலைமடல் 851814
மின்னஞ்சல் : nihari02@yahoo.com.uk

# போரும் சமாதானமும்!

நமது நாட்டுக்கும் சமாதானத்திற்கும் அப்படி என்ன ஒரு எட்டாப் பொருத்தமோ தெரியவில்லை.

ஏதாவது ஒரு பிரச்சினை வந்து அதைக் குழப்பி விடும்.

ஒன்றில் சமாதானம் வேண்டும் என்று உயர்த்திப் பேசி அதில் இறங்கியவர்களுக்கே அதில் திடீரென்று நம்பிக்கை இல்லாமல் போய் விடும்.

அல்லது, சமாதானம் இந்த நாட்டுக்கு முக்கியமில்லை, நாட்டிலே எந்தச் சிக்கலும் இல்லாமல், யாருமே கேள்வி கேட்காத விதத்தில் ஆட்சியை நடாத்துவதற்கு போரே சிறந்தது என்ற ஞானம் அவர்களுக்கு உதித்துவிடும்.

தப்பித்தவறி அவர்கள் இன்னமும் சமாதானத்தில் விடாப்பிடியாக இருந்தாலோ, சமாதானம் என்று எதனைச் சொன்னீர், அது இல்லைச் சமாதானம் என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்க சிலர் உதித்து விடுவார்கள்.

அவர்களது தத்துவ விளக்கத்திற்குப் பிறகு சமாதானம் பற்றிப் பேசியவர்களுக்கு நாம் போரைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருக்கிறோம் என்பது போன்ற ஒரு எண்ணம் எழுந்துவிடும்.

சந்திரிகா அரசாங்கம் சமாதானம் பற்றிப் பேசத் தொடங்கிய போது எல்லாம் நல்லபடியாகவே இருப்பதாகத் தான் தோன்றியது.

பிறகு, 'சமாதானம், ஆம், ஜனநாயகத்துடன்" என்று அது சுருதி மாறிய போது என்ன நடக்கப் போகிறதோ என்று அச்சம் எழுந்தது.

அதன் பிறகு போர் சமாதானத்தை அடைவதற்கான முன் நிபந்தனை என்றாகிப் போயிற்று.

ஐயாயிரம் அடிக்கு மேலான உயரத்தில் இருந்தபடி குறிபிசகாமல் புலிகளின் இலக்குகளை மட்டும் தாக்குகின்ற 'மக்கள் யுத்தத்தை" அது நடாத்துவதாக 'மனித உரிமையாளர்களும் 'சேட்டிபிக்கட்" கொடுத்தார்கள்.

விளைவுதான், நமக்கெல்லாம் தெரியுமே!

போர் மூலம் சமாதானம் என்ற முழக்கத்தில் முதல் பலியானது சமாதானம், பிறகு ஜனநாயகம், அதற்குப் பிறகு இருந்த மக்கள் பலியாக முன்பாக ஆட்சி மாற்றம் வந்தது.

இப்போது ரணிலில் சமாதான முயற்சியை கேள்வி கேட்க ஜே.வி.பியும், மாணவர்களும் முன்வந்திருக்கிறார்கள்.

ரணில் சொல்லும் போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை எல்லாம் சமாதானத்திற்கான படிகள் அல்ல, அது நாட்டை நிரந்தர அழிவுக்கு இட்டுச் செல்லும்"வழி என்று கூறுகிறார்கள் அவர்கள்.

ஆர்ப்பாட்டம் ஊர்வலம் கூட்டம் என்று அவர்களது முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சரி, அவர்கள் என்ன தான் சொல்கிறார்கள் என்று பார்த்தால், புலிகளுடனான போரை நிறுத்துவதும், பேச்சுவார்த்தை நடாத்தப் போவதும் சமாதானத்தை தராதாம்.

புலிகளை அடக்கி ஒடுக்கி விட்டால் தான் சமாதானம் சாத்தியமாகுமாம்.

ஆக, அவர்களும் சமாதானம் பற்றித்தான் பேசுகிறார்கள்.

போகிற போக்கைப் பார்த்தால், விரைவிலேயே ரணிலுக்கும் ஒரு வேளை அவர்கள் சொல்வது தான் சமாதானமாக இருக்குமோ என்ற சந்தேகம் வந்தாலும் வந்துவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது.

ஏற்கெனவே அவரது கொள்கைப் பிரகடனப் பேச்சில் மெல்லிய தடுமாற்றம் தெரிந்தது. இந்த தடுமாற்றம் ஜே.வி.பிக்கும் மற்றவர்களுக்கும் தமது தாக்குதலை நடாத்தி வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசாங்கத்தின் ஆதரவு மாணவர் அமைப்புத்தான் இப்போது பேச்சுவார்த்தை தேவையில்லை, யுத்த நிறுத்தம் அவசியமில்லை என்று தீவிரமாக சுத்தத் தொடங்கி இருக்கிறது.

இந்த மாணவர் அமைப்பை கட்டுப்படுத்த அரசாங்கத்தின் கையில் வைத்திருக்கும் கட்சிக்கும் முடியும் என்று முழுமையாக நம்ப முடியவில்லை.

ஆக, இம்முறையும் அந்த எட்டாப் பொருத்தம் பலித்துவிடுமோ தெரியவில்லை.

ரணில் விக்கிரமசிங்க என்ன சொல்லப் போகிறார்? அவர் 'ஆழமாகவும் தீவிரமாகவும், நிதானமாகவும்" சிந்தித்து முடிவு செய்வதற்கு முன்பாக வேறேதாவது நடந்து விட மாட்டாதா?

தெரியவில்லை!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.

சமாதானத்தினை நோக்கி நகர்வுக்கு இந்த மண்ணில் வாய்த்திருக்கிற இன்னொரு அரிய சந்தர்ப்பம் இது. இதைக் கைநழுவ விட்டால் இன்னொரு தடவை சமாதானம் பற்றி பேசுவதற்கான வாய்ப்பு இனி எப்போது வருமென்றே சொல்ல முடியாது!

இதை புதிய அரசாங்கத்தினர் கவனமெடுப்பது மிக மிக முக்கியம்.

ஜே.வி.பிக்கும், எதிர்கட்சிக்கும், இன்னும் சிலருக்கும் யுத்தம் பெற்றுக் கொடுத்த இலாபத்தை விட்டுவிட முடியாமல் இருக்கிறது.

அதனால் யுத்தம் யுத்தம் என்று கத்துகிறார்கள்.

சமாதானத்துக்கும் இந்தக் கதி வந்து விடும். அதை வைத்துப் பிழைக்கவும் சிலர் வந்து விடுவார்கள்.

பிறகு அவர்கள் சமாதானம் சமாதானம் என்று கத்திக் கொண்டே இருப்பார்கள்.

நடைமுறையில் சமாதானம் வரக்கூடாது என்பதற்காக! எப்படியோ, இதையெல்லாம் புதிய அரசாங்கத்தினர் புரிந்து கொண்டால் சரி.

அப்போது தான் சமாதானத்திற்கான வாய்ப்பு கொஞ்சமாவது கிடைக்கும் புரிந்து கொள்வார்களா?

# போர் நின்றால் 'போர்' வெடிக்குமோ ?

கந்தகப் புகை கக்கிய இடங்களெல்லாம் களைப்படைந்தோ இல்லை வேறு காரணத்துக்காகவோ அமைந்தியடைந்திருக்கின்ற வேளையில் எவருமே எதிர்பாராத வகையில், நீறு பூத்த நெருப்பாய் இருந்து வந்த இராணுவ, பொலிஸ் பிணக்கு பூகம்பமாய் வெடித்திருக்கிறது. எனினும் அரச தரப்பு எடுத்த அவசர நடவடிக்கையால் தீப்பிழம்பபு சிதறாமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. கட்டுப்படுத்தல் தொடர்ந்தும் பேணப்படுமா? அல்லது காலநேரம் பொறுத்து கட்டவிழ்படுமா? என்பதற்கான விடை கூறுவது சற்றுக் கடினமே.

இதற்கான பின்னணியை சற்று நோக்குவோம்.

டிசம்பர் 5 பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு சகல பகுதியையும் போல் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கண்டி மாவட்டத்தில் உள்ள உடத்தவின்ன பகுதியில் அன்றைய ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தனது அநியாயங்களுக்கு தக்க பரிசு தோல்வி என்பதை அறிந்து கடந்த தேர்தல்களில் செய்தது போல், இம்முறையும் தோல்வியை எதிர்கொள்ளாமல் தப்புவதற்காக தனது இரு புதல்வர்களும் தலைமை வகிக்கும் கொடூர கும்பலை கொண்டு கள்ளவாக்குப்போட எத்தனித்திருக்கிறார். எனினும் அங்கிருந்த முஸ்லீம் இளைஞர்களின் மிகக்கடுமையான எதிர்ப்பினால் அது கைகூடாமல் போகவே தடுத்தவர்களை நயவஞ்சகமான முறையில் பழி தீர்த்தார்கள். ஆட்சி மாற்றம் காரணமாக அதனை மூடிமறைக்கவும் மூடியாமல் போனது. விடயம் பூதகரமானது. சந்தேக நபர்களை சட்டத்தின் முன் நிறுத்த பொலிஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது தலைமை தாங்கியோர் தலைமறைவாக ஏனையவர்கள் ஆதாரங்களுடன் கைதானார்கள். கைதானவர்களில் 36 பேர் குருநாகல் போயகன்ன படை முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் என்பது தெரியவந்தது.

மேலும் விசாரணைகளின் போது வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 300 இராணுவத்தினர் அளவில் அட்டகாசங்கள் புரிவதற்காக கண்டிக்கு குறித்த அமைச்சரால் அழைக்கப்பட்டார்கள் என்பது தெரியவந்தது. இக்கைதோடுதான் பொலிஸ், இராணுவத்துக்கிடையில் பிணக்கு முளைவிட்டது எனலாம். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளின் போது மீண்டும், மீண்டும் பொலிஸாருடன் இராணுவத்துக்கு முறுகல் நிலை விரிவடைய விரிசலும் அதிகரித்ததுடன் விசாரணைகளுக்கு சில இராணுவ உயர் அதிகாரிகளும் தடையாய் இருந்தனர்.

இது இவ்வாறு இருக்க மற்றொரு முனையில் இன்னொரு பூகம்பம் வெடிக்க ஹொரணை, அத்துருகிரிய மில்லெனியம் சிற்றிப் பகுதியில் கண்டெடுத்த ஆயுதத் தளபாடங்கள் காரணமாயின. அதனடிப்படையில் அது தொடர்பாக ஒரு இராணுவ உயரதிகாரி உட்பட 6 இராணுவத்தினரும் தமிழமைப்பைச் சார்ந்த ஒருவருமாக மொத்தம் 7 பேர் கைது செய்யப்பட்டனர். இதனால் இரு தரப்புக்குமிடையில் கடும் வாக்கு வாதங்கள் எழ முறுகல் நிலை மேலும் விரிவடைந்தது. பொலிஸ் தரப்பு அத்துருகிரியவில் கைப்பற்றப்பட்ட ஆயுதத் தளபாடங்கள் ரணில் விக்கிரமசிங்கவையும் ஏனைய முக்கிய ஐக்கிய தேசிய முன்னணி பிரமுகர்களையும் குறிவைத்த போது கைப்பற்றப்பட்டதாகவும் கூறுகிறது. மறுபுறம் இராணுவத் தரப்பு குறிப்பிட்ட சில காலமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை இலக்கு வைத்து தாக்கும் ஆழ ஊடுருவும் படையணியினை சார்ந்தோரே கைதுசெய்யப்பட்டனர் என்றும், இரகசியமாய் கட்டிக் காத்து வந்த விடயம் பொலிசாரின் அவசர நடவடிக்கையால் அம்பலத்துக்கு வந்து விட்டது என்றும் சொல்கின்றனர்.

பொலிசாரின் இக் கைது விடயம் அரச உயர் மட்டம் வரைசெல்ல காதோடு காது வைத்தாற் போல் போல் படையினர் விடுதலை செய்யப்பட்டனர். இதில் பொலிசாருக்கு பொறுப்பான உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மௌனம் காத்ததன் விடயம் புதிராகவே உள்ளது. பொலிசாரைப் பொறுத்தவரையில் 7 பேரின் விடுதலை கௌரவப் பிரச்சினையாக மாறியது. இவ்வாறு இரு சம்பவங்களும் அரச உயர் மட்டம் வரை செல்லும் பெரும் பிரச்சினைகளாக மாற இருதரப்பினருக்கும் இடையிலான முறுகல் நிலை விரிவடைந்து விரிசல் ஏற்பட ஒருவரை ஒருவர் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கியது எனலாம். இவ்வாறான நிலைமை கண்டிப் பகுதியில் மாத்திரம் தான் நிலவியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வேளையில் தான் கடந்த 23ம் திகதி புதன்கிழமை பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இலங்கை வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத வகையில் பெரும்மோதல் இடம் பெற்றுள்ளது. சட்டத்தையும், நாட்டையும் பாதுகாக்க வேண்டியவர்கள் நடு வீதியில் ஆயிரகணக்கான மக்கள் பார்த்திருக்க மோதியுள்ளார்கள். கைகலப்பு, துப்பாக்கிச் சூடு நடாத்தும் அளவுக்கு மாறி இறுதியில் புலிகள் புகுவார்கள் என்ற அச்சத்தில் இரு தரப்பும் இணைந்து போட்ட வீதித் தடைகளை உடைக்கும் அளவிற்கு விடயம் வியாபித்துள்ளது. மூன்று முறை மோதல் இடம்பெற்றுள்ளது. இராணுவத்தினர் பொலிசாரைத் தாக்க சீருடையில் பொல்லுகள், கம்பிகள், ஆயுதங்களுடன் வந்துள்ளமை பதிலளிக்க முடியாத பல வினாக்களை எழுப்பியுள்ளது. கண்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் விடயம் கட்டுப்படுத்தப்பட முடியாமல் அவரும் காயத்திற்குட்பட்டு இறுதியில் உயர் இராணுவ அதிகாரிகள் தலையிட்டு தீர்க்கும் அளவுக்குப் போய் விட்டது. பொது மக்கள் உட்பட இரு தரப்பிலுமாக பத்துப்பேர் காயமடைந்துள்ளனர். புனிதப் பிரதேசம் போர் பிரதேசமாய் காட்சியளித்துள்ளது. இவ்விடயம் இன்னொரு வினாவை எழுப்பவும் தவறவில்லை. அதாவது ஆட்சி மாற்ற அரசியல் பின்னணியா இதற்கு காரணம் என்பதாகும். பாதுகாப்பு பொறுப்புகள் இரு தரப்பினரின் கைகளில் உள்ள நிலையில் ஐ.தே.முன்னணியை கவிழ்ப்பதற்கான சதியாக இருக்கலாம் எனவும் ஐயப்பாடுகள் தோன்றின. இராணுவத்திற்கு கட்டளையிடும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளில் தான் இன்னும் உள்ளது. வாகனத்தை நிறுத்துவது தொடர்பான வாய்த்தகராறு பெரும் மோதலாய் வெடித்தது சிந்திக்க வைக்கின்ற விடயமாகவே உள்ளது. எது எப்படியோ?

தலதா மாளிகை மீது மக்கள் விடுதலை முன்னணி தாக்கியதை மறந்து அல்லது மறைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தலதா மாளிகை மீது மேற்கொண்ட தாக்குதலால் புனிதப் பிரதேசம் மாசுபட்டதாகவும் இதற்குப் பிராயச்சித்தம் இல்லை எனவும் கூறி வாய்ப்பிளந்து நிற்பவர்கள் புனிதப்பிரதேசத்துக்கு மிக அண்மித்து நடந்த இச்செயலுக்கு என்ன கூறப்போகிறார்கள்?

என்.சரவணனின்

இலங்கை:

பெண்களின் அரசியலும்
அரசியலின் பெண்களும்

நூல் அறிமுகமும் விமர்சனமும்

தலைமை
செல்வி திருச்சந்திரன்

ஆய்வுரை
கா.சிவத்தம்பி

நூல் விமர்சனம்
மேனகா கந்தசாமி

கருத்துரை
என்.சரவணன்

பதிப்புரை நன்றியுரை
எம்.பௌஸர்

பெப்ரவரி 3

கொழும்பு தமிழ்ச் சங்கம்
வெள்ளவத்தை - உருத்திரா மாவத்தை

மாலை 4.30

ஏற்பாடு : மூன்றாவது மனிதன்

இப்பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்சி) நிறுவனத்தால் மஹரகம பிலியந்தல வீதி 83ஆம் இலக்க ராவ அச்சகத்தில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது